விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 தை 18 செவ்வாய்க்கிழமை (31.01.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 043

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே

# போர்க்குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்!

## இதில் பேரம்பேச இடமில்லை – முதலமைச்சர்

(மன்னார்)

வன்னியில் இடம்பெற்ற யுத்தத்தின் போது இழைக்கப்பட்ட போர்க்குற்றங்கள் மீதான போர்க்குற்ற விசாரணை உரிய முறையில் சந்தேகங்களுக்கு இடமின்றி நீதியாக நடைபெற்று குற்றவாளிகள் கண்டறியப்படுவதுடன் அவர்களுக்கு தண்டனை வாங்கி கொடுக்க வேண்டும் என வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

(04-ம் பக்.)



## கோர விபத்தில் 3 சிறுவர்கள் பலி 10 பேர் காயம்



(கல்முனை)

கல்முனை - சாய்ந்தமருது பிரதான வீதியில் நேற்று திங்கட்கிழமை அதிகாலை வானும் இ.போ.ச பேருந்தும் மோதிய கோர விபத்தில் 3 சிறுவர்கள் ஸ்தலத்திலேயே பலியானதுடன் மேலும் 10 பேர் காயமடைந்துள்ளதாக கல்முனை பொலிஸார் தெரிவித்தனர்.

பாலமுனை-ஹுஸைனியா நகரைச் சேர்ந்த மரணமடைந்த சிறுவர்கள் மூவரும் பத்து வயதிற்

24ஆம் பக்கம் பார்க்க....

## பலசரக்கு கடையொன்றின் மீது பெற்றோல் குண்டு வீச்சு; இருவருக்கு வாள் வெட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ். நல்லூர் அரசடி வீதியில் உள்ள பலசரக்கு கடை ஒன்றின் மீது பெற்றோல் குண்டு தாக்குதலும் கடையில் நின்றிருந்தவர்கள் மீது வாள் வெட்டுத் தாக்குதலும் இடம்பெற்றுள்ளது. இந்த சம்பவத்தினால் நேற்று இரவு முழுவதும் நல்லூர் அரசடி வீதிப் பகுதியில் பதற்றம் நிலவியது.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு பெருமளவு பொலிஸார் வரவழைக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு, பொலிஸாரின் சோதனை

23ஆம் பக்கம் பார்க்க....

## மத்திய வங்கி மோசடியை மூடி மறைக்கும் நல்லாட்சி

### மகிந்த ராஜபக்ஷ குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டில் இடம்பெற்ற மிகப்பெரிய பகல் கொள்ளையான மத்திய வங்கி மோசடி தொடர்பான விசாரணைகளை மூடிமறைக்கும் செயற்பாட்டை

02ஆம் பக்கம் பார்க்க....

தரம் - 5
புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்
நாளைய வலம்புரியில்...

## ட்ரம்பின் நடவடிக்கைகளை சாதகமாக்க வேண்டும்!

### தயான் ஜயதிலக ஆலோசனை



(கொழும்பு)

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி டொனல்ட் ட்ரம்பினால் விடுக்கப்பட்டுள்ள தீர்மானங்களின் பயன்பாட்டை இலங்கையின் பக்கம் திருப்பிக் கொள்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்

23ஆம் பக்கம் பார்க்க....

## நாட்டை பிரிக்கபோவதாக மகிந்த தவறான கருத்து

### அமைச்சர் கிரியெல்ல விசனம்

(கொழும்பு)

புதிய யாப்பின் ஊடாக நாட்டை பிரிக்கப்போவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தவறான கருத்தை பரப்பிவருவதாக உயர் கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்

கண்டிக்கு நேற்று விஜயம் மேற்கொண்டிருந்த அவர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையில், 13 ஆவது திருத்தச் சட்டத்திற்கு அப்பால் சென்று தீர்வினை வழங்குவதற்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் தயாராக இருந்ததாகவும்

23ஆம் பக்கம் பார்க்க....

## கொலை அச்சுறுத்தல் வெறும் நாடகம்!

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனுக்கு உயிர் அச்சுறுத்தல் இருப்பதாக வெளியான செய்தி வெறும் நாடகமே என்று

23ஆம் பக்கம் பார்க்க....

## பாரிய இளைஞர் புரட்சி அரசாங்கத்தால் தடுப்பு

### உறுப்பினர் மயூரன் சாடல்

(யாழ்ப்பாணம்)

தமிழர் தாயக பகுதிகளில் பாரிய இளைஞர் புரட்சி ஒன்றினை தடுத்து நிறுத்தவே அரசாங்கத்தினால் திட்டமிடப்பட்டு வவுனியா உண்ணாவிரத போராட்டம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக வடமாகாண சபை உறுப்பினர் செந்தில்நாதன் மயூரன் தெரிவித்தார். இவ்விடயம் தொடர்பாக அவர் நேற்று திங்கட்கிழமை விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில்,

இறுதிக்கட்ட யுத்தத்தில் காணா

23ஆம் பக்கம் பார்க்க....

## அரசாங்கம் எம்மை பிளவுபடுத்தி அரசியல் தீர்வை இழுத்தடிக்கிறது

### மாயைக்குள் சிக்கிக் கொண்டோம் என்கிறார் வினோ

(மன்னார்)

கடந்த காலங்களை விட இன்று ஒரு நிலைமை இருக்கின்றது. இன்று இருக்கின்ற இந்த சுதந்திரம், இன்று நாங்கள் ஏதோ விடுதலை அடைந்து விட்டோம் என்ற ஒரு நிலைப்பாட்டிலே சிலர் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். ஆனால் அது உண்மை இல்லை. அது ஒரு மாயை என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். வினோநோகராதலிங்கம் தெரிவித்தார்.



23ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## PHARMACISTS (EXTERNAL) EXAMINATION COURSE
## மருந்தாளர் (வெளிவாரி) பரீட்சைக்கான பயிற்சி

**மேற்படி பரீட்சைக்கு தோற்றுவதற்குரிய குறைந்தபட்ச தகைமைகள்:-**

G.C.E O/L ஆங்கில பாடத்தில் சாதாரண சித்தி

G.C.E A/L இரசாயன பாடம் உட்பட மூன்று விஞ்ஞான பாடங்களில் சாதாரண சித்தி

**வயது:**-எல்லை இல்லை.

**இடம்:**-யாழ்ப்பாண கல்லூரி (வெளிவாரி பட்டப்படிப்பு) 464, ஆஸ்பத்திரி றோட், யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாண கல்லூரி அனுமதிக் கட்டணம் ரூபா 500/- மாதாந்த கட்டணம் ரூபா 1500/-

03.02.2017 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பயிற்சிக்குரிய அனுமதி பதிவுகள் நடைபெறும். அன்றையதினம் பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகுதியானவர்களுக்கு இலங்கை மருத்துவ சபையில், பயிலுநர் மருந்தாளராக பதிவு செய்வதற்குரிய விண்ணப்படிவங்கள் வழங்கப்படும்.

பரீட்சைக்கு தோற்றுவதற்குரிய தகைமையுடையவர்கள் மாத்திரம் 05.02.2017 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும் புதிய பிரிவுக்கான பயிற்சி வகுப்புக்களில் அனுமதிக்கப்படுவார்கள். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் காலை 8.30 மணியில் இருந்து நண்பகல் 12.30 மணிவரை வகுப்புக்கள் நடைபெறும்.

**மேலதிக விபரங்கள்:-0776256292 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம்.** (7690)



## கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவனத்தில் பணிபுரியும்
**சந்திரசேகரம் சந்திரகுமார்**
அவர்களின் அன்புத்தாயார்
**திருமதி சிவபாக்கியம் சந்திரசேகரம் (இணுவில்)** அவர்களின் பிரிவுச் செய்தி அறிந்து அதிர்ச்சியடைந்தோம்.
அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

G.Kanesalingam
AIA-Jaffna
(7691)


# இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்.நெடுந்தீவு மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பி.ப ஒரு மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

பாடசாலை அதிபர் வீ. ஓங்காரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (செ-11)

## மத்திய வங்கி மோசடியை...

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்றைய தினம் கண்டி ஸ்ரீ தலதா மாளிகைக்கு விஜயம் செய்து அங்கு இடம்பெற்ற மத வழிபாட்டிலும் கலந்து கொண்டார்.

பௌத்த மக்களால் பெரிதும் கௌரவத்துக்குரிய தலைவராக மதிக்கப்படுகின்ற மல்வத்துப்பீட மகாநாயக்கரை சந்தித்து ஆசி பெற்றுக்கொண்ட முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அதன் பின்னர் அங்கு கூடியிருந்த ஊடகவியலாளர்கள் மத்தியில் கருத்துக்களை வெளியிட்டார்.

"இந்த அரசாங்கம் சர்வாதிகாரத்தை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கிறது. வழக்கும் அவர்களதுதான், பொருட்களும் அவர்களுடையதுதான் என்று சிங்களத்தில் கூறுகின்ற பழமொழியைப் போன்று அரசாங்கத்தின் செயற்பாடு காணப்படுகிறது.

இலங்கை மத்திய வங்கியில் இடம்பெற்ற மோசடி தொடர்பான விசாரணைகளை அப்படியே விட்டுவிடுவதற்கு தயாராகி வருகின்றனர். அவற்றை மூடிமறைக்கவே முயற்சிக்கின்றனர்.

இந்த நாட்டில் இடம்பெற்ற மிகப் பெரிய மோசடி மத்திய வங்கி பிணை, முறிகள் விற்பனையில் இடம்பெற்ற கொள்ளையாகும். அவை தொடர்பான விடயங்களை வெளியிட்டால் நாட்டு மக்கள் அறிந்து கொள்வார்கள்" என மகிந்த தெரிவித்துள்ளார். (செ-11)


**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



## விற்பனைக்கு

வெட்கிளுவைக் கதியால், கப்பல் வாழைக்குட்டி விற்பனைக்குண்டு. (7688)

தொடர்புகளுக்கு:
**077 111 5360, 076 802 5826**



## வெளிவந்துள்ளது

**ஆங்கிலம் - ஆங்கிலம் - தமிழ் மருத்துவச் சொல் அகராதி**

மருத்துவம், மருந்தகம் சார்ந்த பணியிலும் இது தொடர்பான கற்கைநெறியில் ஈடுபட்டிருக்கும் மாணவர்கள், மருத்துவர்கள், தாதிமார்கள் பயன்பெறக்கூடிய வகையில் வட இலங்கை மருந்தியலாளர்கள் சங்கம், தமிழ் மருத்துவ அகராதியை இலங்கையில் முதன்முதலாக வெளியிட்டுள்ளார்கள். 5000 மருத்துவச் சொற்களுக்கு மேலாக அகராதி தொகுக்கப்பட்டுள்ளது. (7689)

விலை ரூபா 750/=

பிரதிகள் தேவைப்படுவோர்:
**மருந்தியலாளர் கல்வி இணைப்பாளர்**
**யாழ்ப்பாணக் கல்லூரி (வெளிவாரி பட்டப்படிப்பு)**
**464, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P: 077 625 6292**



## தையல் போதனாசிரியர்கள்
# தேவை

கோப்பாயில் அமைந்துள்ள 'நவமங்கை நிவாஸம்' இலவச தையல் பயிற்சியினை வழங்கவுள்ளது. இதற்குப் பொருத்தமான தகுதியுடையவர்கள் மேற்படி பதவிக்கு விண்ணப்பிக்கவும்

தொடர்பு
**077 171 0787**
**021 223 0418**
சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம் (7683)

**'நவமங்கை நிவாஸம்'**
இராச வீதி, கோப்பாய் மத்தி.
- நிர்வாகம்



இலவச
## தையல் பயிற்சி வகுப்பு



**இடம்:**
**'நவமங்கை நிவாஸம்'**
**இராச வீதி, கோப்பாய் மத்தி**

**ஆரம்பம்:**
**01.03.2017, காலை 9 மணி**

**விண்ணப்ப முடிவுத் திகதி:**
**28.02.2017** (7683)

பயிற்சிக்குத் தேவையான பொருட்கள் இலவசமாக வழங்கப்படும்.

வகுப்புக்கள் கிழமை நாட்களில் நடைபெறும்

- நிர்வாகம்



## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 09 - 03 - 1951
மறைவு 29 - 01 - 2017

அமரர்
## வல்லிபுரம் சிவசூரியகுமாரன்
(குவராசா - தொழிலதிபர்)

பிரபல தொழில் அதிபர் அமரர் வல்லிபுரம் சிவசூரியகுமாரன் அவர்களது மறைவுச் செய்தி அறிந்து மிகவும் துயருற்றோம். அவரது இழப்பால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**கணேசன் ஹாட்வெயார்**
**நெல்லியடி.**

(C-7415)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்




29.01.2017 அன்று நடைபெற்ற யாழ். பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் வணிகமாணி (B.Com) பட்டத்தைப் பெற்ற எமது சக உத்தியோகத்தர்

திருமதி
## சூ. விஜயரமணி
(அபிவிருத்தி உத்தியோகத்தர்)

அவர்களை மனதாரப் பாராட்டுவதுடன் மேலும் பல பட்டங்கள், பதவிகள் பெற்று உயர்வடைய வாழ்த்துகின்றோம்

வாழ்த்துவோர்:
**கமநல சேவை நிலையம்**
**உடையார்கட்டு**

(6693)

# முஸ்லிம் மக்களை ஒருபோதும் நான் பிரித்துப் பார்க்கவில்லை

## வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**என்னையும் முஸ்லிம்களையும் துரபப்படுத்தி அதில் அரசியல் இலாபம் தேட சிலர் முயற்சிக்கின்றனர். முஸ்லிம் மக்கள் எமது சகோதரர்கள். நாம் தமிழ், முஸ்லிம் ஒற்றுமையை ஊக்குவிக்கின்றோம். முஸ்லிம்களை நான் ஒருபோதும் பிரித்துப் பார்க்கவில்லை என வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

காத்தான்குடி மீடியா போரத்தின் உறுப்பினர்கள் கடந்த சனிக்கிழமை வட மாகாண முதலமைச்சரை அவரது இல்லத்தில் சந்தித்த போது அங்கு அவர் கருத்து தெரிவிக்கையிலேயே மேற் கண்டவாறு தெரிவித்தார்.

வட மாகாணத்திற்கான களப்பயணத்தினை மேற் கொண்ட கிழக்கு மாகாணத் தின் காத்தான்குடி மீடியா போரத்தின் உறுப்பினர்கள் வட மாகாண முதலமைச்சரையும் சந்தித்தனர்.

இதன் போது தொடர்ந்து கருத்து தெரிவித்த வட மாகாண முதலமைச்சர், நாம் ஒருபோதும் முஸ்லிம்களை பிரித்துப்பார்க்கவில்லை. ஆனால் என்னை முஸ்லிம்களின் விரோதியாக சிலர் காட்டுகின்றனர்.

வடமாகாணத்தில் முஸ்லிம்கள் மீள்குடியேற்றத்தை மேற்கொள்ள முடியும். யாழ்ப் பாணத்தில் இடம்பெயர்ந்த முஸ்லிம்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியேறியுள்ளனர்.

மேலும் மீள்குடியேற உள்ளவர்கள் தமது சொந்த இடங்களில் மீள்குடியேற முடியும். அதற்கு நாம் எந்தத் தடையும் கிடையாது.

"முஸ்லிம் மக்கள் எமது சகோதரர்கள். நாம் தமிழ், முஸ்லிம் ஒற்றுமையை ஊக்குவிக்கின்றோம்.


வடமாகாணத்திலுள்ள முஸ்லிம்கள் அவர்களின் பிரச்சினைகளை, அவர்களுக்கான தேவைகளை எனது கவனத்திற்கு கொண்டு வந்தால் நான் அவற்றுக்கான தீர்வினைப் பெற்றுக் கொடுக்க ஆயத்தமாக இருக்கின்றேன்.

முஸ்லிம்கள் என்னை நிகழ்வுகளுக்கு அழைத்தால் நான் நிச்சயம் செல்லத் தயாராக இருக்கின்றேன். அவ்வாறில்லாமல் என்னை அழைக்காமல் விட்டு விட்டு நான் முஸ்லிம்களின் நிகழ்வுகளுக்கு செல்வதில்லை என விமர்சனம் செய்கின்றனர்.

என்னை வடமாகாணத்திலுள்ள முஸ்லிம்கள் வந்து சந்திக்கலாம். அவர்களின் பிரச்சினைகள், தேவைகள் தொடர்பில் என்னோடு கலந்துரையாடலாம்.

கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடியிலிருந்து வந்து என்னை சந்தித்ததையிட்டு ஊடகவியலாளர்களான உங்களுக்கு எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

என்னையும் முஸ்லிம்களையும் தூரப்படுத்தி அதில் அரசியல் இலாபம் தேடவும் சிலர் முயற்சிக்கின்றனர். வடமாகாணத்திலுள்ள முஸ்லிம்களுக்கும் எனக்கும் ஒரு இணைப்புப் பாலமாக செயற்படுவதற்காக உங்களுடைய கோரிக்கையை ஏற்று ஒரு முஸ்லிம் சகோதரரை ஒரு இணைப்பாளராக நியமிக்க நான் ஆயத்தமாக இருக்கின்றேன். அத்தோடு உங்களின் கோரிக்கைக்கு அமைவாக கிழக்கு மாகாணத்திலுள்ள பள்ளிவாயல்கள் சம்மேளன பிரதிநிதிகள், உலமாக்கள் முஸ்லிம் முக்கியஸ்தர்களையும் நான் சந்திக்க தயாராகருக்கின்றேன் என்றார்.





இதன்போது காத்தான்குடி மீடியா போரத்தின் உறுப்பினர்கள் வடமாகாணத்திற்கான களப்பயணத்தின் போது அவதானிக்கப்பட்ட மன்னார் மாவட்டத்தின் முசலி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மறிச்சுக்கட்டி மற்றும் பாலைக்குழி போன்ற கிராமங்களில் மீள்குடியேறிய முஸ்லிம்கள் வில்பத்து காணி விவகாரம் மற்றும் யாழ்ப்பாணத்தில் மீள்குடியேறியுள்ள முஸ்லிம்களுக்கான வீட்டுப்பிரச்சினை அவர்களின் நிலவரம் போன்ற வபரங்களையும் வடமாகாண முதலமைச்சரிடம் எடுத்துக் கூறினர்.

இந்தச் சந்திப்பில் வட மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் கலந்து கொண்டதுடன் இந்த சந்திப்புக்கான ஏற்பாட்டினை அவரே மேற்கொண்டிருந்தார்.

இதன்போது காத்தான்குடி மீடியா போரத்தின் தலைவர் மௌலவி எஸ்.எம்.எம். முஸ்தபா மற்றும் செயலாளர் எம்.எச்.எம்.அன்வர் மற்றும் பொருளாளர் எஸ்.ஏ..கே.பழீலுர் ரஹ்மான் மற்றும் பஸால் ஜிப்ரி, எம்.நசார், டீன் பைறூஸ், எம்.எஸ்.எம்.சஜி, எம்.அஸீம், மௌலவி எம்.நௌபர், எம்.எஸ்.எம்.நூர்தீன் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-5)

## ரஞ்சனுக்கு எதிர்ப்பு தெரிவித்து ஊழியர்கள் பணிப்பகிஷ்கரிப்பு

கம்பஹா மாவட்டச் செயலாளர் அலுவலத்தின் ஊழியர்கள் அனைவரும் நேற்று வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க, தொலைபேசி ஊடாக, மாவட்டச் செயலாளருக்கு அச்சுறுத்தல் விடுத்தார் என்று தெரிவித்து, அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த பணிப்பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது. (இ-3)

## வில்பத்துக்கு சேதமில்லை

(கொழும்பு)

வில்பத்து தேசிய வனப் பகுதிக்கு, எவ்விதமான சேதங்களும்விளைவிக்கப்படவில்லை என்று, இலங்கை இயற்கைக் கூட்டமைப்பின் தலைவர் திலக் காரியவசம் தெரிவித்தார்.

மேலும், அமைச்சர் றிசாத பதியுதீன் மீதான வெறுப்பின் காரணமாக, வில்பத்து வனப் பகுதி அழிக்கப்படுவதாக, குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

வில்பத்து வனப்பகுதிக்கு சென்ற மேற்படி கூட்டமைப்பினர் நேற்று முன்தினம் அங்கு நிலைமையைப் பார்வையிட்டனர். இதன் பின்னர் அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார். (இ-3)

## சமுர்த்தி பயனாளிகளுக்கு ஓர் மகிழ்ச்சியான செய்தி

சமுர்த்தி பயனாளிகளின குடும்பங்களுக்காக 3 ஆயிரத்து 972 வீடுகளை நிர் மாணித்துக் கொடுக்க தீர் மானிக்கப்பட்டுள்ளதாக சமூக வலுவூட்டல் மற்றும் நலன் புரி அமைச்சின் செயலாளர் மகிந்த செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேச செயலகத்திலிருந்தும் சமுர்த்தி உதவிகளை பெறும் ஒரு குடும்பம் வீதம் தெரிவு செய்யப்பட்டு இந்த வீடுகள் கட்டிக்கொடுக்கப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய 331 வீடுகள் நிர்மாணிக்கப்புடும் என கூறப்பட்டுள்ளது. ஒரு வீட்டுக்கான நிர்மாணப் பணிகளுக்கு மாதாந்தம் இரண்டு இலட்சம் ரூபாவை அரசாங்கம் வழங்கவுள்ளதாக அவர தெரிவித்தார்.

சமுர்த்தி லொத்தர் டிக்கெட் விற்பனை மூலம் இதற்கான நிதி பெற்றுக் கொள்ளப்படுகின்றதாகவும் அமைச்சின் செயலாளர் மகிந்த செனவிரட்ன தெரிவித்தார். (இ-3)

## அம்பாந்தோட்டையில் ஆர்ப்பாட்டம் 25 பேரின் விளக்கமறியல் நீடிப்பு

(கொழும்பு)

அம்பாந்தோட்டை பகுதியில் அண்மையில் இடம் பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது ஏற்பட்ட குழப்பநிலையில் கைதுசெய்யப்பட்ட 25 பேரை விளக்கமறியலில் வைக்குமாறு அம்பாந்தோட்டை நீதிமன்றம் நேற்று உத்தர விட்டுள்ளது.

இவர்களை எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதி மன்றம் மேலும் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டவர்களில் நான்கு பேருக்கு இதன்போது பிணை வழங்கப்பட்டுள்ளது.

வீதியில் டயர்களை எரித்தமை, வீதியை மறித்தமை போன்ற குற்றச்சாட்டுக்கள் இவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளது. (இ-3)

## முதலமைச்சர்கள் ஆறுபேர் இங்கிலாந்துக்கு பயணம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மாகாண சபை முதலமைச்சர்கள் ஆறு பேர் இங்கிலாந்துக்கு சுற்றுப் பயணமொன்றை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேல் மாகாண முதலமைச்சர் இசுறு தேவப்பிரிய, மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க, சபரகமுவ மாகாண முதலமைச்சர் மஹிபால ஹேரத், தென் மாகாண முதலமைச்சர் சான் விஜயலால், வட மேல் மாகாண முதலமைச்சர் தர்மசிறி தசநாயக்க மற்றும் ஊவா மாகாண முதலமைச்சர் சாமர சம்பத் ஆகியோரே இவ்வாறு சென்றுள்ளனர்.

இங்கிலாந்தில் நடைபெறும் மாகாண நிர்வாகிகளுக்கான செயலமர்வில் கலந்துகொள்வதற்கே இவர்கள் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. கடந்த 26 ஆம் திகதி நாட்டிலிருந்து சென்றுள்ள இவர்கள் நாளை மறுதினம் 2 ஆம் திகதி வியாழக்கிழமை நாடு திரும்பவுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி சார்பு குழுவிலுள்ள இந்த முதலமைச்சர்கள் 6 பேரும் கடந்த வாரம் மகிந்த ராஜபக்ஷவுடன் விசேட கலந்துரையாடலில் ஈடுபட்டவர்கள் ஆவர். அத்துடன், இவர்கள் கடந்த 27 ஆம் திகதி நுகேகொடையில் இடம்பெற்ற கூட்டு எதிர்க் கட்சியின் கூட்டத்தின் போதும் நாட்டில் இருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

# போர்க்குற்றவாளி...

வட்டக்கண்டல் படுகொலையின் 32-வது ஆண்டின் நினைவு நாள் நிகழ்வு மன்னார் வட்டக்கண்டல் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் நேற்றைய தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

அதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

இலங்கை அரச படைகளை நோக்கி இயக்கங்கள் துப்பாக்கி தூக்க முன்னர் இரு ந்தே அரச படைகளும் குண்டர்களும் அப்பாவித் தமிழ் மக்களை இன்னலுறச் செய்து வந்துள்ளனர்.

முதன் முதலில் 1956 ஆம் ஆண்டு இங்கினியாகல என்ற இடத்தில் நடைபெற்ற இன படுகொலை சம்பந்தமாக அரசாங்கம் தக்க நடவடிக்கைகள் எடுத்திருந்தால் வட்டக்கண்டல் படுகொலை மட்டுமல்ல மற்ற எந்தப் படுகொலையும் நடைபெற்றிராது. தொடர்ந்து நடந்த படுகொலை அனைத்தையும் மூடி மறைத்து தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் நடவடிக்கை எடுக்காத காரணத்தினால்தான் திரும்பத் திரும்ப படுகொலைகள் நடைபெற்றன.

அப்படுகொலைகளை நாங்கள் இனப்படுகொலை என்று அடையாளங்காண வேண்டி வந்தது ஏனெனில் அவை ஒரு இனத்தைச் சேர்ந்த மக்களை அழிப்பதாக அமைந்ததாலும் தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் அவற்றை அனுமதித்து ஒப்புதல் அளித்தமையாலேயே யாகும்.

இவ்வாறான இனப்படுகொலைகள் பல தொடர்ந்து வட்டக்கண்டலுக்குப் பிறகும் நடந்து 2009ஆம் ஆண்டின் யுத்த இறுதிக் காலகட்டத்தில் எம்மக்களுக்குச் சொல்லொண்ணாக் கொடூரங்கள் இழைக்கப்பட்டன. அதற்காகத்தான் தற்போது போர்க்குற்ற விசாரணை ஜெனிவாவில் இருந்து முடுக்கி விடப்பட்டுள்ளது.

இப்பொழுது கூட வடமாகாணசபை வெளிநாட்டு தக்க சட்ட நிபுணர்களை, நீதிபதிகளை வரவழைத்து எமது படுகொலைகள் போர்க் குற்றங்கள் பற்றி விசாரணை செய்து அறிக்கை பெற சட்டத்தில் இடம் இருக்கின்றதா என பதை நாம் ஆராய்ந்து பார்க்கலாம்.

அரசாங்கம் போர்க்குற்ற விசாரணையில் ஈடுபடும் என்று எதிர்பார்க்க முடியாது. கொடூரப் படுகொலைகள் பற்றி விசாரணை செய்யாத அரசாங்கங்கள், நடந்தவற்றை நடந்ததா என்று ஆராயாமலே நடக்கவில்லை என்று கூறும் அரசாங்கங்கள், எமது நாடு சுதந்திர நாடு வெளியார் உள்ளீடுகள் பெறப்படாது என்று நீதியைத் திசை திருப்பப் பார்க்கும் அரசாங்கங்கள் எவ்வாறு உண்மையான போர்க்குற்ற விசாரணைகளில் ஈடுபட முன்வரப் போகின்றன?

வடமாகாணசபை சர்வதேச நீதிபதிகளின் துணை கொண்டு உண்மையறியும் ஆணைக்குழு ஒன்றையோ, செயற்குழு ஒன்றையோ நியமிக்க முடியுமா என்று ஆராயுங்கள். முடியுமானால் அதனை நெறிமுறைப்படுத்தி உண்மையை உலகுக்கு எடுத்துரைப்போம். நடந்தவற்றை நடந்தவாறே எடுத்துரைப்போம். எமது மக்கள் நீதி பெற வேண்டுமானால் இது ஒன்றே வழியென எனக்குப் படுகிறது.

ஏனென்றால் அரசாங்கமானது நடந்தவற்றைக் கனவாக எண்ணுமாறு எம்மைக் கருதவைக்க கடினமாக உழைத்து வருகின்றது. அரசியல்ரீதியாக அதைத்தருவோம் இதைத தருவோம் என்று எம்மவருடன் பேரம் பேசுகின்றது. இல்லையென்றால் மகிந்த வந்து விடுவார் என்று பயம் காட்டப் பார்க்கின்றார்கள். ஆனால் அரசாங்கத்திற்குத் தமிழ் மக்கள் மீது கரிசனை இருக்கின்றதென்றால் பின்வருவனவற்றை முதலில் செய்து தரட்டும்.

புனருத்தாரண முகாம்களை உடனே இழுத்து மூடி அவற்றுள் வசிப்பவர்களை எமது வடமாகாண சபைத் திணைக்களங்களுக்குத் தாருங்கள், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை வாபஸ் பெற்று தற்போது சிறையில் இருக்கும் அரசியல் கைதிகளை உடனே விடுவியுங்கள், போர்ப்படையின் தொகைகளைக் கணிசமாகக் குறையுங்கள், மக்களின் காணிகளைத் திரும்பிக் கொடுங்கள், மக்களுக்கு எதிராக நடந்து கொண்ட அலுவலர்களை அடையாளங் கண்டு அவர்களை சேவையில இருந்து வெளியேற்றுங்கள்.

குற்றங்கள் இழைத்த அவர்களைத் தொடர்ந்து உயர் பதவிகளில் வைத்திருப்பது தற்போதைய அரசாங்கம் மனம்மாறவில்லை என்பதையே எடுத்துக் காட்டுகின்றது.

ஆகவே அரசாங்கம் உண்மையாகத் தமிழ மக்கள் மீதும் அநியாயமாகக் கொல்லப்பட்டவர்கள் மீதும் அனுதாபம் கொண்டுள்ள தெனின் தமிழ் மக்களின் நலன்களுக்கு எதிராக இது வரை நடந்து கொண்டு வந்த உயர் சிவில், இராணுவ அதிகாரிகளையும் அரசியல்வாதிகளையும் உடனே அடையாளம் கண்டு சேவையில் இருந்து வெளியே ற்ற முன்வர வேண்டும்.

காணாமற் போனார செயலகத்திற்கு என்னானது? சட்டம் வலுவற்றதாக இருந்தாலும் உண்மைகளை வெளிக் கொண்டுவர மேற்படி செயலகத்தை செயலாற்ற வைக்க வேண்டும். இதுவரையில் தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் தமிழ் மக்களுக் கெதிரான மனிதப்படு கொலைகளைக் கண்டும் காணத மாதிரியே இருந்து வந்துள்ளன.

இன்று பாதிக்கப் பட்டவர்களுக்கு நீதி கிடைப்பதைத் தடுத்து நட்டஈடு தந்து வேலையை முடிக்கப்பார்க்கின்றது அரசாங்கம். இதற்காக சர்வதேசத்திடம் இருந்து நட்டஈட்டுப் பணம் பெற விழைகின்றது.

வெறும் கிணறுகள் வெட்டி, மலசலகூடம் மற்றும் வீடுகள் அமைத்து, தண்ணீர் தாங்கிகளைக் கட்டுவது சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்கும் வழி வகுக்காது. போர்க்குற்ற விசாரணை உரிய முறையில், சந்தேகங்களுக்கு இடமின்றி நடைபெற்று குற்றவாளிகளைக் கண்டறிந்து அவர்களுக்குத் தண்டனை வாங்கிக் கொடுப்பதே வட்டக்கண்டல் படுகொலையில் தமது உறவுகளை இழந்த எமது சகோதர சகோதரிகளின் மனதைச் சற்றேனும் ஆசுவாசப்படுத்தக் கூடிய காரியம் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-4,9)


## கண்ணீர் காணிக்கை

எமது சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினர்களாகிய திரு. சந்திரசேகரம் சந்திரமோகன் (அம்பிகா பார்மசி, இணுவில்) அவர்களின் அருமைத் தாயாரும், திரு.நமசிவாயம் சிவபாலன் (அம்பிகா டிஸ்பென்சறி, சாவகச்சேரி) அவர்களின் பாசமிகு மாமியாருமாகிய

### அமரர் திருமதி சிவபாக்கியம் சந்திரசேகரம்

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு மனம் வருந்துவதோடு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வட இலங்கை மருந்தியலாளர் சங்கம்





## ஆதனப்பெயர் மாற்றம்

யாழ் மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம் - 08, கடற்கரை வீதி ஆதன இல 1005/7 என்ற இலக்கத்தை கொண்ட ஆதனம் சிவதாஸ் பெண் இந்திராணி என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை யாழ்ப்பாணம் துண்டி றோட்டைச் சேர்ந்த சைமன் அக்னேஸ் பிரசித்த நொத்தாரிஸ் வே.நடராசா முகதாவில் நிறைவேறிய 1893 இலக்க 1983.11.23ந் திகதிய நன்கொடை உறுதி மூலம் தனது மகள் சிவதாஸ் இந்திராணிக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார். பிரசித்த நொத்தாரிஸ் க.கேசவன் முகதாவில் 13511ம் இலக்க 2012.08.26ந் திகதிய வெளிப்படுத்தல் உறுதியில் யாழ்ப்பாணம் கொழும்புத்துறை, துண்டி றோட்டு, இல.999 இராசநாயகம் உதயகுமாரும் பெண் உஷாந்தினியும் தனது மாதா காலஞ்சென்ற சிவதாஸ் பெண் இந்திராணி பெயரில் 1893/23.11.1983ம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதியின் படி தத்துவம் எடுக்க வேண்டிய பணத்தொகைக்கும் குறைவான மரணச்சொத்துக்களை விடுத்தும் தமது சொந்தங்களுக்கு ஏக உரித்தாளியாக அவர்களின் ஒரே ஒரு பிள்ளையான எங்கள் 2ம் பெயரை விட்டு இறக்க மாதா வழி முதுசமாக வந்தடைந்தது என்று வெளிப்படுத்தியுள்ளார். பிரசித்த நொத்தாரிஸ் திருமதி.லிங்கா துரைராஜா முகதாவில் நிறைவேறிய அறுதி உறுதி இல 9023/2.3.2013 மூலம் கொழும்புத்துறை, துண்டி வீதி, இல 1005/7 ஐ சேர்ந்த இராசநாயகம் உதயகுமாரும் பெண் உஷாந்தினியும், இல.149, 14ம் குறுக்குத்தெரு, உதயபுரம் அரியாலை தென் கிழக்கைச் சேர்ந்த சிங்கராஜா அன்ரன் மரியசீலனிற்கும் பெண் ஜெயமரியரெட்ணத்திற்கும் அறுதியாக வழங்கியுள்ளார்.

ஆதன விபரம் :- வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பர்ணப்பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று கொழும்புத்துறை இறை கொள்ளுப்பிட்டி அல்லது மறவன் தோட்டம் இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் T.தங்கராஜா அவர்களின் வரைபட இலக்கம் 6013/2013.03.01 இல் துண்டு 01 எனக் காட்டப்பட்ட நில.பர.1 குளி 13.50 ஆகும் இதற்கு எல்லை,

கிழக்கு :- கபிரியல் வெலிச்சோர் ஜெயபதியின் ஆதனம்
வடக்கு :- ஒழுங்கை
மேற்கு :- பாலசுப்பிரமணியம் பெண் பிறேமா யோகேஸ்வரி
தெற்கு :- துண்டு 2

தற்போது இவ்வாதனத்தை சிங்கராஜா அன்ரன் மரியசீலனும் பெண் ஜெயமரியரெட்ணமும் தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் எழுத்து மூலம் உரிய ஆவணங்களுடன் அறியத்தருமாறும், உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது சிங்கராஜா அன்ரன் மரியசீலன் பெண் ஜெயமரியரெட்ணம் என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆணையாளர்
மாநகரசபை
யாழ்ப்பாணம் (A-7412)

## ஆதனப்பெயர் மாற்றம்

யாழ் மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம் - 10, கச்சேரி நல்லூர் வீதி, ஆதன இல.106 என்ற இலக்கத்தை கொண்ட ஆதனம் சுப்பிரமணியம் பெண் வள்ளிப்பிள்ளை என்னும் பெயரில் ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை யாழ்ப்பாணம் சிவியா தெரு மேற்கு சிற்றம்பலம் கந்தையா பெண் சின்னம்மா தனது மரணசாதன இல.208/1952.08.14ம் திகதியில் பிரசித்த நொத்தாரிஸ் க.தில்லையம்பலம் மூலம் வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று சிவியா தெரு இறையிலிருக்கும் "கந்தன் வளவு" நில.பர.இல.3 என்னும் காணியில் தென்புறமாக அரைவாசியை பொன்னம்பலம் கனகரத்தினத்திற்கும், வடபுறமாக அரைவாசியை பொன்னம்பலம் புண்ணியமூர்த்திக்கும் ஈகை செய்கின்றார். தற்போது இவ்வாதனத்தை பிரசித்த நொத்தாரிஸ் S.S.இராசநாயகம் முகதாவில் 2193/26.06.2004ம் இலக்க வெளிப்படுத்துகை உறுதி மூலம் யாழ்ப்பாணம், சுண்டிக்குளி, கச்சேரி நல்லூர் வீதி 106-ம் இலக்கத்தைச் சேர்ந்த பரமநாதன் குகதாசனும் பெண் சற்குணவதியும் 2004ம் ஆண்டு வைகாசி மாதம் 20ம் திகதி நில அளவையாளர் பி.தனராசாவினால் 2534-ம் இலக்கத்தில் அளந்து வரையப் பெற்ற 1, 2, 3 எண்களால் சுட்டப்பெற்ற துண்டுகள் நில.பர.3 குளி 16.13 அதற்குச் சேர்ந்தவைகளும் தங்களின் பேரனும் பேத்தியுமாயிருந்து காலம் சென்ற ஆறுமுகம் பொன்னம்பலமும் பெண் வள்ளிப்பிள்ளையும் சொந்தக்காரராயிருந்து தங்களுக்கு 1963ம் ஆண்டளவில் யாழ்ப்பாணப்பகுதியின் பிரசித்த நொத்தாரிஸ் க.தில்லையம்பலம் முகதாவில் சீதன உறுதி நிறைவேற்றப்பட்டு அவ் உறுதி காணிக்கந்தோரில் பதியப்பட்டு மூலப்பிரதி கைவசம் இருந்துள்ளதென்றும், நாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதங்களின் போதும், இடப்பெயர்வு காரணமாகவும் தொலைந்தபடியால் காணிக்கந்தோரில் தேடுதல் செய்யப்பட்டு கண்டு பிடிக்க முடியாது போய்விட்டதாக வெளிப்படுத்தியுள்ளார். பிரசித்த நொத்தாரிஸ் என்.தில்லைவினாயகம் முகதாவில் 5909/2005.08.21ம் இலக்க பிரிவிடுதல் உறுதியில் பரமநாதன் குகதாசனும் பெண் சற்குணவதியும் 1ம் புறத்தாரும், அவ்வூர் தர்மலிங்கம் கருணாகரன் பெண் கேமாவதியும் 2ம் புறத்தாரும் சீதன சாதனங்களின் படி 2004.05.20ம் திகதி 2534 A இலக்கத்தில் உத்தரவு பெற்ற நில அளவையாளர் பி.தனராஜா அவர்களால் அளந்து வரையப்பட்ட படத்தின் படி நில.பர.3குளி.16.62 இல் வடக்குப்புறமாக சீதனம் கொடுக்கப்பட்ட நில.பர.1 குளி 13.50 ஆகும்.

<u>இந்த நிலபரப்புக்கும் எல்லை</u>

கிழக்கு :- சுப்பிரமணியம் இராசையா, வடக்கு :- செல்வமாணிக்கராஜா பெண் சந்திராவதி, மேற்கு :- கச்சேரி நல்லூர் வீதி, தெற்கு குறித்த படத்தில் 2ம் இலக்கத்தால் சுட்டிய கருணாகரன் பெண் கேமாவதி.

தற்போது இவ்வாதனத்தை பரமநாதன் குகதாசனும் பெண் சற்குணவதியும் தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் எழுத்து மூலம் உரிய ஆவணங்களுடன் அறியத்தருமாறும், உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது பரமநாதன் குகதாசனும் பெண் சற்குணவதி என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆணையாளர்
மாநகரசபை
யாழ்ப்பாணம் (C-7413)

## ஒரு கிலோ கிராம் கொக்கேய்னுடன் ஒருவர் கைது; ஒருவர் தப்பியோட்டம்

மதுவரி திணைக்களத்தின் கொழும்பு பிரிவின் அதிகாரிகள் மேற்கொண்ட தேடுதலில் ஒரு கிலோ கிராம் கொக்கேய்ன் போதைப் பொருளுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்த தேடுதல் நேற்று முற்பகல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தேடுதல் நடத்தும் போது ஒரு சந்தேக நபர் தப்பி ஓடியுள்ளார்.

தப்பியோடிய சந்தேக நபரை கைது செய்வதற்கான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மேலும் கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட உள்ளார்.

மதுவரி திணைக்களத்தின் பரிசோதகர் குமார திஸாநாயக்க தலைமையிலான குழுவினர் இந்த தேடுதலை நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

# மக்களைப் பிரிக்க முற்பட்டதே மோதல்கள் ஏற்படக்காரணம்



### முன்னாள் ஜனாதிபதி மகிந்த தெரிவிப்பு

சிங்களம், தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களை தனித்தனியாக பிரிக்க முயற்சித்த சகல சந்தர்ப்பங்களிலும் இலங்கைக்குள் மோதல்கள் ஏற்பட்டதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துளளார்.

பிலியந்தல, சித்தமுல்ல பிரதேசத்தில் விகாரை ஒன்றில் நேற்று நடைபெற்ற வைபவத்தில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் இதனை தெரிவித்தார். நாகரிகமும் கலாசாரமும் படிப்படியாக சமூகத்தை விட்டு தூர விலகி சென்று கொண்டிருப்பதாகவும் முன்னாள் ஜனாதிபதி தெரிவித்தார். (இ-3)

## கண்ணீர் அஞ்சலி

யா/கொக்குவில்
இந்துக்கல்லூரியின்
ஆங்கில ஆசிரியர்
**அமரர் திருமதி**
**கௌரிமனோகரி பவளநாதன்**



அவர்கள் காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பழைய மாணவர் சங்கம்**
**யா/கொக்குவில்.இந்துக் கல்லூரி**

(சி-7499)

### முதியோர் பேரவையின் செயற்குழு கூட்டம்

வடக்கு மாகாண முதியோர் பேரவையின் செயற்குழுக் கூட்டம் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் முல்லைத்தீவு சமூக சேவைகள் திணைக்கள அலுவலகத்தில் தலைவர் சு.பரஞ்சோதி தலைமையில் நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் ந.தசரதராஜகுமாரன், பிரதேச செயலகங்களின் சமூக சேவைகள் அலுவலர்கள் இதில் கலந்து கொண்டிருந்தனர்.(2-254)

## மரண அறிவித்தல்

### திருமதி ஞானேஸ்வரி சோமசுந்தரம் (ஞானக்கா)



யாழ்ப்பாணம் மருதனார்மடத்தில் வாழ்ந்து சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் ஆசிரியராகவும் பின் அதிபராகவும் பணிபுரிந்த திருமதி ஞானேஸ்வரி சோமசுந்தரம் (ஞானக்கா) 28.01.2017 அன்றுகொழும்பில் காலமானார்.

அன்னார் அமரர்கள் தம்பு,சிவக்கொழுந்து ஆகியோரின் கனிஷ்ட புதல்வியும் அமரர் கே.கே. சோமசுந்தரம் (முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர் & ஆங்கில விரிவுரையாளர், பலாலிஆசிரியர் பயிற்சிக் கலாசாலை) அவர்களின் அன்புமனைவியும் மைதிலி (முன்னாள் பிரதிப் பதிவாளர்,கொழும்புப் பல்கலைக்கழகம்),கிருஷ்ணானந்தி (உளவியலாளர், நியூசிலாந்து),ஜெகப்பிரியன் (கணக்காளர்),சிவாநந்தி (வைத்தியர், தேசிய வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும் தயாநிதி (முன்னாள் பொறியி யலாளர்,RDA), இளங்கோ (பேராசிரியர், நியூசிலாந்து),மஞ்சுளா (ஆசிரியர், சைவமங்கையர் கழகம்),இரகுபரன் (சிரேஷ்ட விரிவுரையாளர்,தென்கிழக்குப் பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் கவிதா,தேனுகா,பார்த்திபன், இளம்பூரணன்,யாழினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் அமரர்களான, ரத்தினசபாபதி, கமலாம்பிகை, குமாரசாமி, மகேஸ்வரி மகாதேவா, இராஜேஸ் வரி கயிலாயநாதன்,புவனேஸ்வரி வில்லவராயர் ஆகியோரின் அன்புச் சகோதரி யுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 31.01.2017 (காலை 9- பி.ப.4 மணி) வரை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பி.ப.4 மணி அளவில் கல்கிசை பொது மயானத்திற்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப் படும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் இந்த அறிவித்தலை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

குடும்பத்தினர்.
49-1/1,டட்லி சேனநாயக்க மாவத்தை, தெஹிவளை.
தொடர்புகளுக்கு: 077-740 3819, 071-821 8178, 071-821 8177

(சி-7411)

## என்றும் நீங்கா நினைவுகளுடன் ஓராண்டு நினைவஞ்சலி

அமரர் திருமதி **இராஜவதனி அருளானந்தம்**



மண்ணுலகில் 1955.02.19 — விண்ணுலகில் 2016.02.11
திதி-சதுர்த்தி

யாழ்ப்பாணம் கொக்குவில்
கிழக்கை பிறப்பிடமாகவும்
மட்டக்களப்பை வசிப்பிடமாகவும்
கொண்ட
**அமரர் திருமதி**
**இராஜவதனி அருளானந்தம்**
அவர்களின் ஓராண்டு
நினைவுகளுடன் அன்னாரின்
ஆத்ம ஈடேற்றத்திற்காக
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

(7200)

**45/1, புகையிரத நிலைய குறுக்கு வீதி,மட்டக்களப்பு குடும்பத்தினர்.**

## இராசி பலன்

31.01.2017
(தை 18, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.36 மணிக்கு
சதுர்த்தி முன்னிரவு 4.17 மணிவரை
பூரட்டாதி முன்னிரவு 11.24 மணிவரை
சுபநேரம் 11.06-12.36 மணிவரை
இராகுகாலம் 3.36-5.06 மணிவரை
சதுர்த்தி விரதம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| செவ் சுக் | | | |
| சந் கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் ஆயிலியம், மகம் மாலை 4.57 மணிக்கு மீன-சந் | | |
| சூரி புத | | | ராகு |
| | சனி | குரு | |

**மேடம்:** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியத்தில் முன்னேற்றம் கிடைக்கும், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

**இடபம்:** எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், ஆரோக்கியமான நாள்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பித்த சம்பந்தமான ரோக பயமுண்டு, பயணங்கள் கைகூடும்.

**கடகம்:** மனக்குழப்பங்கள் அகல விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள், எடுத்த செயலை முடிக்க அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும்.

**சிம்மம்:** கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், தன்னம்பிக்கையும் தைரியமும் கூடும், சுப தகவல்கள் வந்து சேரலாம், காரிய அனுகூலமுண்டு.

**கன்னி:** நண்பர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும், தொழிலில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள், போசன சுகமுண்டு, மனத்திற்கினிய சம்பவமொன்று இடம்பெறலாம்.

**துலாம்:** தாழ்ந்த சுபாவமுண்டு, எடுத்த காரியங்களை முடிப்பதில் கூடிய அக்கறை காட்டும் நிலை ஏற்படலாம், பிறருக்கு உதவும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்:** அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், மனக்குழப்பங்கள் தீர்ந்து மனநிறைவு கூடும் நாள், போசன சுகமுண்டு, தனவரவு திருப்திதரும்.

**தனுசு:** முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்படலாம், போசன சுகமுண்டு, விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.


**மகரம்:** உஷ்ண சம்பந்தமான ரோக பயமுண்டு, வார்த்தைகளால் பிறரைக் கவர்வீர்கள், தொழிலில் முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள்.

**கும்பம்:** ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், ஆன்றோர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம், போசன சுகமுண்டு.

**மீனம்:** மனதில் இனம்புரியாத கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள், தொழிலில் புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், அலைச்சல்கள் சற்றுக் கூடும்.

# நாவற்குழியில் தமிழ், சிங்கள மக்களுக்கு வீடுகள் அமைப்பு





படங்கள்:-சாளின், சோபிகா

(யாழ்ப்பாணம்)

தேசிய வீடமைப்பு அதிகாரசபையால் நாவற்குழி மேற்கு பகுதியில் உள்ள தமிழ்,சிங்கள மக்களுக்கு வழங்கப்பட்ட வீட்டுத்திட்டத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்றைய தினம் நடைபெற்றது.

யாழ்.செய்திகள்

நாவற்குழி மேற்கு பகுதியில் தேசிய வீடமைப்பு அதிகாரசபைக்கு சொந்தமான காணியில் 200 தமிழ் குடும்பங்களுக்கும் 50 சிங்கள குடும்பங்களுக்குமான 5 இலட்சம் ரூபாய் பெறுமதியுடைய வீட்டுத்திட்டத்துக்கான அடிக்கல்லினை இரு இனத்தவருடைய முறையில் அந்தந்த பகுதிகளில் யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் நாட்டிவைத்தார்.

கடந்த 2010 ஆம் ஆண்டில் இருந்து சில குடும்பங்கள் இப்பகுதியில் அத்துமீறி குடியேறியிருந்தன. அதனை தொடர்ந்து யாழ்.மாவட்டத்தில் உள்ள வெவ்வேறு பகுதிகளிலும் அத்து மீறி குடியேறிருந்த குடும்பங்கள் கடந்த கால அரசாங்கத்தால் அப்பகுதியில் குடியமர்த்தப்பட்டார்கள்.

அதனை தொடர்ந்து குறித்த பிரதேசத்தில் உள்ள மேலதிக காணிகளில் மேலும் சில காணிகள் அற்ற குடும்பங்கள் குடியேற்றப்பட்டு தற்போது அப்பகுதியில் 200 தமிழ் குடும்பங்களும், 53 சிங்கள குடும்பங்களும் வசித்து வருகின்றன.

இந்த நிலையில் வீடமைப்பு அதிகார சபையால் இந்த வருடம் 200 தமிழ் குடும்பங்களுக்கும் 50 சிங்களக் குடும்பங்களுக்கும் காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதுடன் 5 இலட்சம் ரூபாய் பெறுமதியிலான வீட்டு திட்டம் வழங்கப்பட்டுள்ளது. குறித்த நிதி நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ் மாவட்ட மேலதிக அரச அதிபர் (காணி) எஸ். முரளிதரன், தேசிய வீடமைப்பு அதிகாரசபை யாழ் மாவட்ட முகாமையாளர் எம். ரவீந்திரன், சாவகச்சேரி பிரதேச செயலர் உட்பட வீடமைப்பு அதிகாரசபை உத்தியோகத்தர்கள், பொது மக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (இ-4-9)



தற்போது மக்கள் வாழும் வீடு இது





யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தனின் 2016ஆம் ஆண்டுக்கான நிதியொதுக்கீட்டிலிருந்து கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு சுமார் இரண்டு இலட்சம் பெறுமதியான மடிக்கணனி மற்றும் பல்லூடக எறியி மற்றும் அலுவலக உபகரணங்கள் என்பவற்றை வழங்கும் நிகழ்வு அண்மையில் கரவெட்டி பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்துகொண்டு மேற்படி கணனி மற்றும் உபகரணங்களை சுகாதாரவைத்திய அதிகாரியிடம் கையளித்தார். அத்துடன் நாடாளுமன்ற உறுப்பினரின் ஒதுக்கீட்டின் கீழ் கரவெட்டி கிராம அபிவிருத்திச்சங்கத்துக்கான பிளாஸ்டிக் கதிரைகளையும் மாகாணசபை உறுப்பினர் கையளித்தார். நிகழ்வில் வடமாகாணசபை உறுப்பினருடன், கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி, கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் எனப்பலரும் கலந்துகொண்டனர். (படங்கள்:-கிஷோர்)

# ஒருவேளை உணவுக்குக்கே வழியின்றி மக்கள் அவதி!

யாழ்ப்பாணம் தெல்லிப்பழை பிரதேசத்திற்குட்பட்ட அண்மையில் மீள் குடியேற்றம் செய்யப்பட்ட பலாலி வடக்கு 254 கிராம சேவகர் பிரிவான அன்ரனிபுரம் கிராம மக்கள் எந்தவித தொழில்களுமின்றி நாளாந்த உணவுக்குக் கூட வழியின்றி மிகவும் கஷ்டமான நிலையில் வாழ்ந்து வருகின்றனர். சில மாதங்களுக்கு முன்னர் குடியேற்றப்பட்ட இக்கிராமத்தில் அவர்களது ஜீவனோபாய தொழிலான கடற்றொழிலுக்கு செல்லக்கூடிய துறை வசதிகள் எதுவும் மேற்கொள்ளாமல் மீள் குடியேற்றம் செய்யப்பட்டதால் கடற்றொழிலுக்கு செல்லமுடியாமலுள்ளனர். இவர்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டும் அப்பகுதியில் பாடசாலை இதுவரை விடுவிக்கப்படாமையால் அங்குள்ள மாணவர்கள் நீண்டதூரம் பேருந்து வசதிகள் எதுவுமின்றி சிறிய ரக வடிரக வாகனங்களில் மிகவும் சிரமப்பட்டு சென்று வருகின்றனர்.

அண்மையில் பல குடும்பங்கள் உணவின்றி இருந்ததை அறிந்த கொடையாளி ஒருவர் அக்குடும்பங்களுக்கு தலா பத்துக் கிலோ அரிசி வீதம் வழங்கியதன் பின்னரே உணவுண்டதாகவும் தெரிவிக்கின்றனர்.

தாம் மீள்குடியேற்றப்பட்டதன் பின்னர் முன்பு இடம்பெயர்ந்து வசித்த இடங்களில் கடற்றொழில் மேற்கொள்ள அந்த பிரதேச கடற்றொழிற் சங்கங்கள் மீண்டும் தொழில் செய்ய முடியாது தம்மை தடை செய்ததாகவும் கவலையுடன் தெரிவித்ததுடன் தமக்கு தமது தொழிலை மேற்கொள்ளக்கூடிய வகையில் இறங்கு துறையை அமைத்து தருமாறும் இரண்டு மாதங்களுக்காவது உலருணவு நிவாரணம் பெற்றுத்தருமாறும் கோரியுள்ளனர்.(இ-60)

# நிர்ணய விலையில் பொருட்களை விற்று சட்ட நடவடிக்கைகளைத் தவிர்க்கவும்

## யாழ்.வணிகர் கழகம் அறிவுறுத்து

அரசாங்கம் ஆறு உணவுப் பொருட்களுக்கு அதிகபட்ச சில்லறை விலைகளை நிர்ணயித்துள்ளது. இதனடிப்படையில் சீனியின் ஆகக் கூடிய சில்லறை விலை 93 ரூபா எனவும், 1 கிலோ மைசூர் பருப்பின் ஆகக்கூடிய சில்லறை விலை ரூபா 159 எனவும், 1 கிலோ உருளைக்கிழங்கின் ஆகக் கூடிய விலை ரூபா 115 எனவும் ஒரு கிலோ பயறு 205 எனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மேலும் டுபாயில் இருந்து இறக்குமதி செய்யப்படும் நெத்தலி ரூபா 405 ரூபாவாகவும், தாய்லாந்திலிருந்து இறக்குமதி செய்யப்படும் நெத்தலி ரூபா 490 ஆகவும் விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

எனவே அரசாங்கத்தின் புதிய விலை நிர்ணயத்திற்கு அமைவாக மேற்படி பொருட்களை விற்பனை செய்வதன் மூலம் சட்ட நடவடிக்கைகளை தவிர்த்துக் கொள்ளுமாறு யாழ். வணிகர் கழகம் அனைத்து பலசரக்கு வர்த்தகர்களையும் கேட்டுக் கொள்கிறது என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ



திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியின் 2016 ஆம் ஆண்டுக்கான பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்ற போது, பிரதம விருந்தினராக கலந்து கொண்ட கொழும்பு கட்புல, ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்புக்கள் கற்கைநெறியின் பீடாதிபதி பேராசிரியர் சரத் சந்திரஜீவா, கலைத்துறைக்கு ஆற்றி வரும் பங்களிப்புக்களை கௌரவித்து திருமறைக் கலாமன்றத்தால் 'கலைஞான சிரோமணி' என்னும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். இவ்விருதினை மன்றத்தின் நிர்வாக இயக்குநர் அருட்பணி ஜெறோ செல்வநாயகம் அடிகளார் வழங்கினார். கலைத்தூது அழகியல் கல்லூரியினால் 2016 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் ஓவியக் கூடத்தில் நடத்தப்பட்டு வருகின்ற மணற்சிற்ப பயிற்சி நெறியை பேராசிரியர் சரத் சந்திரஜீவாவும் அவரது குழுவினருமே வழிநடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





மகாத்மா காந்தி அடிகளின் 69 ஆவது சிரார்த்த தின நிகழ்வு நேற்றைய தினம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள காந்தி அடிகளாரின் சிலைக்கு முன்பாக நடைபெற்றது.

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தினால் நடத்தப்பட்ட இந்த நிகழ்வில் யாழ். இந்தியத் துணைத்தூதுவர் ஆ.நடராஜன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு காந்தி அடிகளாரின் உருவச்சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

(படங்கள்: பொ.சோபிகா)

# மத்திய நெடுஞ்சாலை பணிகள் விரைவில் ஆரம்பம்

(கொழும்பு)

மத்திய அதிவேக நெடுஞ்சாலை நிர்மாணப் பணிகளில் குருநாகல் பகுதிக்கான நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக நெடுஞ்சா லைகள் அமைச்சின் செயலாளர் டி.சி. திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இந்த நிர்மாணப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன.

இந்த நிர்மாணப் பணிகள் உள்ளூர் ஒப்பந்தக்காரர்கள் மூலம் முன்னெடுக்கப்படும் என்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் டி.சி.திசாநாயக்க தெரிவித்தார். (இ-3)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**கலாமோகன் பிரகான்**
(யா/தெல்லிப்பழை யூனியன் கல்லூரி சுன்னாகம் வாழ்வக மாணவன்)

வலம்புரிக் குடும்பத்தைச் சேர்ந்த எஸ்.கலாமோகன் (கலையா வத்தை, புலோலி, புற்றளை) அவர்களின் அன்பு மகன் பிரகான் அவர்கள் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் பெறுபேற்றைப் பெற்றதையிட்டு பெருமை கொள்வதுடன் அவர் மென்மேலும் பல சாதனைகளைப்படைக்க இறைவனை வேண்டுகின்றோம்.

Best Wishes

(இ)

வலம்புரி நண்பர்கள்


## தகவல் திரட்டுதல்

யா/ ஒட்டகப்புலம் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையின் தனிப்பட்ட வரலாறு தொடர்பான எழுத்துமூல ஆவணங்கள், தகவல்கள் தெரிந்தவர்கள் பாடசாலை அதிபருக்கு தகவல் வழங்கவும்.

(7682)

முகவரி:- அதிபர்
யா/ ஒட்டகப்புலம் றோ.க.த.க பாடசாலை
வயாவிளான்: 077 443 9471

## வலி. கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
## கேள்வி அறிவித்தல்- 2017

வளலாய் கோழி இறைச்சிக்கடையினை 2017ம் ஆண்டிற்கு (15.02.2017 - 31.12.2017 வரை) குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.
கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி: 01.02.2017-09.02.2017 பி.ப 3.00 மணிவரை.
கேள்வி ஏற்றுக் கொள்ளப்படும் திகதி : 13.02.2017 பி.ப 02.00 மணி வரை
கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி : 13.02.2017 பி..ப 02.30 மணி.

(அ-7400)

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு,மூலப்பிரதியை **"செயலாளர், வலி கிழக்கு பிரதேசசபை,தலைமை அலுவலகம்,புத்தூர்"** எனும் முகவரிக்கும், இணைப்பிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்,சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கும் ,எதிர்வரும் 13.02.2017ம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். மேலும் கேள்வியை தகுந்த காரணங்களால் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
கேள்விப்பத்திரங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| தொ. இல | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் | மீளளிக்கப் படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த தொகை | மாதாந்த வாடகை |
|---|---|---|---|---|---|
| | அச்சுவேலி உப அலுவலகம் | | | | |
| 01 | அச்சுவேலி வளலாய் கோழியிறைச்சிக் கடை | 500.00 | 2000.00 | 10000.00 | 250.00 |

கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்., கேள்வி திறந்து பரிசீலிக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர்கள் சமுகமளிக்கலாம்.

யுகராஜா ஜெலீபன், செயலாளர்
வலி.கிழக்கு பிரதேசசபை, புத்தூர்.
31.01.2017

## கல்யாண மாலை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா:23 சூரிசெவ் 10 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: A/L/பயிலுநர்
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: B/6839

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்
தொ.இ: B/6840

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:HND/தனியார் தொழில் கனடா PR
தொ.இ: B/6845

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 57 செவ் 8 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:A/L/அலுவலக உதவியாளர்
தொ.இ: B/6847

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: சூரிசெவ் 3 இல்
தகைமை/தொழில்: பட்டதாரி
தொ.இ: G/6860

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: பூராடம்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: O/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/6862

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: செவ் 1 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: A/L/ஆசிரியர்
தொ.இ: G/6864

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா: 39
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:Diploma/அரச தொழில்
தொ.இ: G/6867

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai. jaffna@ gmail.com
குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

# சரணடைந்த புலிகளின் பட்டியல் இராணுவத்திடம் இல்லை

## முல்லை.நீதிமன்றில் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சானக்க குணவர்த்தன

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இராணுவத்தினரிடம் சரணடைந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் பெயர் பட்டியல் இராணுவத்திடம் இல்லை என ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் சானக்க குணவர்த்தன முல்லைத்தீவு நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இராணுவத்தினரிடம் சரணடைந்து காணாமல் போகச்செய்யப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன் எனப்படும் சின்னத்துரை சசிதரன் உள்ளிட்ட ஐந்து பேரின் ஆட்கொணர்வு மனு மீதான விசாரணை வழக்கு விசாரணைகள் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் எஸ்.எம். எஸ் சம்சுதீன் முன்னிலையில் நேற்று விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன் போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய தினமும் இறுதிக்கட்ட யுத்தத்தின்போது இராணுவத்தினரிடம் சரணடைந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் பெயர் பட்டியல் இல்லை என ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் சானக்க குணவர்த்தன நீதிமன்றில் தெரிவித்திருந்தார். கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் நடைபெற்ற வழக்கு விசாரணையின் போது, இராணுவத்தினரிடம் சரணடைந்த தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்களின் பெயர்ப்பட்டியல் தம்மிடம் இருப்பதாகவும் அந்த ஆவணத்தை நீதிமன்றில் சமர்ப்பிப்பதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

எனினும் இந்த வழக்கு தொடர்பிலான விசாரணை கடந்த ஜூலை மாதம் 14 ஆம் திகதி நடைபெற்ற நிலையில், இறுதி யுத்தத்தில் 58 ஆவது படைப்பிரிவிடம் சரணடைந்த தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்கள், புனர்வாழ்வின் பின்னர் விடுதலை செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டு மேஜர் ஜெனரல் சானக்க குணவர்த்தனவால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணத்தை ஏற்றுக்கொள்ள முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றம் மறுத்திருந்தது.

இதேவேளை குறித்த அறிக்கையானது முழுமையற்ற ஒரு ஆவணமாக காணப்படுவதாக் அறிவித்துள்ள நீதிபதி, அனைத்து விபரங்களும் அடங்கிய முழுமையான ஆவணத்தை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டிருந்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் திருமலை அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் சார்பில் அவரது மனைவியான வடக்கு மாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன் மற்றும் கிருஷ்ணகுமார் ஜெயகுமாரி, விஸ்வநாதன் பாலநந்தினி, கந்தசாமி காந்தி, கந்தசாமி பொன்னம்மா உள்ளிட்ட ஐந்து பேரின் இந்த ஆட்கொணர்வு மனுக்களை தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை குறித்த வழக்கு எதிர்வரும் 2 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.(2-4-15-281-310)

# வட்டக்கண்டல் படுகொலையின் 32 ஆவது ஆண்டு நினைவேந்தல்







மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வட்டக்கண்டல் கிராமத்தில் இடம் பெற்ற படுகொலையை நினைவு கூறும் வகையில்"32 ஆவது" ஆண்டு நினைவு தினம் நேற்று திங்கட்கிழமை காலை மன்னார் வட்டக்கண்டல் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் அனுஷ்டிக்கப்பட்டது.

வட்டக்கண்டல் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் அதிபர் ஏ.தேவதாஸ் தலைமையிலும், வடக்கு மாகாண சபை உறுப்பினரும், எதிர்க்கட்சி தலைவருமான சி.தவராசாவின் அனுசரணையில் குறித்த நினைவேந்தல் நிகழ்வு இடம் பெற்றது.

வட்டக்கண்டல் கிராமத்தில் கடந்த 30-1-1985 ஆம் ஆண்டு மன்னார் வட்டக் கண் டல் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் அமரர் வி.சுந்தரமூர்த்தி மற்றும் ஆசிரியர்களான ரி.மகேந்திரன் மற்றும் எஸ்.இரட்ணதுரை ஆகியோர் பாடசாலை வளாகத்தினுள் வைத்து துப்பாக்கியால் சுட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளதோடு பாடசாலை மாணவர்களும் பொது மக்களும் துப்பாக்கியால் சுடப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த படுகொலைகளை நினைவு கூறும் வகையில் இடம் பெறவுள்ள "32 ஆவது" ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு இவ்வாறு அனுஷ்டிக்கப்பட்டது.

குறித்த நினைவேந்தல் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் சிறப்பு விருந்தினர்களாக பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், முன்னாள் பாராளு மன்ற உறுப்பினர் எஸ். வினோநோகராதலிங்கம், வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம், வடக்கு மாகாண மீன்பிடி போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரன் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான றிப்கான் பதியுதீன், எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு உயிரிழந்தவர்களுக்கு மலர் தூவி சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தினர்.

குறித்த அஞ்சலி நிகழ்வின் போது வட்டக்கண்டல் கிராமத்தில் கடந்த 30-1-1985 ஆம்ஆண்டுபடுகொலை செய்யப்பட்டவர்களின் உறவினர்கள், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், சர்வமதத் தலைவர்கள் என அனைவரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியமை குறிப்பிடத்தக்கது.(2-4)

அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரித்தல்

## கிளிநொச்சி பொதுச் சந்தை முன்பாக நேற்றுக் கையெழுத்து போராட்டம்




மாகாண உள்ளூராட்சி சபைத் தேர்தல் (திருத்தச்சட்டம்) சட்டத்தினால் பெண்களுக்கு கிடைக்கப் பெற்ற அரசியல் உரிமையைச்செயற்படுத்தும் நோக்கத்தோடு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் ஏற்பாட்டில் உள்ளூராட்சி அரசியலில் பெண்களின் பங்களிப்பை வலுப்படுத்தல் என்ற தொனிப் பொருளில் கிளிநொச்சி பொதுச் சந்தைக்கு முன்பாக நேற்று காலை கையெழுத்துப் போராட்ட விழிப்புணர்வு என்பன இடம் பெற்றது. இந் நிலையில் விழிப்புணர்வு திட்டத்தின் ஒருபகுதியாக ஒவ்வொரு மாவட்டங்களின் அனைத்து நகர்பகுதிகளிலும் கையெழுத்து சேகரிப்பும் விழிப்புணர்வுச் செயற்பாடுகளும் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இச்செயற்றிட்டத்தின்கீழ் நேற்று கிளிநொச்சி பொதுச் சந்தைக்கு முன்னால் பிரசாரமும் கையெழுத்து போராட்டமும் இடம்பெற்றது.

இச்செயற்றிட்டத்தை மாற்றுக்கொள்கைக்கான மத்திய நிலையம் செயற்படுத்தி வருகின்றதுடன் கடந்த 18ம் திகதி காலியில் ஆரம்பமான இந்த கையெழுத்து வேட்டை எதிர்வரும் 3ம் திகதி தலைமன்னாரில் முடிவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-312)

# 200 ஏக்கர் விவசாய நிலங்களை வன இலாகாவினர் சுவீகரிக்க முயற்சி

வன்னி வலம்

## உறுதிப்பத்திரங்கள் உள்ள எமது காணிகள் வேண்டும் என்கிறார்கள் குஞ்சுக்குளம் மக்கள்

மன்னார், குஞ்சுக்குளம் பகுதியில் தமிழ் மக்களுக்கு சொந்தமான 200 ஏக்கர் விவசாய நிலங்களை வன இலாகாவினர் சுவீகரிக்க முயற்சி எடுத்துள்ளதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அப்பகுதி மக்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது,

மன்னார், மடு பிரதேச செயலக பிரிவுட்குட்பட்ட குஞ்சுக்குளம் பகுதியில் 1965 ஆம் ஆண்டு முதல் விவசாயம் செய்து வந்த நிலங்கள் கடந்த கால யுத்த சூழ்நிலை காரணமாக விவசாயம் செய்ய முடியாது கை விடப்பட்டிருந்தது. இங்கிருந்த பலர் இடம்பெயர்ந்த நிலையில் தற்போது மீள் குடியேறி வாழ்ந்து வருகின்றனர். 1965, 1967, 1970 மற்றும் 1975 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் விவசாய செய்கைக்காக இப்பகுதியில் மக்களுக்கு காணிகள் வழங் கப்பட்டிருந்தன. அதற்கான உறுதிப் பத்திரங்கள் கூட எம்மிடம் உள்ளன. சிலரது காணிகளுக்கான பொமிற்றுக்கள் முன்னைய ஜனாதிபதியான சந்திரிகா குமாரதுங்க காலப்பகுதியில் உறுதி களாகவும் மாற்றப்பட்டு வழங்கப்பட்டிருந்தது.

அத்தகைய உறுதிகளை கொண்டுள்ள எமது விவசாய நிலங்களை நாம் துப்புரவு செய்து விவசாயம் செய்ய முயற்சிக்கும் போது குறித்த நிலங்கள் வனஇலாகாவுக்கு சொந்தம் எனக் கூறி அதில் எம்மை நுழைய அனுமதிக்கவில்லை. எமது வயல் நிலங்களுக்குள்ளும் எமது காணிகளுக்குள்ளும் தமது எல்லைக் கற்களை புதைத்து விட்டுச் சென்றுள்ளனர். இதனால் 187 குடும்பங்களுக்குச் சொந்தமான புதுக்குளம், தம்பனைக்குளம், சின்னக்குஞ்சுக்குளம், மங்கலம்பிட்டி, பாலமோட்டைத் தோட்டம் ஆகிய குளங்களுக்கு கீழ் உள்ள காணிகளும் மானாவாரி காணிகளுமாக மொத்தம் 200 ஏக்கர வரையிலான விவசாய நிலங்கள் வனஇலாகாவால் அபகரிக் கப்பட்டிருக்கிறது. இதனால் மீள்குடியேறிய போதும் எமது சொந்த நிலங்களை பறிகொடுத்தவர்களாக நாம் வாழ்ந்து வருகின் றோம்.

எமக்கு எமது சொந்த நிலங்கள் வேண்டும். உறுதிப் பத்திரங்கள் உள்ள எமது காணிகளில் நாம் விவசாயம் செய்ய அனுமதிக்கப்பட வேண்டும்.

எனவே எமது 200 ஏக்கர் வரையிலான விவ சாய நிலங்களையும் வன இலாகாவினர் உடனடியாக விடுவிக்க வேண்டும். மக்கள் பிரதிநிதிகள், ஜனாதிபதி, பிரதமர் இந்த விடயத்தில் கவனம் செலுத்தி பாதிக்கப்பட்ட எமக்குத் தீர்வைப் பெற்றுத்தர வேண்டும் எனவும் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-250)

# புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகளுக்கு வங்கிக்கடன் வழங்க பிரதமர் இணக்கம்

## இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவிப்பு




(மல்லாவி)

புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளுக்கு தலா இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான வங்கிக்கடனை வழங்குவதற்கு பிரதமர் இணக்கம் தெரிவித்துள்ளார் என சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி அக்கராயன்குளம் பிரதேசத்தின் குறைகளை கேட்டறியும் கலந்துரையாடல் நேற்று முன்தினம இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் அக்கராயன் பிரதேசத்தை அண்டிய பொது அமைப்புக்கள் கலந்து கொண்டிருந்தனர். இதன்போது வைத்தியசாலை வசதியின்மை, போக்குவரத்து, பொருளாதார மேம்பாடு, வேலைவாய்ப்பு உள்ளிட்ட பல விடயங்கள் இராஜாங்க அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து உரையாற்றிய இராஜாங்க அமைச்சர், தற்போது வேலைவாய்ப்புக்கள் தொடர்பில் பாரிய சிரமங்கள் காணப்படுகின்றன. அதற்காகவே புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளுக்கு தலா 2 இலட்சம் பெறுமதியான வங்கிக் கடனை வழங்குவதற்கு பிரதமர் இணக்கம் தெரிவித்தள்ளார்.

அது மாத்திரமன்றி யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு வாழும் பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு 5 இலட்சம் பெறுமதியான வங்கிக் கடனை வழங்குவதற்கு பிரதமருடன் பேசி வருகின்றேன். 3 வீதமான வட்டியையே அவர்கள் செலுத்த வேண்டும். ஏனையவற்றை அரசு பொறுப்பேற்கும் என அவர் தெரிவித்தார். இதேவேளை இந்த பிரதேசத்தில் காணப்படும் குறைகள தொடர்பில் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. அவற்றை தீர்ப்பதற்கான தன்னால் முடிந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தொடர்ந்து அக்கராயன் வைத்தியசாலையில் காணப்படும் குறைகள் தொடர்பில் நேரில் சென்று அவர் பார்வையிட்டிருந்தமை குறிப்பிடதக்கதாகும். (2-15-312)

# சிராட்டிகுளம் கிராமத்தில் காட்டு யானைகள் தொல்லை

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு சிராட்டிகுளம் கிராமத்தில் காட்டு யானைகளின் தொல்லை அதிகாரித்துக் காணப்படுவதாகவும் இதனால் தாங்கள் பல்வேறு சிரமங்களையும் உயிர் அச்சுறுத்தல்களையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு மாந்தை கிழக்குப்பிரதேச செயலாளர் பிரிவுக்கு கீழுள்ள சிராட்டிகுளம் கிராமத்தில், தற்போது 67 வரையான குடும்பங்களும் இதனை அண்டிய உழுவன்நரி பகுதியில், 15 வரையான குடும்பங்களும் வாழ்ந்து வருகின்றன. இவ்வாறு குறித்த கிராமங்களில் வாழும் மக்களின் பிரதான தொழிலாக விவசாயமே காணப்படுகின்றது. இந்நிலையில் இப்பகுதியில் காட்டுயானைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

அதாவது, மாலை 6 மணியானதும் பயிர்ச்செய்கை நிலங்களிலும் குடிமனைக்குள்ளும் புகும் காட்டு யானைகள், பெருமளவான பயிர்ச்செய்கைகளையும் பயன் தரும் மரங்களையும் அழித்து வருகின்றன. இவற்றை கட்டுப்படுத்தும் பொருட்டு, இரவு வேளைகளில் விழித்திருந்து காவல் காக்கவேண்டிய நிலை காணப்படுவதுடன், உயிர் அச்சுறுத்தல்களையும் எதிர்கொள்ளவேண்டியுள்ளது. தங்களது கிராமத்துக்கான பிரதான வீதியாக உள்ள நட்டாங்கண்டல் சிராட்டிகுளம் வீதி, நீண்டதூரம் காட்டுப்பகுதியாக காணப்படுவதனால், மாலை வேளைகளிலும் அதிகாலையிலும் பயணிக்க முடியாத நிலை காணப்படுவதாகவும் இப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (2-281)






யாழ்ப்பாணம் Rotaract Club of Nallur Heritage இனால் மு/சுதந்திரபுரம் அ.த.க. பாடசாலையில் கல்வி கற்று வரும் வறுமைக்கோட்டின் கீழ்வாழும் மாணவர்களுக்கு அண்மையில் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்ட போது...

# முல்லைத்தீவு கடற்பரப்பில் இந்திய றோலர்கள் அத்துமீறல்

## கடற்படையினருக்கு அறிவிப்பு-அரச அதிபர்

முல்லைத்தீவு கடற்பரப்பில் இந்திய றோலர்களின் மீன்பிடி தொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர்களின் சங்கங்களின் சமாசத் தலைவரினால் தனக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு கடலில் இந்திய றோலர்களின் அத்துமீறிய மீன்பிடி தொடர்பாக வினவிய போது அவர் இதனைத் தெரிவித்தார். சமாசத் தலைவர் தெரிவித்த தகவலின் அடிப்படையில் கடற்படையினருக்கு தான் அறிவித்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

முல்லைத்தீவுக் கடலிலே இந்திய றோலர்களின் அத்துமீறிய மீன்பிடிக்கு எதிராக கடற்றொழிலாளர்களினால் பல்வேறு வழியிலான போராட்டங்கள், பேச்சுவார்த்தைகள் நடத்திய நிலையில் ஓய்ந்திருந்த இந்திய றோலர்களின் அத்துமீறிய மீன்பிடி மீண்டும் ஆரம்பித்துள்ள



நிலையில் இதனைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டு மெனவும் தொடர்ச்சியாக முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்து வருகின் றமை குறிப்பிடத்தக்கது. (2-312)

# இயன் மருத்துவ சிகிச்சைக்கான கட்டில் அன்பளிப்பு

லண்டனிலுள்ள PATH TO THE FUTURE (எதிர்காலத்திற்கான பாதை) என்ற அமைப்பினரால் வவுனியா மாவட்டத்தில்அமைந்துள்ள உயிரிலை அமைப்பினருக்கு இயன் மருத்துவ சிகிச்சைக்காக physiotherapy bed அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை இந்து வாலிபர்சங்கம் ஊடாக குறித்த அமைப்பினர் விடுத்த வேண்டுகோளை அடுத்து அவ் அமைப்பினால் இயன் மருத்துவ சிகிச்சைக்கான கட்டில் ஒன்றை லண்டனில் தருவித்து வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் ஊடாக உயிரிலை அமைப்பின் காரியாலயத்தில் வைத்து அதன் இணைபபாளரிடம்வழங்கிவைத்தனர். (2-15)





மு/மாங்குளம் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு அண்மையில் பாடசாலை அதிபர் த.யோகானந்தராசா தலைமையில் நடைபெற்ற போது... (படங்கள்:-பனிக்கன்குளம் செய்தியாளர்)

# இறுதி யுத்தம் நடைபெற்ற இடங்களிலுள்ள பதுங்கு குழிகளை மூடித்தருமாறு கோரிக்கை

(பரந்தன்)

இறுதிப்போர் நடைபெற்ற மாத்தளன், அம்பலவன் பொக்கணை, வலைஞர்மடம், முள்ளிவாய்க்கால் ஆகிய பகுதிகளிலுள்ள பதுங்கு குழிகளை மூடி உக்காத பொருட்களை அகற்றித் தருமாறு முல்லைத்தீவு மாவட்டச் செயலரிடம் இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.


போர்க்காலத்தில் போரில் ஈடுபட்டவர்களினாலும் தற்காப்பைத் தேடிய மக்களினாலும் ஆயிரக்கணக்கான பதுங்கு குழிகள் இப்பகுதியில் அமைகக்கப்பட்டன.

அவற்றில் பல இன்று வரை மூடப்படாமல் இருப்பதன் காரணமாக குறித்த குழிகளில் மழை வெள்ளம் தேங்கி நிற்பதன் காரணமாக டெங்கு போன்ற அபாய நோய்கள் ஏற்படுத்தும் வகையில் நுளம்புகளின் பெருக்கம் காணப்படுகின்றன.

நீண்ட மண் அணைகளின் காரணமாக மழை வெள்ளம் தேங்கி நிற்பதன் காரணமாக விவசாய முயற்சிகள் முன்னெடுக்க முடியாத நிலைமை இருப்பதாகவும் கிராம மட்டத்திலும் பிரதேச செயலகம், மாவட்டச் செயலகம் ஆகியவற்றில் நடைபெற்ற கூட்டங்களில் மேற்படி கிராமங்களில் காணப்படும் பதுங்கு குழிகளை மூடி உக்காதப் பொருட்களை அகற்றுமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு நடவடிக்கை எடுக்கப் படவிலலை என அப் பகுதி மக்கள் சுட்டிக் காட்டு கின்றனர்.

இதனைக் கருத்திற் கொண்டு மாவட்டச் செயலர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மேற்படி கிராமங்களின் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-312)

# புத்துயிர்ப்பெய்தட்டும் புதிய யுகப்புரட்சி!



கம்பவாரிதி இ.ஜெயராஜ்

(தொடச்சி...)

அங்ஙனம் அறிக்கை விட்டிருந்தால், மறுநாள் கூட் டத்தைக் குழப்ப காவல்துறைக்குக் காரணம் இல்லாமல் போயிருக்கும். குழப்பமின்றி கூட்டம் முடிவடைந்திருக்கும். விளைச்சல் வீடு சேர்ந்திருக்கும்.

இச்சறுக்கல்களால் எத் தனை வாய்ப்புக்களை இழ ந்து போனார்கள் இவர்கள். அமைதியாய்ப் போராட்டம் வெற்றியோடு முடிந்திருந்தால், இனியும் இவர்கள் எப்போ வேண்டுமானாலும் கூடலாம் எனும் அச்சத்தில், ஆட்சியாளர்கள் தம்மைத்தாம் திருத்த வேண்டிய அவசியம்ஏற்ப்பட்டிருக்கும்.

தமிழரையும் தமிழ்நாட்டையும் ஏதும் செய்யலாம் எனும், மத்திய ஆட்சியின் மனநிலை மாறியிருக்கும். தமிழ்நாட்டின் அரசியல் போக்கே அதிர்ந்து திசை திரும்பியிருக்கும். வெற்றியின் விளிம்பு வரை வந்துவி ட்டு வீணே தோற்றுநிற்கி றார்கள்.

மரமொன்றில் ஏறுகிற வன் அதன் உச்சியைத் தொட்டபின்பும, ஊக்கமிகுதியால் மேலும் ஏறத்த லைப்ப்பாஸ்அது அவனது உயிர க்கு இறுதியாகிவிடும் என்று, அன்றே நம் பாட்டன் வள்ளுவன் சொன்னான்.

'நுனிக்கொம்பர் ஏறினார் அஃது இறந்து ஊக்கின் உயிர்க்கு இறுதியாகி விடும்' வெளிநாட்டி லிருந்து வேற்றுப்பாசையில் சொல்லியிருந்தால் கேட்டிருப்போம்.

நம் நாட்டிலிருந்து நமது பாசையில் சொன்னதால் அலட்சியப்படுத்தி விட்டோம்.

'பூனை மெலிந்தால் எலி சுகம் கேட்குமாம்.' உங்களது விஸ்வரூபம் கண்டு, ஆடி அதிர்ந்து அசைவற்று நின்றவர்கள் எல்லாம், இன்று உங்கள் முயற்சி வீழ, மீண்டும் தம் உபதேசப் படலத்தைத் தொடக்கியுள்ளனர்.

அரசியலாளர், நடிக்ர்கள், அறிஞர்கள் என பல்துறை சார்ந்தாரும்,ஆதரவு காட்டியும், அறிவுரை கூறியும் வெளியிடும், அறிக்கைகளை யும் பேச்சுக்களையும் கேட்க ஆத்திரமாய் வருகிறது. உங்கள் அவசரத்தால் வந்த விளைவு.

இன்று அனைவரது கோபமும் காவல்துறையினரின் மீதாகியிருக்கிறது. ஆழச் சிந் தித்தால் அவர்களையும் முழு மையாய்க் குற்றம் சொல்ல முடியாதெனவே படுகிறது.

உத்தரவிற்குப் பணிந்து இயங்குவது அவர்களுக்கு ஊட்டப்பட்ட முதற்பாடம். நீங்கள் போராடத் தொடங்கிய காலத்திலிருந்து உங்கள்மீது, அவர்கள் அன்பும் அனுசரணையும் காட்டி நின்றதை மறக்க முடியாது.


நிறைவுநாளில் மற்றவர்களால் பயன்படுத்தப்பட்ட கருவிகளாய்த்தான், அவர்களைக் கருத வேண்டியிருக்கிறது. இம்மாபெரும் புரட்சி இளைஞர் திறனால் வென்றதாய் முடிந்தால், மக்கள் ஆதரவு அவர்கள்பால் திரும்பி, தம் அரசியல் பாதையை அடைக்கும் கல்லாகிவிடும் என நினைந்த, யாரோ ஒருவரின் உத்தரவே காவல் துறையை இந்த அளவுக்கு இறக்கியிருக்கிறது.

அந்த உத்தரவு மத்தியி லிருந்து வந்ததோ? மாநிலத் திலிருந்து வந்ததோ?, யார் அறிவார்! அது இறைவனு க்கே வெளிச்சம்.

அதுவரை நட்பாயிருந்த காவல் துறையின் நிறைவு நாள் கோரிக்கையை, உங்கள் போராட்டத்தின் வெற்றி உறுதி செய்யப்பட்ட நிலையில், அஞ்சாமல் நீங்கள் ஏற்றிருக்கலாம்.

அப்போதே நீங்கள் கலைந்திருந்தால் காவல்துறையை முன்வைத்து, உங்களை வீழ்த்த திட்டம் போட்டவர்களின் எண்ணம் சிதைந்திரு க்கும். வீணாக நீங்களே அவர்தம் சூழ்ச்சிக்கு வழிதிறந்து விட்டீர்கள்.

பல தீயசக்திகள் உட்புகுந்து விட்டதாய் இன்று நீங்களே சொல்கிறீர்கள். ஒரு பேச்சுக் காய் வைத்துக் கொள்ளுங்கள். இத்தனை இலட்சம் பேர் கூடியிருந்த அவ்விடத்தில், நெஞ்சில் நஞ்சு பதித்த யாராவது ஒரு தீயவன், குண்டொ ன்றை வெடிக்கச் செய்திருந்தால் நிலைமை என்னாகியிருக்கும்?





அப்போது உலகம் யாரைப் பழி சொல்லியிருக் கும். இந்நிலைமையையும் நாம் எண்ணிப்பார்க்கத் தான் வேண்டும்.

காவல்துறை என்ற அமைப்பு சமுதாயத்தின் காவல் அமைப்பு. குறித்த உங்களின் நேர்மையான எழுச்சிக்காக, அதன் கட்டுப்பாட்டை உடை க்க நினைத்தால், அதனை முன்னுதாரணமாகக் கொண்டு,

தீயர் பலரும் அப்பாதை யைப் பயன்படுத்த நினைப்பர். அங்ஙனம் நினைந்தால் சமுதாயத்தின் நிலை என்னாகும்?

எனவே காவல்துறையின் கட்டுப்பாட்டை மீற நினை ந்தது, உங்கள் தவறு என்பதை நீங்கள் உணர வேண்டு ம்

எவர் சொல்லி செய்திருந்தாலும் எக்காரணத்தால் செய்திருந்தாலும், உங்களை அடக்கக் காவல் துறை கையாண்டமிருக நெறிக்கு,எவரும் எதனாலும் சமாதானம் காண முடியாதென்பது மட்டும் நிச்ச யம். அது எத்தகைய உத்தரவாக இருந்தாலும், நிற்பவன் என் இளைஞன், அவன் நெறிகடவாது நிற்கின்றான்.

நிமிர்ந்த அவனது இலட்சி யம் நேர்மையானது என்பவற்றையெல்லாம், துளியளவேனும் அவர்கள் நினைந்திருந்தால், இங்ஙனம் நெறி கடந்து இயங்கியிருக்கமாட்டார்கள்.

நேர்மையைக் காக்கத் தான் நெஞ்சத்தைக் கல்லாக்க வேண்டும்.அநீதிக்கும் அதுவே விதியாகுமா? துளியளவே னும் அவர்கள் நெஞ்சில் அறம் இருந்தால், சாகும் வரை இனி அவர்களால் நிம்மதியாய்ச் சோறுண்ண முடியாது என்பது மட்டும் நிச்சயம்.

நிறைவாய் ஒன்றைச் சொலல விரும் புகிறேன் . இலட் சியப் பாதையில் வெற்றியும் தோல் வியும் சகஜமே.

ஒரு சில சறுக்கல்களால் உச்சம் தொடும் வாய்ப்பிழந்து போனீர்கள் அவ்வளவே!

ஆனாலும் நீங்கள் உண் டாக்கிய அதிர்வு தமிழகத் தைத் தாண்டி, பாரதத்தையே அசைத்து விட்டது என்பதை எவராலும் மறுக்கமுடியாது.

ஆயிரம் காரணங்கள் சொல்லி அலைக்கழித்தவர்கள், ஒரே வாரத்தில் உங்கள் போராட்டத்திற்கு அடிபணி நத ஒன்றே, உங்களின் ஆற்ற லுக்காம் வீரிய சான்றிதழ்.

வெற்றி மகிழ்வைத்தரும்!

தோல்வி அனுபவத்தைத் தரும்! உங்களுக்கு அனுபவம் வாய்த்திருக்கிறது. உங் ள் வெற்றியின் உயரங்கள் அதிகரிக்க நிச்சயம் அவ் அனுபவம் உதவும். தோல்வியில் வரும் பெரிய ஆபத்தே தளரச்சிதான்.

ஒருவரில் ஒருவர் கைப் ற்றி தமிழகத்தையே வளை தது நின்ற உங்களின் இணை ப்பில், தோல்வியால் தளர்ச்சி வந்துவிடாமல் உடன் உறுதிப்படுங்கள். இளகிய இரும்ப பைக் கண்டால் கொல்லன் ஓங்கி ஓங்கி அடிப்பானாம்.

நீங்கள் இளகினாலும் நிலைமை அதுவாகத்தான் இருக்கும். அரசியலாளர், விமர்சகர்கள் எனப் பலரும், உங்கள் தளர்ச்சியினூடு நுழைந்து தம் தலைமையை உறுதி செய்ய நினைப்பர். அதற்கான அடையாளங் கள் இப்போதே தெரியத் தொடங்கிவிட்டன.அவர்களை வெற்றி பெற விட்டுவிடாதீர்கள்.

தோல்வியில் சிறு தளர்ச்சி வருவது இயல்புதான். தோல்விக்கான காரணங்களை ஆராய்ந்து, அக்காரணங்கள் மீண்டும் வராமலிருக்க வழி சமைப்பதே அறிவுடைமை. உங்கள் எழுச்சியோடு ஒப்பிடுகையில் நிகழ்ந்திருக்கும் தோல்வி மிகச் சிறிதே. அத்தோல்வித் தளர்வினால், விளைந்த அப்பெரு வெற்றியை வீழவிட்டு விடாதீர்கள்.

இனி தமிழ்நாட்டில் தவறு செய்ய நினைக்கும் எவரும் உங்கள் ஆற்றல் நினைந்து அஞ்ச வேண்டும்!

நீங்களும் ஒதுங்கிவிட்டால், இனித்தமிழ்நாட்டில் தர்மம் காக்க வேறெவரும் முன்வரப்போவதில்லை. அது நினைந்து தளர்ந்த உங்கள் கைகளை மீண்டும் இணைத்து உறுதி செய்யுங்கள்.

இத்தோல்வி உங்களின் உறுதிப்பாட்டிற்கு இறைவன் வைத்திருக்கும் சோதனை. வென்று காட்டுவதில் தான் உங்கள் வெற்றி தங்கியிருக்கிறது. உங்கள் வெற்றி மட்டுமல்ல தமிழர்களின் வெற்றியுமாம்.

உண்மையாக உயர்ந்தவர்கள் ஒருசிலரை முன்வைத்து, மீண்டும் ஓரிடத்தில் கூடுங்கள். உங்களுக்குள் ஏற்பட்டிருக்கும் முரண்பாடுகளை, பகிரங்க அரங்குகளில் விமர்சனம் செய்வதை விடுத்து, தனித்துக் கூடித் தவிர்த்துக்கொள்ளுங்கள்.

இனிமேல் நிகழப்போகும் உங்கள் செயற்பாட்டை நிர்வாகமயப்படுத்துங்கள். இன்று மக்களின் கரைகடந்த பரிதாபம் உங்கள் மேல் பரவிக்கிடக்கிறது.

இச்சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்கள். மூலைமுடுக்குகளில் உள்ள கிராமங்கள் தோறும் கூட, உங்கள் நேர்மை, நிர்வாகம் விரிய வேண்டும். தேசப்பற்று, இனப்பற்று, மொழிப்பற்று, அறப்பற்று என்பவற்றை உறுதி செய்து, எவரும் உங்களை நிராகரிக்கமுடியாத நிலை எய்துங்கள். பாரதத்தின் உயர்வுக்கு தமிழர்கள் வழிகாட்டினர் என்னும் வரலாற்றுப் பெருமையை, அசையாது நின்று உறுதி செய்யுங்கள்.

உங்கள் தொடர் வெற்றிகளுக்காய்ப் பிரார்த்தித்துக் காத்திருக்கிறோம். (முற்றும்)

# எல்லை நிர்ணய அறிக்கையை வர்த்தமானியிடுதல் தாமதமாகும்

(கொழும்பு)

மிகுந்த எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தியுள்ள எல்லை நிர்ணயச் செயற்குழுவின் அறிக்கையை, இம்மாத இறுதிக்குள் வெளியிடுவது குறித்துத் தனக்குக் காணப்படும் விருப்பமின்மையை வெளிப்படுத்தியுள்ள உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைஸர் முஸ்தபா, அறிக்கையில் காணப்படும் தவறுகளை, முடியுமானவரையில் விரைவாகத் திருத்தி, இறுதி அறிக்கையை விரைவில் அனுப்புமாறு கோரியுள்ளார். அனைத்துக் கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் இச்செயற்குழுவின் அறிக்கை, அதன் தலைவர் அசோக பீரிஸால், ஜனவரி 12ஆம் திகதி, அமைச்சர் பைஸரிடம் கையளிக்கப்பட்டது. அத்தோடு, அந்த அறிக்கையை மீளாய்வு செய்யவும் அதில் காணப்படும் தவறுகளைத் திருத்துவதற்கும், மேலுமொரு வாரத்தை, அதன் தலைவர் கோரியிருந்தார்.

தவறுகளைத் திருத்திக் கொண்டு, அதை வர்த்தமானியிடுவதற்கு, ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்னர் அறிவிப்பதாகவும், தலைவர் அசோக பீரிஸ் குறிப்பிட்டிருந்தார்.



எனினும், அந்த அறிக்கையில், மேலும் பாரிய பிழைகளை, உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு, தற்போது கண்டுபிடித்துள்ளதாகவும், அதன் காரணமாக அவ்வறிக்கை வர்த்தமானியிடுதல் தாமதித்துள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது. அசோக பீரிஸ்க்கு அமைச்சர் பைஸர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில், உள்ளூராட்சிகளுக்கான திருத்தப்பட்டுள்ள எல்லைகளைக் குறிப்பிடுவதற்கு இவ்வறிக்கை தவறியுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளதோடு, அவ்வாறான தவறுகளின் காரணமாக, உள்ளூராட்சிகள் எவை என்பதை வாக்காளர்கள் அறிய முடியாது எனவும் தெரிவித்தார்.

அதைவிட, தமிழுக்கும் ஆங்கிலத்துக்கும் மேற்கொள்ளப்பட்ட மொழிபெயர்ப்பில், தவறுகள் காணப்படுவதாக அறிவிக்கப்படுகிறது. இந்த அறிக்கையில் காணப்படும் பெரியளவிலான தவறுகள் குறித்து, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் விளக்கமளிப்பது தனது கடமை எனத் தெரிவித்துள்ள அமைச்சர் பைஸர் முஸ்தபா, இந்தத் தவறுகள் குறித்து என்ன செய்வது என, செயற்குழு தான் பதிலளிக்க வேண்டுமெனவும் தெரிவித்தார்.(இ-3)

# பிரபஞ்ச அழகிப் போட்டியில் இலங்கைப் பெண் பங்கேற்பு




பிரபஞ்ச அழகி இறுதிப் போட்டியில் இலங்கைப் பெண் ஒருவர் பங்கேற்றுள்ளார். 26 வயதான ஜயதி டி சில்வா என்ற யுவதியே பிரபஞ்ச அழகி பட்டத்தை இலக்கு வைத்துப் போட்டியில் இறங்கியுள்ளார். குறித்த யுவதி கொழும்பைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

# மின் கட்டணத்தை குறைத்தால் பரிசு

(கொழும்பு)

அடுத்த சில மாதங்களில், மின்சாரப் பட்டியல் கட்டணத்தைக் குறைக்கின்ற வாடிக்கையாளர்களுக்கு, போட்டி முறையில் பரிசுகளும் வெகுமதிகளும் பல சலுகைகளும் வழங்கும் திட்டமொன்றை அறிமுகப்படுத்தவுள்ளதாக, மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

தற்போது நாட்டில் நிலவி வரும் நெருக்கடி நிலைமையினை இல்லாது ஒழித்து, மின்சாரத்தைத் தட்டுப்பாடு இன்றிப் பெற்றுக் கொடுப்பதற்காகவே இத்திட்டத்தை அறிமுகப்படுத்தவுள்ளதாக, கண்டியில் நேற்று முன்திணம் நடைபெற்ற ஊடகவியலாளர்மாநாட்டில்கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், இந்நெருக்கடி நிலைமையைச் சமாளிக்கும் பொருட்டு, அவசர மின் உற்பத்தி இயந்திரங்களைக் கொள்வனவு செய்யவுள்ளதாகவும், அமைச்சர் இதன் போது தெரிவித்தார். (இ-3)

# அரச அதிகாரிகளுடன் எவ்வாறு செயற்படுவது? அரசியல்வாதிகளுக்கு விரைவில் செயலமர்வு

அரசாங்க அதிகாரிகளுடன் எவ்வாறு செயற்படுவது என்பது குறித்து அரசியல்வாதிகளுக்கு தெளிவுபடுத்தப்பட உள்ளது.

அரசியலில் பிரவேசிக்கும் புதியவர்களுக்கு அரசாங்க அதிகாரிகளுடன் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது குறித்து தெளிவுபடுத்தும் நோக்கில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, விரைவில் செயலமர்வு ஒன்றை நடத்த உள்ளதாக பொது நிர்வாக அமைச்சர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

ஊடகங்களிடம் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் குறித்து பிரதமர் மற்றும் ஜனாதிபதி ஆகியோருக்கு தெளிவுபடுத்தியிருந்தேன்.

குறிப்பாக அரசியலுக்கு வரும் புதியவர்கள் அரச நிர்வாக விடயங்களில் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது குறித்து பிரதமர் தெளிவுபடுத்த உள்ளார்.

அரச அதிகாரிகளை பாதுகாக்க வேண்டியது அவசியமானதாகும். ஏதேனும் தவறுகள் இடம்பெற்றால் அவற்றை திருத்திக் கொள்ள வேண்டும்.

துறைசார் அமைச்சர் என்ற ரீதியில் அரச அதிகாரிகளை பாதுகாத்துக்கொள்ள வேண்டிய கடப்பாடு எனக்கு உண்டு. அதனை உரிய முறையில் நான் மேற்கொள்வேன் என அமைச்சர் வஜிர அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

கம்பஹா மாவட்டம் திவுலப்பிட்டிய பிரதேச செயலாளர் எச்.எம்.ஏல்.எஸ்.ஹேரத்தை ஊடகங்களின் முன்னிலையில் பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க திட்டிய சம்பவம் குறித்து ஊடகங்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைத் தெரிவித்தார். (இ-3)

# மும்பை விமான நிலையத்தில் இரு இலங்கையர்கள் கைது

இந்தியாவிலிருந்து சட்டவிரோதமான முறையில் 31 ஆயிரம் அமெரிக்க டொலர்களை கடத்த முற்பட்ட இலங்கையர் இருவர் இந்தியாவின் மும்பை விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கையைச் சேர்ந்த ஆதில் அப்துல் ஜப்பார் மற்றும் மொஹமட் ரம்ஸான் ஆகியோரே இவ்வாறு நேற்றுக் கைது செய்யப்பட்டவர்கள் என புதுடில்லி தூதுவர் காரியாலய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ-3)

# உரோமத்துக்காகச் சண்டை

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரனின் மருமகனும் பேர்பெச்சுவல் ஹோல்டிங்ஸ் நிறுவனத்தின் தலைவருமான அர்ஜுன் அலோஷியஸின் உடலிலிருந்து, அனைத்து உரோமங்களையும் நீக்கி, அதை ஒன்றிணைந்த எதிரணியிடம் காட்டவுள்ளதாக, சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கியின் பிணைமுறி மோசடியில் சம்பந்தப்பட்டவர் என எதிரணியினரால் சந்தேகிக்கப்படும் அர்ஜுன் அலோஷியஸை, அரசாங்கம் பாதுகாத்து வருவதாக, எதிரணியினர் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இதன் ஓர் அங்கமாக, அண்மையில் கருத்துத் தெரிவித்த ஒன்றிணைந்த எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன, அரசாங்கத்தால் இயலுமென்றால் அர்ஜுன் அலோஷியஸின் உடலிலிருந்து ஓர் உரோமத்தையாவது பிடுங்கிக் காட்டட்டும் எனச் சவால் விடுத்திருந்தார்.

இதற்குப் பதிலளிக்கும் விதமாக, அநுராதபுரத்தில் உரையாற்றிய பிரதியமைச்சர் ரஞ்சன், அர்ஜுன் அலோஷியஸின் உடலிலிருந்து ஓர் உரோமத்தை மாத்திரமன்றி, அவரது உடலில் காணப்படும் அத்தனை உரோமத்தையும் நீக்கவுள்ளதாகவும் அதன் பின்னர் அர்ஜுனின் உடலை, நாடாளுமன்ற உறுப்பினருக்குக் காட்டவுள்ளதாகவும் தெரிவித்தார். (இ-3)

# 'ஆபத்தில் பொருளாதாரம்' கூட்டு எதிரணி எச்சரிக்கை

இலங்கையின் பொருளாதாரம், பூகோள பொருளாதாரச் சுட்டிகள் பலவற்றில் கீழிறங்கியுள்ளதைச் சுட்டிக்காட்டிய ஒன்றிணைந்த எதிரணி, மத்திய வங்கியில் ஊழல்கள் நடைபெறுவதாகவும் அதுவே இதற்குக் காரணமெனவும் தெரிவித்துள்ளது. இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன, "புளூம்பேர்கின் பூகோள ஆபத்து அறிக்கையிடலிலும் ட்ரான்பரன்ஸி இன்டர்நஷனலின் சர்வதேச ஊழல் சுட்டெண் 2016இலும் பூகோள பட்டினிச் சுட்டெண்ணிலும் ஃபிற்ச தரப்படுத்தலிலும், இலங்கையின் பொருளாதாரம், பின்தள்ளப்பட்டுள்ளது. இந்தச சந்தர்ப்பத்தில், ரூபாயின் மதிப்பிறக்கத்தைத் தடுப்பதற்காக, 100 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்கள், மத்திய வங்கியால் விநியோகிக்கப்பட்டுள்ளன. நாட்டின் இருப்புகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் காணப்படும் நிலையிலேயே இது மேற்கொள்ளப்பட்டுள்ளது" என்றார். சர்வதேச நிறுவனங்களின் இந்த அறிக்கைகளைத் தொடர்ந்து, இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வதா, இல்லையா? என முதலீட்டாளர்கள் சிந்தித்து வருவதாகவும், அவர் தெரிவித்தார்.

"நாட்டின் பொருளாதாரம், பாரியளவில் பாதிக்கப்பட்டுள்ளமையை, இந்த அறிக்கைகள் காட்டுகின்றன. பொருளாதாரம் பாதிக்கப்படவில்லை என அரசாங்கம் திரும்பத் திரும்ப சொல்கின்றமைக்கு மத்தியிலேயே இது நடைபெற்றுள்ளது" என்று அவர் தெரிவித்தார். நாட்டில் நிலவுகின்ற பொருளாதார நிலைமையைத் தொடர்ந்து, 2.6 பில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களை, முதலீட்டாளர்கள் திரும்பப்பெற்றுள்ளதாகத் தெரிவித்த அவர், இதற்கு இந்த அரசாங்கமே நேரடிப் பொறுப்பு எனவும் குற்றஞ்சாட்டினார்.. இந்த ஆபத்தை, அரசாங்கம் உணர்ந்துள்ளதாகத் தெரிவித்த அவர், அதை மறைக்க முயல்வதாகவும், இந்த இழப்பை ஈடுகட்டுவதற்காக, நாட்டின் நிலங்களையும் ஏனைய அரச நிறுவனங்களையும் விற்பதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார். (இ-3)

# மூன்று வருட பட்டப்படிப்பிற்காக சீனா செல்கிறார் கோத்தபாய

அரசியல் தொடர்பில் சிறப்பு படிப்பிற்காக பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ சீன பல்கலைக்கழகத்திற்கு செல்ல தீர்மானித்துள்ளதாக அரசியல் தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மூன்று வருட பட்டப்படிப்பிற்காக சீன அரசாங்கத்தினால் அவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும், அதற்கான இணைப்பு நடவடிக்கைகளை முன்னாள் அமைச்சர் மிலிந்த மொரகொடவின் பாத் பைண்டர் என்ற அரச சார்பற்ற அமைப்பினால் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அந்த தகவல் வட்டாரங்களின் மூலம் தெரியவருகின்றன.

இலங்கையில் அரசியல் முகாமைத்துவம் மேற்கொள்ளும் நிறுவனமான பாத் பைண்டர், சீனாவின் CICIR (China Institutes of contemporary International Relations) நிறுவனத்துடன் உடன்படிக்கைக்கு வந்துள்ளது.(இ-3)

# நாமல் ராஜபக்ஷவின் மீது மற்றுமொரு குற்றச்சாட்டு

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தில் துறைமுக அமைச்சில் வேலை வாய்ப்பு வழங்கியமை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

நாமலுக்கு எதிராக குற்றச்சாட்டை நிரூபிக்கும் வகையில் தற்போது கடிதம் ஒன்று கிடைத்துள்ளது.

இதன் ஊடாக அப்போதைய காலப்பகுதியில் துறைமுகங்கள் அமைச்சில் வேலை வாய்ப்பு வழங்குவது தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளும் நபராக நாமல் ராஜபக்ஷ செயற்பட்டுள்ளார் என தெரிய வந்துள்ளது.

அந்த அமைச்சின் அமைச்சராக அப்போதைய காலப் பகுதியில் செயற்பட்ட ரோஹித அபேகுணவர்தன, வேலை வாய்ப்பு வழங்குவதற்கான அனுமதியை நாமல் ராஜபக்ஷவிடம் பெற நேரிட்டுள்ளதாக தெரிய வருகின்றது. (இ-3)

# கம்பளாவுக்கு அவசர சட்டம் கோரி இருநூறு எருமைகளுடன் பேரணி



கர்நாடக மாநிலத்தில் கம்பளா போட்டியை நடத்த அவசர சட்டம் பிறப்பிக்க வலியுறுத்தி இருநூறு எருமைகளுடன் போராட்டக்காரர்கள் பேரணி நடத்தினர். தமிழகத்தில் ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக போராட்டம் தீவிரமடைந்ததையடுத்து மாநில அரசு சார்பில் சட்டத்திருத்தம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதேபோல் கர்நாடகதில் நீதிமன்ற உத்தரவால் தடைபட்டுள்ள, பாரம்பரிய கம்பளா விளையாட்டை (எருமைப் பந்தயம்) நடத்த அனுமதி அளிக்கக்கோரி போராட்டம் நடைபெற்று வருகிறது.

ஜல்லிக்கட்டுக்கு ஆதரவான போராட்டம் போன்று, சமூக வலைத்தளங்கள் மூலம் இளைஞர்கள் ஒன்றிணைந்து போராடத் தொடங்கியுள்ளனர்.

இதனால், பொது மக்கள் கூடும் பகுதிகளில் பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இந்நிலையில், பொலிஸ் பாதுகாப்பையும மீறி தட்சிண கன்னட மாவட்டத்தில் ஆயிரக்கணக்கானோர், பேரணி நடத்தி தங்கள் எதிர்ப்பை பதிவு செய்தனர்.

மூடாபித்ரியில் உள்ள ஸ்வராஜ் மைதானத்தில் சுமார் 200 எருமைக் காளைகளுடன் திரண்ட போராட்டக்காரர்கள், அங்கிருந்து 4 கிமீ தூரம் பேரணியாகச் சென்று கடற்கரை பகுதியில் உள்ள கம்பளா டிராக்கில் போராட்டத்தை நிறைவு செய்தனர்.

பேரணியின்போது கம்பளாவுக்கு அனுமதி அளிக்கும் அவசர சட்டம் இயற்ற வேண்டும் என்ற வாசகம் அடங்கிய பதாகைகளுடன் முழக்கமிட்டனர்.

கம்பளா தொடர்பான வழக்கு தற்போது கர்நாடக உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. இவ்வழக்கின் அடுத்தகட்ட விசாரணை இன்று 31ஆம் திகதி நடைபெற உள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)



டில்லியில் குடியரசு தின நிறைவு விழாவை முன்னிட்டு நடைபெற்ற முப்படை வீரர்களின் பாசறை திரும்பும் நிகழ்ச்சியில் நேற்று முன்தினம் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி, பிரதமர் மோடி ஆகியோர் கலந்து கொண்டனர்.

# கம்பளா போட்டிக்கு அவசர சட்டம் முதலமைச்சர் சித்தராமையா முடிவு



ஜல்லிக்கட்டு நடத்தக் கோரி தமிழகத்தில் போராட்டம் தீவிரம் அடைந்ததை தொடர்ந்து அவசர சட்டம் இயற்றப்பட்டது. இதன் எதிரொலியாக கர்நாடகவில் கம்பளா போட்டிக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்கக் கோரி பல்வேறு இடங்களில் இளைஞர்கள் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

மங்களூர் அருகேயுள்ள மூடுபிதரியில் உள்ள சுதந்திர பூங்காவில் நேற்று முன்தினம் ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதுகுறித்து மூடுபிதரி எம்எல்ஏ அபயசந்திரா ஜெயின் கூறும்போது, "பாரம்பரிய விளையாட்டான கம்பளா போட்டிக்கு தடை விதித்ததை ஏற்க முடியாது. ஜல்லிக்கட்டுக்காக தமிழக அரசு அவசர சட்டம் இயற்றியதை போல, கர்நாடக அரசும் கம்பளா போட்டிக்காக அவசர சட்டம் இயற்ற வேண்டும்" என்றார்.

இதேபோல மங்களூர், உடுப்பி, பெங்களூர், மைசூரு உள்ளிட்ட இடங்களிலும் இளைஞர்கள் கம்பளா போட்டி நடத்தக்கோரி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் கம்பளா போட்டிக்கு அவசர சட்டம் இயற்றுவது தொடர்பாக முதலமைச்சர் சித்தராமையா, சட்ட அமைச்சர் ஜெயசந்திரா மற்றும் சட்ட நிபுணர்களுடன் நேற்று முன்தினம் ஆலோசனை நடத்தினார். அப்போது கம்பளா போட்டிக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்கவும் அவசர சட்டம் இயற்றவும் முடிவு எடுக்கப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது. (இ-3)

# பவானி ஆற்றின் குறுக்கே அணை கட்டுவதற்கு எதிர்ப்பு




கேரளாவில் பவானி ஆற்றின் குறுக்கே அணை கட்டுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை த.பெ.தி.க பொதுச்செயலாளர் கு.ராமகிருஷ்ணன் தலைமையில் அனைத்து கட்சி சார்பில் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம் பெற்றது.

இதன்படி, தி.மு.க. உட்பட அனைத்து கட்சி உறுப்பினர்களும் விவசாய சங்கத்தினைச் சேர்ந்த ஆயிரக்கணக்கானோரும் பங்கேற்றிருந்தனர். (இ-7)

பாரதச் செய்தி

# மாணவர்களின் போராட்டத்தை திசை திருப்பியது தி.மு.க.தான்

## சசிகலாவின் கணவர் நடராஜன் குற்றச்சாட்டு



ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக தமிழகத்தில் அறவழியில் போராடிய மாணவர்களின் போராட்டத்தை திசை திருப்பியது தி.மு.க.தான் என அ.தி.மு.க. பொதுச் செயலாளர் சசிகலாவின் கணவர் ம.நடராஜன் குற்றம் சாட்டினார்.

புதுக்கோட்டையில் நேற்று முன்தினம் நடைபெற்ற திருமண நிகழ்வில் கலந்து கொண்ட அவர், செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில், 'ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக பா.ஜ.க. அரசு கடந்த ஆண்டு கொண்டுவந்த சிறப்புச் சட்டத்தை உச்ச நீதிமன்றம் ஏற்கவில்லை.

இதைத் தொடர்ந்து, ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக தமிழகமெங்கும் மாணவர்கள் அறவழியில் போராட்டம் நடத்தினர். இந்தப் போராட்டத்தில் அரசியல் கட்சிகள் கலந்து கொள்ள வேண்டாம் என்பதற்காகவே தி.மு.க. செயல் தலைவர் ஸ்டாலினை, மாணவர்கள் திருப்பி அனுப்பினர்.

தமிழக அரசுக்கு கெட்ட பெயரை ஏற்படுத்த வேண்டும்என்பதற்காக தி.மு.க. தலைவர் கருணாநிதி, செயல் தலைவர் ஸ்டாலினுடன் இருப்பவர்கள், மாணவர்களின் போராட்டத்தில் ஊடுருவி, மாணவர்களின் போராட்டத்தை வன்முறை சம்பவமாக மாற்றியுள்ளனர். மாணவர்களின் அறவழிப் போராட்டத்தை திசை திருப்பியது தி.மு.க.தான். இதற்கு என்னிடம் ஆதாரம் உள்ளது. வன்முறைக்கு வித்திட்டவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக தமிழக அரசு கொண்டு வந்துள்ள சட்டம் நிரந்தரமானது. இதை யாராலும் ஒன்றும் செய்ய முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தென் தமிழகத்தில் பரவலாக மழைவீழ்ச்சி குற்றால அருவியில் வெள்ளப்பெருக்கு



(டில்லி)

குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலையால் தென் தமிழகத்தில் பரவலாக மழை பெய்தது. இதனால் குற்றால அருவியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக நெல்லை மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பரவலாக மழை பெய்து வந்தது. மேற்கு தொடர்ச்சி மலை மற்றும் அதன் அடிவார பகுதியில் நேற்று முன்தினமும் கடந்த சனிக்கிழமை இரவும், நேற்று முன்தினம் காலையிலும் பலத்த மழை பெய்தது.

குற்றாலம், பாபநாசம் பகுதிகளில் தொடர்ச்சியாக மழை பெய்தது. இதனால் குற்றாலம் மெயின் அருவியில் நேற்று முன்தினம் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

இதையடுத்து அருவியில் குளிக்க சுற்றுலா பயணிகளுக்கு தடை விதிக்கப்பட்டது. ஐந்தருவியிலும் தண்ணீர் வரத்து அதிக அளவில் இருந்தது.

தொடர் மழை காரணமாக பாபநாசம், சேர்வலாறு, மணிமுத்தாறு அணைகளில் நீர்மட்டம் உயர்ந்தது. பாபநாசத்தில் 9 செ.மீ., அம்பாசமுத்திரம், மணிமுத்தாறு, தென்காசியில் 2 செ.மீ. மழை பதிவானது.

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளத்தில் பலத்த மழை கொட்டியது.

மேலும் அந்த மாவட்டத்தில் உள்ள பல்வேறு ஊர்களில் பரவலாக மழை பெய்தது. (இ-7)

# ட்ரம்பின் தடையுத்தரவுக்கெதிராக அமெரிக்காவில் ஆர்ப்பாட்டம்

(வோஷிங்டன்)

**ஏழு முஸ்லிம் நாடுகளைச் சேர்ந்த அகதிகள் அமெரிக்காவிற்குள் நுழைய அந்நாட்டு ஜனாதிபதி ட்ரம்பினால் தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில் குறித்த தடைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் அமெரிக்காவின் பல நகரங்கள் மற்றும் விமான நிலையங்களில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.**




நியூயோர்க், வோஷிங்டன் டி.சி மற்றும் பொஸ்ட்டன் ஆகிய பகுதிகளில் குறித்த ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதாகவும் சுமார் பல்லாயிரக்கணக்கான மக்கள் குறித்த ஆர்ப்பாட்டங்களில் கலந்துகொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிரியாவைச் சேர்ந்த அகதிகளுக்கு அமெரிக்காவில் இருப்பிடம் இல்லை என்றும் ஈரான், ஈராக், சூடான் மற்றும் மேலும் நான்கு நாடுகளைச் சேர்ந்தவர்கள் அமெரிக்காவுக்கு வருவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது என்றும் கடந்த வெள்ளிக்கிழமை ட்ரம்ப் அறிவித்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து அமெரிக்காவுக்கு வந்த பலர் விமான நிலையங்களிலேயே தடுத்து நிறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தற்போது செய்வதறியாது விமான நிலையங்களில் காத்திருப்பதாகவும் தெரிய வருகிறது.

பலரை கஷ்டத்திற்குள்ளாக்கியிருக்கும் குறித்த தடையை ட்ரம்ப் இரத்து செய்ய வேண்டும் எனக் கோரி, பலர் அமெரிக்காவின் பல பகுதிகளில் தொடர் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். (இ-7)




## கழுத்தில் இருந்த குண்டின் பகுதி சத்திரசிகிச்சையின் மூலம் நீக்கம்



சவுதி அரேபியாவிலுள்ள வைத்திய குழுவொன்று அந் நாட்டு இராணுவ வீரர் ஒருவரின் கழுத்தில் சிக்கியிருந்த குண்டொன்றின் சிறிய பாகத்தை வெற்றிகரமாக அகற்றியுள்ளதாக சர்வ தேச செய்திச் சேவை யொன்று தெரிவித்துள்ளது.

மன்னர் பஹட் வைத்திய சாலையில் இந்த சத்திர சிகிச்சை இடம்பெற்றுள்ளது. சவுதியின் தெற்குப் பகுதி எல்லையில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவ வீரரே இவ்வாறு சத்திரசிகிச்சைக்குட்படுத்தப்பட்டி ருந்தார் எனவும் அச் செய்திகள் தெரிவிக்கின்றன. (இ-3)

## அமெரிக்க ஜனாதிபதிக்கு ராணி எலிசபெத் அழைப்பு

(லண்டன்)

பிரிட்டன் நாட்டுக்கு அரசு முறைப் பயணமாக வருமாறு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்புக்கு ராணி எலிசபெத் அழைப்பு விடுத்துள்ளார்.

பிரிட்டன் பிரதமர் தெரசா மே அமெரிக்க ஜனாதிப்தி டொனால்ட்ட்ரம்பை வோஷிங்டன் நகரில் உள்ள வெள்ளை மாளிகையில் சந்தித்தார். அப்போது, இரு தலைவர்களும் பல்வேறு முக்கிய விவகாரங்கள் குறித்து விவாதித்தனர்.

இருதலைவர்களும் ஒருவருக்கொருவர் பரிசுகளை வழங்கினர். தெரசா மேவிற்கு அபிரகாம் லிங்கன் நினைவுச் சின்னத்தை ட்ரம்ப் வழங்கினார்.

பின்னர் இரு தலைவர்களும் கூட்டாக செய்தியாளர்களைச் சந்தித்தனர்.

அப்போது பேசிய ட்ரம்ப், ஐரோப்பிய யூனியனில் இருந்து விலகிய பிரிக்ஸிட் நடவடிக்கை பிரிட்டனுக்கு மிகவும் அற்புதமானதாக இருக்கும் என்று தெரிவித்தார்.

ஜனாதிபதியாக பதவியேற்ற உடனே அமெரிக்காவிற்கு வருமாறு தனக்கு அழைப்பு விடுத்தமைக்காக தெரசா மே தனது நன்றியை தெரிவித்தார்.



அப்போது, பிரிட்டன் நாட்டுக்கு அரசு முறைப் பயணமாக வருமாறு டொனால்ட் ட்ரம்ப்புக்கு ராணி எலிசபத் அழைப்பு விடுத்துள்ளதாக தெரசா மே தெரிவித்தார்.

இந்த அழைப்பை ஏற்றுக்கொண்ட டொனால்ட் ட்ரம்ப், எதிர்வரும் ஜூன் அல்லது ஜூலை மாதமளவில் லண்டன் நகருக்கு செல்வார் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ-7)

## ட்ரம்பின் திடீர் முடிவுகள் கவலையளிக்கின்றன

### பிரான்ஸ் வெளியுறவு அமைச்சர் தெரிவிப்பு



இஸ்லாமிய நாடுகளில் இருந்து வரும் அகதிகளை ஏற்றுக் கொள்வதில் எடுத்த முடிவு உட்பட அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அண்மையில் எடுத்த முக்கிய முடிவுகள் கவலை அளிபபதாக பிரான்ஸ் தெரிவித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதியாக அண்மையில் பொறுப்பேற்ற டொனால்ட் ட்ரம்ப் அதிரடியாக சில முடிவ்களை எடுத்து வருகிறார்.

முக்கியமாக சிரியா உள்ளிட்ட உள்நாட்டுப்போரில் பாதிக்கப்படும் மக்கள் அகதிகளாக ஏற்றுக் கொள்வதில் தடை மற்றும் 7 இஸ்லாமிய நாடுகளில் இருந்து மக்கள் அமெரிக்காவிற்குள் வர தடை ஆகிய உத்தரவுகளை பிறப்பித்துள்ளார்.

ட்ரம்பின் இந்த அதிரடி நடவடிக்கையால் ஏனைய நாடுகள சற்றே கலங்கிப் போயின. இந்நிலையில், பிரான்ஸ் அரசின்வெளியுறவுத்துறை அமைச்சர் ஜீன் மார்க் ஐரால்ட்

'அமெரிக்காவின் இந்த முடிவு கவலையளிக்கின்றது. போர் நடைபெறும் பகுதிகளில் இருந்து வெளியேறும் மக்களை நாம் தான் வரவேற்க வேண்டும். ஆனாலும், அகதிகள் விடயத்தில் பிற பிரச்சினைகளும்அதிகமாக உள்ளன" என தெரிவித்தார். (இ-7)

## ட்ரம்பின் உத்தரவால்

## கைது செய்யப்பட்டவர்களை நாடு கடத்த நியூயோர்க் நீதிமன்றம் தற்காலிகத்தடை

கடந்த வெள்ளிக்கிழமை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பினால் கைசாத்திடப்பட்ட, ஏழு இஸ்லாமிய நாடுகளிலிருந்து வரும் அகதிகள் மற்றும் பயணிகள் மீதான தடை ஆணையின் விளைவாக, கைது செய்யப்பட்ட யாரையும் நாடு கடத்தக் கூடாது என நியூயோர்க் நீதிமன்றம் தற்காலிகத்தடை விதித்து உத்தரவிட்டுள்ளது.



இந்தத் தீர்ப்பு அமெரிக்க ஜனநாயகத்துக்கு அரணாக நீதிமன்றங்கள் உள்ளன என்பதை நிரூபிப்பதாக அமெரிக்க சிவில் உரிமைகளுக்கான ஒன்றியம் தெரிவித்துள்ளது.

சுற்றுலாப் பயணிகளாக இருந்தாலும், குடியேற்றவாசிகளாக இருந்தாலும் இஸ்லாமிய நாடுகளான ஈராக், ஈரான், லிபியா, சோமாலியா, சூடான், சிரியா, ஏமன் ஆகிய நாடுகளில் இருந்து வர அமெரிக்கா தடை விதிக்கும் வகையிலான ஒப்பந்தமொன்றில் டொனால்ட் ட்ரம்ப் கைசாத்திட்டார்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து அமெரிக்காவெங்கும் உள்ள விமான நிலையங்களில் அமைதி ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றுவரும் நிலையில், குறித்த நியூயோர்க் நீதிமன்றம் தற்காலிக தடை உத்தரவு அவர்களை திருப்திபடுத்தம் வகையில் அமைந்துள்ளது. (இ-7)

# காணாமற்போனவர்களைக் கண்டறிய விசேட திட்டம் வகுக்கப்படவேண்டும்

## இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் வலியுறுத்து

(கொழும்பு)

**கடந்த காலங்களில் காணாமற்போனவர்களைக் கண்டறிய அரசு விசேட திட்டமொன்றை வகுக்க வேண்டும் என்பதுடன் காணாமற்போனவர்களின் குடும்பத்தினருக்கு இழப்பீட்டினைப் பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என புனர்வாழ்வு மற்றும் மீள்குடியயேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.ஹிஸ்புல்லாஹ் வலியுறுத்தியுள்ளார்.**

யுத்த காலப்பகுதியில் பல்லாயிரக்கணக்கானவர்கள்கடத்தப்பட்டுள்ளார்கள்.காணாமற்போயுள்ளனர். இவர்கள் தொடர்பில் நேர்மையான விசாரணைகளோ தீர்மானங்களோ இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. அதுமட்டுமன்றி. பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு இழப்பீடுகளும் வழங்கப்படவில்லை.

அந்தக் குடும்பங்கள் தமது உறவுகள் இன்று வருவார்கள் நாளை வருவார்கள் என்ற நம்பிக்கையுடனே வாழ்ந்து வருகின்றனர். காணாமல்போன பிள்ளையை நினைத்து தாயும், கணவனை நினைத்து மனைவியும். தந்தையை நினைத்து பிள்ளைகளும் ஏங்கிக் கதறும் நிலையை வடக்கு. கிழக்கில் தினமும் காணமுடியும். எனவே, இந்த விடயத்தில் விரைவான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

காணாமற்போனோர் பிரச்சினை வடக்கு. கிழக்கில் மட்டுமின்றி முழு நாட்டிலும் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் என்ற வேறுபாடின்றியுள்ளது.

விசேடமாக வடக்கு. கிழக்கு மாகாணங்களில் வாழ்கின்ற தமிழ். முஸ்லிம் மக்கள் மத்தியில் இது பெரும் பிரச்சினையாக உள்ளது.

ஏறாவூர் அலிகார் தேசிய பாடசாலை முன்னாள் அதிபர் யூ.எல்.தாவூத் சேர். ஓட்டமாவடி தவிசாளர் புகாரி விதானே போன்ற சமூகத்தின் முக்கியமானவர்கள் பலர் கடத்தப்பட்டனர். அதுமட்டுமன்றி ஹஜ்கடமையை நிறைவேற்றிவிட்டு காத்தான்குடி திரும்பிக் கொண்டிருந்த 150 இற்கும் மேற்பட்ட முஸ்லிம் யாத்திரிகர்கள் குருக்கள்மடம் பகுதியில் வைத்து கடத்தப்பட்டனர். அவர்கள் இருக்கின்றார்களா? இல்லையா? அவர்களுக்கு என்ன நடந்தது என எந்தத் தகவலும் இல்லை.

இவ்வாறு யுத்த காலப் பகுதியில் பல்லாயிரக்கணக்கானவர்கள் கடத்தப்பட்டுள்ளார்கள்.காணாமல்போயுள்ளனர்.

இவர்கள் தொடர்பில் நேர்மையான விசாரணைகளோ தீர்மாங்களோ இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. அதுமட்டுமன்றி. பாதிக்கப்பட்ட



குடும்பத்தினருக்கு இழப்பீடுகளும் வழங்கப்படவில்லை. எனவே. இது தொடர்பில் விரிவான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)





கிராமிய உழைப்பாளர் சங்க கட்டடத்தின் திறப்பு விழா நிகழ்வு கடந்த 23 ஆம் திகதி உரும்பிராய் வடக்கில் இடம்பெற்றது. நெப்சோ நிறுவனத்தின் வலயமைப்பின் கீழ் இயங்கும் இந்த சங்கத்தின் புதிய கட்டடத்துக்கான பால் காய்ச்சும் நிகழ்வு இடம்பெற்றதுடன் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன். கிராமிய உழைப்பாளர் சங்க தலைவர் என்.இன்பநாயகம். அரசியல் ஆய்வாளர் சோதிலிங்கம். மயிலிட்டி கடற்றொழிலாளர் சங்கச் செயலாளர் இரத்தினராசா உட்பட பலர் கலந்து கொண்டனர். (படங்கள்:- சோபிகா)

## அரசாங்கம் தனியார் காணிகளையும் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்பனை - கூட்டு எதிர்க்கட்சி

(கொழும்பு)

கொழும்பு கொம்பனித் தெருவிலுள்ள தனியார் காணி ஒன்றை வரிச்சலுகையின் கீழ் வெளிநாட்டு நிறுவனம் ஒன்றுக்கு விற்பனை செய்ய அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக கூட்டு எதிர்க்கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

கொம்பனித் தெருவில் உள்ள 8 ஏக்கர் நிலத்தை வெளிநாட்டு நிறுவனத்திற்கு விற்பனை செய்ய தற்போதைய அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே பந்துல குணவர்த்தன இதனைத் தெரிவித்தார்.

அரசாங்கம் தனியாருக்கு சொந்தமான சொத்துக்களை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்பனை செய்ய ஆரம்பித்துள்ளது.

மேலும் தற்போதைய அரசாங்கத்தின் செயற்பாடுகள் காரணமாக இலங்கை ஊழலான நாடுகள் தரவரிசையில் கீழ் மட்டத்திற்கு சென்றுள்ளதாகவும் பந்துல குணவர்த்தன தெரிவித்தார். (இ-3)

## மண் பாதையை சட்டபூர்வமாக மாற்றி தார் இட்டு செப்பனிடக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வேலணை நீர்விநியோக வீதியையும்சாட்டி வீதியையும் இணைக்கும் மண்பாதையினை சட்டபூர்வமானதாக்கி தார் இட்டு செப்பனிட்டு தருமாறு மாகாணசபைகள்உள்ளூராட்சி அமைச்சர் பைசர் முஸ்தபாவிடம் வேலணை வடகிழக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் கோரிக்கை விட்டுள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது.

வேலணை கிழக்கிலுள்ள நீர்விநியோக வீதியானது நெல்சிப் திட்டத்தின் கீழ் வேலணை பிரதேச சபையினால் புனரமைக்கப்பட்டு வருகின்றது. இவ்வீதியானது கனரக வாகனங்கள். நீர் விநியோக வாகனங்கள். விவசாய வாகனங்கள் மற்றும்சுற்றுலாப்பயணிகளின்வாகனங்கள்என்பவை போக்குவரத்துச் செய்யும் வீதியாகும். சாட்டி வீதியை இணைக்கும் குறுகிய தூரமுள்ள இவ்வீதியின் ஒருபகுதிசட்டபூர்வமற்ற வகையில் பொதுமக்களால் நீண்ட காலம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதனால் இக் குறிப்பிட்ட பகுதியை வேலணை பிரதேச சபையினால் புனரமைக்கப்பட முடியாதிருந்தது. இந்தக் குறுகிய தூரமுள்ள வீதிக்குரிய காணிகளை சுவீகரித்து அதனை வர்த்தமானியில் பிரசுரித்து சட்டபூர்வமாக்கினாலே அபிவிருத்தித் திட்டங்களில் இவ் வீதியையும் உள்வாங்க முடியும்.

இவ்வீதி போடப்படும் பட்சத்தில் சாட்டி வீதியும் நீர் விநியோக வீதியும் இணைக்கப்படுவதுடன் சாட்டி வீதியிலிருந்து நீர்விநியோக வீதியூடாக இலகுவாக குறிகாட்டுவான் வீதியை சென்றடைய முடியும். எனவே இதற்கான நடவடிக்கையைமேற்கொண்டு தவுமாறுஉள்ளூராட்சிமாகாண சபைகள் அமைச்சருக்கு வேலணை வடகிழக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் கூகுள் வரைபடம் மற்றும் சிங்களமொழியிலான மொழிபெயர்ப்பு சகிதம் கடிதம் அனுப்பி வைத்துள்ளனர். (இ-3)

## வடக்கை அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்படும்- ரணில்



(கொழும்பு)

வடமாகாண சபையுடனும் அமைச்சர் டி.எஸ். சுவாமிநாதனுடனும் கலந்துரையாடி வடக்கில் பல்வேறு பிரதேசங்களையும் அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மகாவலி. மொரகஹகந்த மற்றும் மல்வத்து ஓயா போன்ற திட்டங்கள் மூலம் வடமத்திய மாகாணம் மட்டுமன்றி திருகோணமலை, மன்னார்.வவுனியா போன்ற மாவட்டங்களின் விவசாயம் உள்ளிட்ட பல துறைகளில் அபிவிருத்தி இடம்பெறும் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

எமது அடுத்த திட்டம் திருகோணமலையை முன்னேற்றுவதே. அங்கு கைத்தொழில் பேட்டைகள் அமைக்கப்படும். சுற்றுலாத்துறைமேம்பாட்டுக்கான சகல செயற்றிட்டங்களும் அங்கு முன்னெடுக்கப்படும். அத்துடன் அங்கிருந்து அநுராதபுரத்துக்கு புதிய வீதிகள் அமைக்கப் படவிருப்பதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

அநுராதபுரத்தில் ஸ்ரீ மாபோதி மற்றும் தந்திரிமலை மகாநாயக்கத் தேரர்களிடம் நாட்டின் நிலைபேறான யுக அபிவிருத்திச் செயற்றிட்ட அறிக்கைகளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் கையளித்தார். இந்த நிகழ்வின் போதே பிரதமர் இந்த விடயத்தை தெரிவித்தார்.

மகாநாயக்கத் தேரர்களிடம் மல்வத்து ஓயா பாரிய நீர்ப்பாசனத் திட்டம் குறித்தும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கலந்துரையாடினார்.

யாழ்ப்பாணத்திலிருந்து மன்னாருக்கும், திருகோணமலைக்கும் நேரடி வீதிகள் அமைக்கப்படவுள்ளன. அதே போன்று வவுனியா. பரந்தன். மாங்குளம். மன்னார் பிரதேசங்களின் அபிவிருத்தி செயற்றிட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படவிருப்பதாகவும் இதன்போது சுட்டிக் காட்டினார்.

இந்த திட்டத்தின் மூலம் மன்னார். வவுனியா மாவட்டங்களின் நீர்ப்பாசனம் மற்றும் குடிநீர் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்படும் எனவும் தெரிவித்தார். (இ-3)

# மகிந்தவின் நாடகமே மின்கதிரை அச்சம்

## அமைச்சர் பொன்சேகா தெரிவிப்பு

(கொழும்பு)

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு போர்க்குற்றங்கள் தொடர்பில் மின்கதிரைக்குச் செல்லும் ஆபத்து இருந்ததில்லை எனத் தெரிவித்துள்ள பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, அவ்வாறு இருந்ததாக அவரே காட்டிக் கொண்டார் என்றும் தெரிவித்தார்.**





மல்வத்தை, அஸ்கிரிய மகாநாயக்கர்களை நேற்று முன்தினம் சந்தித்த பின்னர், மல்வத்தை மகா விஹாரையில் வைத்து ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவித்த போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மகிந்தவுக்கு, மின்சாரக் கதிரை ஆபத்து இருந்ததில்லை. அவ்வாறான ஆபத்து இருப்பதாக அவர் எப்போதும் கதைத்து, மக்களிடத்தில் அந்தப் பயத்தை அவர் விதைத்தார். அந்தப் போரைக் கட்டளையிட்டு நடத்தியது நாம் தான். அவ்வாறான ஆபத்து இருந்திருந்தால், நாம் தான் மின்சாரக் கதிரைக்கு அனுப்பப்படக் கூடியவர்கள். "முன்னாள் ஜனாதிபதி, மின்சாரக் கதிரைக்குக் கொண்டு செல்லப் பட்டிருந்தால், மின்சாரக் கதிரைக்குக் கூட அவமானகரமானதாக அது அமைந்திருக்கும்" என்று அமைச்சர் தெரிவித்தார். (இ-3)

## கோத்தபாய ராஜபக்ஷவின் தேசப்பற்று மிக் விசாரணையின் மூலம் அம்பலமாகும்

## அமைச்சர் ராஜித எதிர்பார்ப்பு



(கொழும்பு)

சர்ச்சைக்குரிய மிக் போர் விமானக் கொள்வனவு பற்றிய விசாரணைகள் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ எத்தகையவர் என்பதை அம்பலப்படுத்தும் என்று அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

கோத்தபாய ராஜபக்ஷ தன்னை தேசப்பற்றாளர் போன்று எப்போதும் சித்திரித்து வந்துள்ளார். அவரது தேசப்பற்று எத்தகையது என்று, மிக் போர் விமானக் கொள்வனவு குறித்த 'விசாரணைகள் முடிவுக்கு வரும் போது தெரியவரும்.

முன்னைய ஆட்சியைப் போலல்லாது, தற்போதைய ஆட்சியில் ஊழல் செய்தவர்கள் மீது விசாரணைகள் நடத்தப்பட்டு சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

தற்போதைய கடற்படைத் தளபதி ஊடகவியலாளர் ஒருவரை தாக்கியதாக குற்றம்சாட்டுகின்றனர். முன்னைய கடற்படைத் தளபதி, இளைஞர் ஒருவர் காணாமற்போவதற்கு காரணமாக இருந்தார். அதுபற்றி யாரும் பேசுவதில்லை" என்றும் அவர் தெரிவித்தார். (இ-3)

## பேருந்து விபத்து; 15 பேர் படுகாயம்





தம்புள்ளை - ஹபரண பிரதான பாதையில் இனமலுவ பிரதேசத்தில் நேற்று அதிகாலை இடம்பெற்ற பேருந்து விபத்தில் 15 பேர் காயமடைந்து வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பொலநறுவையில் இருந்து கண்டியினை நோக்கிப் பயணித்த குறித்த பேருந்து வேகக்கட்டுப்பாட்டினை இழந்து வீதியினை விட்டு விலகியதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-3)

## 112 மில்லியன் ரூபா பெறுமதியான நாணயங்களை கடத்தியவர் கைது

சட்டவிரோதமாக 112 மில்லியன் ரூபா பெறுமதியான நாணயங்கள் கடத்த முற்பட்ட ஒருவரை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து சுங்கப் பிரிவினர்நேற்றுகைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் வசமிருந்து வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நாணயங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

அத்துடன் குறித்த நாணயங்களை சந்தேகநபர் டுபாய்க்கு கடத்த முற்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. (இ-3)

## இன்று ஒரு தகவல்

### நிலவரம் சொல்வதுண்டா?

என்னங்க! உப்பில்லை, பருப்பில்லை, அரிசியில்லை, ஒண்ணுமே இல்லிங்க. இப் படி இருந்தா எப்படிக் குடும்பம் நடத்துறது? என்று கணவன் வீட்டினுள் நுழையும் போது ஒப்பாரி ராகம் பாடும் மனைவிகள் பலர்.

அனைத்தும் முழுவதும் தீர்ந்ததும் தான் இவர்கள் திருவாய் மலர்ந்தருளுவார்கள். இரண்டு நாள் முன்னதாக நிலவரம் சொல் வது இவர்களுக்கு வழக்கம் இல்லை. கட்டட சுப்பர்வைசர், காண்ட்ராக்டரிடம் சார் தினமும் ஒன்பது மூட்டை சீமெந்துக்கு வேலை நடக்கிறது. இந்த ரீதியில் போனால் இன்னும் மூன்று நாளில் மூட்டை எல்லாம் காலியாகி விடும். புதன்கிழமை லேபர் அட்வான்ஸ் தரணும். பணம் ஏற்பாடு பண்ணினால் தேவலை என்று இருக்கிற நில வரங்களையும் வரப்போகிற செலவுகளையும் சொல்லி விட்டாரானால் கட்டட வேலை நிற்காமல் நடக்கும் சேர். ஒரு மூட்டை சீமெந்து கூட இல்லை. இப்பவே பணம் வேணும் என இவர் சொல்ல, யோவ்! இப்படித் திடுதிப்புனு பணம் கேட்டா எங்கைய்யா போவேன்? என்று அவர் கத்த , ஒரே களேபரம் தான்.

தாய் தன் மகளை உயர்வான இடத்தில் திருமணம் செய்ய எண்ணியிருப்பாள். தந் தையோ சாதாரண இடம்போதும்; பெரிய இடம் என்றால் போட்டுக் கட்ட முடியாது என்று எண்ணியிருப்பார். ஒருவருக்கு ஒரு வர் இதைப் பரிமாறிக் கொண்டிருக்க மாட்டார்கள். முடிவு குழப்பம் தான். இவ்வளவு தான் இருக்கு; இன்ன இடத்தில்தான் செய்ய முடியும் என்று தந்தை இருக்கிற நிலவரத்தை சொல்லி யிருந்தால் பிரச்சினையே இல்லை. ஒருவர் முடிவுக்கு எதிரான முடிவை மற்றவர் எடுக்க வேண்டிய நிலை வரவும் வராது. அப்படி எடுக் கப்பட்ட முடிவுகளில் கோளாறு ஏற்படும் போது, நான் அன்றைக்கே வேண் டாம் னேன். கேட்டீங்களா? என்று குத்திக் காட்ட வேண்டிய தேவையும் எழாது.

அன்புள்ள அப்பா, நலம். நலம் அறியப் பணம் அனுப்பவும் என்று விடுதியில் படிக் கும் மாணவன் எழுதுவான்.

சாப்பாடு; சூழ்நிலை படிப்பில் முன்னேற் றம் பற்றி எழுத மாட்டான். பெற்றவருக்கு எப்படியிருக்கும்? திருமணம் ஆகிப் புகுந்த வீடு போன பல மகள்கள் தங்களுடைய புதிய சூழ்நிலைகளைச் சாமான்யத்தில் எழுதுவதில்லை. பெற்றவர்களோ இருப்புக் கொள்ளாமல் தவிப்பார்கள். மகளோ புகுந்த வீட்டில் ஹாயாக ரி.வி பார்த்துக் கொண்டிருப்பாள், அல்லது பத்திரிகை படித்துக்கொண்டி ருப்பாள்.

சிலபேர் சிலரது உதவியை நாடுவார்கள். பாதி வேலை ஆகியிருக்கும். மீதி வேலை ஆகியிருக்காது. காரணமில்லாமல் தள்ளிப் போ ம். உதவி நல்கியவரைப் பார்த்து இதுதான் இப்போதைய நிலவரம்! என்று சொல்லித் தொலைக்க மாட்டார்கள். உதவி நல்கியவரோ படுபாவி. காரியமென்றால் மட்டும் வருகிறார்கள். காரியம் ஆயிட்டா எட்டியே பார்க்கமாட்டார்கள் என்று ஆகாத காரியத்திற்காகத் திட்டித் தீர்ப்பார்.

நிலவரம் சொல்வது என்பது சாதாரண விடயமல்ல. அதற்குப் பின்னால் பல பின்னணிகள் இருக்கின்றன. அது நம் விடயத்தில் மற்றவர்களுக்கு உயர் மதிப்பையும் ஈடுபாட்டையும் உண்டு பண்ணும் செயலாகும். நம்முடைய மனச் சுமைகளில் சரிபாதியை இறக்கி வைக்கும் செயலாகும். எல்லாவற்றையும்விட நம்முடைய காரியங்களை சாதுரியமாக ஆற்றிக் கொள்ளும் சிறந்த உக்தியுமாகும்.

**லேனா தமிழ்வாணன்**

# நாவற்குழியில் எந்தவித குடியேற்றங்களும் இனி வருவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது

## யாழ். அரச அதிபர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

***தேசிய வீடமைப்பு அதிகார சபைக்குச் சொந்தமான நாவற்குழி பிரதேசத்திலுள்ள காணியில் எந்தவித குடியேற்றங்களும் வருவதற்கு இனி அனுமதிக்கப்படமாட்டாது என தெரிவித்த யாழ்.மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகன் ஏற்கனவே இங்கு குடியேறிய மக்களின் அடிப்படைத் தேவைகள் அனைத்தும் படிப்படியாக விரைவில் நிவர்த்தி செய்யப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.***

தேசிய வீடமைப்பு அதிகாரசபையால் நாவற்குழி மேற்கு பகுதியில் உள்ள தமிழ்.சிங்கள மக்களுக்கு வழங்கப்பட்ட வீட்டுத்திட்டத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்றைய தினம் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்.

தேசிய வீடமைப்பு அதிகாரசபைக்கு சொந்தமான நாவற்குழி மேற்கு பகுதியில் அமைந்துள்ள காணியில் தற்போது குடியமர்ந்துள்ள குடும்பங்கள் தமது அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்து தருமாறு நீண்ட நாட்கள் கோரிக்கைகளை முன் வைத்திருந்தனர்.

அந்தவகையில் அவர்களுக்கு தேசிய வீடமைப்பு அதிகார சபையின் ஊடாக 5 லட்சம் ரூபாய் பெறுமதியில் நன்கொடையாக இந்த வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் வெவ்வேறு பகுதிகளில் அத்துமீறி குடியேறியிருந்த மக்கள் இப்பகுதிக்குள் அனுமதிக்கப்பட்டிருந்தனர். இதில் 200 தமிழ் குடும்பங்களும் 50 சிங்கள குடும்பங்களும் இந்த வீட்டுத்திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளனர்

இங்கு குடியமர்ந்துள்ள மக்களுக்கே வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டுள்ளது. புதிதாக எந்தவொரு குடியேற்றங்களும் இப்பகுதிக்குள் அனுமதிக்கப்படமாட்டாது. தற்போது வழங்கப்பட்ட வீட்டுத்திட்டத்தினை தொடர்ந்து அடிப்படை தேவைகள் அனைத்தும் பூர்த்தி செய்து கொடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## சிறுப்பிட்டியில் இரு இளைஞர்கள் கொலை வழக்கு; 14 இராணுவத்தினருக்கும் 13ம் திகதிவரை மறியல்

சிறுப்பிட்டி பகுதியில் தமிழ் இளைஞர்கள் இருவர் கொலை செய்யப்பட்ட வழக்கின் சந்தேக நபர்களான 14 இராணுவத்தினரையும் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 13 ஆம் திகதி வரை விளக்கமறியல் வைக்குமாறு யாழ் நீதவான் நீதிமன்ற நீதிபதி எஸ்.சதீஸ்தரன் உத்தரவிட்டுள்ளார்.

மட்டுவில் வடக்கை சேர்ந்த செல்வரத்தினம் ஜெயசீலன், நாகமணி சௌந்தரராஜன் ஆகிய இளைஞர்கள் இருவர் கடந்த 1997 ஆம் ஆண்டு ஒக்டோபர் 28 ஆம் திகதி மயிலங்காடு பகுதிக்கு உறவினருடைய திருமணத்துக்காக சென்ற போது இருவரும் சிறுப்பிட்டி புத்தூர் வாதரவத்தையில் அமைந்திருந்த இராணுவ முகாமில் உள்ள இராணுவத்தினரால் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டிருந்ததாக குற்றஞ்சாட்டப்பட்டது.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகத்தின் பேரில் அச்சுவேலி பொலிஸாரால் 1998 ஆம் ஆண்டு காலப்பகுதியில் குறித்த இராணுவ முகாமில் கடமையாற்றிய 16 இராணுவ வீரர்களுக்கு எதிராக யாழ்.நீதவான் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டு கொலைக் குற்றம் சாட்டப்பட்டு பின்னர் 16 இராணுவத்தினரும் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

சுமார் 18 வருடங்களின் பின்னர் சட்டமா அதிபரினால் இவ்விடயம் தொடர்பாக பரிசீலிக்கப்பட்டு மேற்குறித்த இரு இளைஞர்களையும் கொலை செய்ததன் அடிப்படையில் குறித்த 16 இராணுவ வீரர்களுக்கு எதிராக வழக்கை தொடர்ந்து நடத்துமாறு யாழ்.நீதவான் நீதிமன்றுக்கும் அச்சுவேலிப் பொலிஸாருக்கும் அறிவிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து சம்பவத்துடன் தொடர்புடையதாக கூறப்பட்ட 16 இராணுவத்தினரில் இருவர் இறந்த நிலையில் ஏனைய 14 இராணுவத்தினரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டு அவர்களுக்கு எதிராக கடந்த வருடத்தில் இருந்து வழக்கு நடத்தப் பட்டு வருகிறது.

இந்த நிலையில் மேற்குறித்த வழக்கு நேற்றைய தினம் நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்ட போதே 14 இராணுவத்தினரையும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டுள்ளார். (இ-9)



கலைஞர்களுக்கான கலாபூஷணம் அரச விருது-2016 வழங்கும் நிகழ்வு கொழும்பு தாமரைத் தடாக மண்டபத்தில் கலாசார அலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில் அண்மையில் நடைபெற்ற போது நாடக கலைஞர் கயிலாயபிள்ளை தர்குலசிங்கத்திற்கு இந்துமத அலுவல்கள் அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் கலாபூஷணம் விருது வழங்கி கௌரவித்ததை படத்தில் காணலாம்.

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

யாழ்.வரணி மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று 31ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம்பெறும். பாடசாலை அதிபர் பி. செல்வவிநாயகம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி பிரதேச கல்விப் பணிப்பாளர் (முகாமைத்துவம்) என்.கந்ததாசன், சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி பிரதேச கல்விப் பணிப்பாளர் வி.நடராஜா, கௌரவ விருந்தினராக முன்னாள் அதிபர் எஸ்.துரைராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளதுடன் பரிசில்களை திருமதி நந்திகா கந்ததாசன் வழங்கவுள்ளார். (இ-3)

➢➢➢➢➢➢➢➢➢➢

யாழ். உடுவில் மான்ஸ் த.க.பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று 31ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை முன்றலில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் கலாநிதி க. சர்வேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக பான் ஏசியா வங்கியின் சுன்னாகக் கிளை முகாமையாளர் திருமதி.கலா மகேந்திரன், உடுவில் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் பொ. சந்திரவேல், ஆசிரிய ஆலோசகர் ந. புவன் சிறிந்திரனன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

➢➢➢➢➢➢➢➢➢➢

யா/அராலி சரஸ்வதி மகா வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் 2 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம்பெறும் பாடசாலை அதிபர் ந.சபாரத்தினசிங்கி தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல்) சு.தேவமனோகரன், சிறப்பு விருந்தினராக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள கணக்காளர் இ.சந்திரதாஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)



அமரர் பாலன் வேலுப்பிள்ளை நினைவாலயம் நடத்திய சாதனையாளர் கௌரவிப்பு விழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை அவரின் நினைவாலயத்தில் காப்புறுதி நிறுவனத்தைச் சேர்ந்த வே.பாஸ்கரன் தலைமையில் நடைபெற்றது. இதில் விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும் வல்வெட்டித்துறை முன்னாள் நகர சபைத் தலைவர் அனந்தராஜ் மங்கல விளக்கேற்றுவதையும் சாதனையாளர் ஒருவர் கௌரவிக்கப்படுவதையும் படங்களில் காணலாம். இந்நிகழ்வில் 180 சாதனையாளர்கள் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (படங்கள்:-மகாலிங்கம்)

# சாதி, சமயம் பார்த்து இந்தியா உதவவில்லை

## அந்நாட்டு துணைத் தூதுவர் நடராஜன் தெரிவிப்பு



இந்திய அரசாங்கம் இலங்கையில் சாதி, சமயம் பார்த்து உதவி செய்யவில்லை என யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத்தூதுவர் ஏ.நடராஜன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு காத்தான்குடி மீடியா போரத்தின் உறுப்பினர்கள் கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத் தூதுவர் அலுவலகத்தில் வைத்து அவரை சந்தித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த தூதுவர், இந்திய அரசாங்கம் இலங்கை மக்களுக்கு உதவி வருகின்றது.

இந்த வகையில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மாகாணங்களில் வீடுகளை இந்திய அரசாங்கம் நிர்மாணித்துக் கொடுத்துள்ளது.

42, 950 வீடுகளை வடக்கிலும் கிழக்கு மாகாணத்தில் 4, 000 வீடுகளையும் இந்திய அரசாங்கம் நிர்மாணித்துக் கொடுத்துள்ளது.

இந்த வீடுகளின் நிர்மாணப் பணிகள் அனைத்தும் முடிவடைந்து விட்டன. இந்த வீடுகள் தொடர்பில் எந்த முறைப்பாடுகளும் எமக்கு வரவில்லை. இந்த வீடுகள் மாட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்கள் ஊடாகவே வழங்கப்பட்டுள்ளன.

இந்திய அரசாங்கம் இன, மதம், மொழி பார்த்து உதவிகளை இலங்கையில் வழங்கவில்லை. அனைத்து மக்களுக்கும் உதவிகள் கிடைக்க வேண்டும் என்பதையே நாம் எதிர்பார்க்கின்றோம்.

தற்போது இந்தியாவிலுள்ள சேவா எனப்படும் நிறுவனத்தின் ஊடாக இலங்கையில் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களை அடையாளம் கண்டு அவர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் பொருட்டு சிறு கைத்தொழில் முயற்சிகளுக்காக உதவி வருகின்றோம்.

அவர்களின் சிறுகைத்தொழில் முயற்சிகளை ஊக்கப்படுத்தி வருகின்றோம்.

கிழக்கு மாகாணத்திலிருந்தும் யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணை தூதுவராலயத்திற்கு சிலர் விசா எடுப்பது போன்ற பல்வேறு தமது தேவைகளை நாடி வருகின்றனர். அவர்களை நாம் திருப்பி அனுப்புவது கிடையாது.

அவர்களின் தேவையை நிறைவு செய்து அனுப்புகின்றோம். நாங்கள் நினைத்தால் ஒரு நிமிடத்திலேயே நீங்கள் கொழும்பிலுள்ள இந்திய தூதுவராலயத்திற்கு செல்லுங்கள் என திருப்பி அனுப்பலாம். நாம் அவ்வாறு செய்வது கிடையாது.

இலங்கையிலுள்ள மாணவர்களுக்கு இந்தியாவினூடாக புலமைப்பரிசில் கொடுப்பதற்கும் இந்திய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. ஊடக கற்கைகளுக்காகவும் நாம் புலமைப் பரிசில் கொடுக்கவுள்ளோம்.

அதேபோன்று தகவல் தொழில்நுட்பத்தை ஊக்கப்படுத்தும் பொருட்டு அதற்காக மாணவர்களுக்கு புலமைப் பரிசில் திட்டமொன்றையும் அறிமுகப்படுத்தவுள்ளோம்.

நாங்கள் இனம், மதம் பார்த்து வேலை செய்வது கிடையாது. பல இஸ்லாமிய நண்பர்கள் எனக்கு அறிமுக மானவர்கள் இருக்கின்றனர். எமது தூதுவராலயத்தில் நடைபெறுகின்ற வைபவங்களுக்கு இஸ்லாமிய பிரமுகர்களையும் நான் அழைப்பதுண்டு.

மிக விரைவில் யாழ்ப்பாணத்திலுள்ள ஒஸ்மானிய பாடசாலைக்கு சென்று அங்குள்ள மாணவர்கள், அதிபர், ஆசிரியர்களை சந்திக்கவுள்ளேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## ஒரு பாலத்திற்கு இரு கட்சிகள் உரிமை கோரல்

ஹற்றன் போடைஸ் வழியாக டயகம செல்லும் பிரதான வீதியின் போடைஸ் பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட புதிய பாலம் மத்திய மாகாண வீதி அபிவிருத்தி, பயணிகள் போக்குவரத்து அமைச்சர் எதிரிவீர வீரவர்தனவின் தலைமையின் கீழ் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

மத்திய மாகாண வீதி அபிவிருத்தி, பயணிகள் போக்குவரத்து அமைச்சின் 10 மில்லியன் ரூபா நிதியொதுக்கீட்டின் கீழ் இப்பாலம் புனரமைக்கப்பட்டது.

குறித்த பாலம் கடந்த வருடம் உடைந்ததனையடுத்து இப்பாலத்தை உடனடியாக புனரமைத்துத் தருமாறு கோரி அவ்வழியாகச் செல்லும் பேருந்து சாரதிகள் மற்றும் பொதுமககளினால் கவனயீர்ப்பு போராட்டமும் முன்னெடுக்கப்பட்டது.

இதனைத்தொடர்ந்து இப்பாலத்தை உடனடியாக புனரமைக்குமாறு மத்திய மாகாண வீதி அபிவிருத்தி, பயணிகள் போக்குவரத்து அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

இதேவேளை நேற்று முன்தினம் இப் பாலத்தின் திறப்பு விழா இடம்பெறுவதற்கு முன்பாக தொழிலாளர் தேசிய சங்கத்தின் மத்திய மாகாண சபை உறுபபினர்களான சோ.ஸ்ரீதரன், சிங் பொன்னையா உள்ளிட்ட பலர் அவ்விடத்திற்கு சென்றுள்ளனர் மேலும் அப் பகுதியில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஆதரவாளர்களும் சூழ்ந்துள்ளனர். (இ-3)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 973

விமல்




சிந்து

எதுக்கெடுத்தாலும் நம்மை
பிடிக்கலைன்னு சொல்ல
ஆயிரம் இதயங்கள் இருந்தாலும்
எது நடந்தாலும் உன்னை
பிடிச்சிருக்குன்னு சொல்ல
ஒரு இதயம் இருந்தாலே போதும்
வாழ்க்கை என்பது சுகமே..

சிவா




கிரி




பவித்திரா





சிந்துஜன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# யாழ்.பல்கலை.சித்த மருத்துவத்துறை ஒரு தனி நிறுவகமாக வளர்ச்சி பெறும்

## மூத்த பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் நம்பிக்கை



(நேற்றையதொடர்ச்சி...)

தமிழ்நாட்டிற்கும் ஈழத்திற்கும் ஆதிகாலம் தொடக்கம் நிலவிய நெருங்கிய மொழி, கலாசாரப் பரிவர்த்தனை மூலம் இவ்வைத்தியம் இரு பிராந்தியங்களிலும் பரிமாறப்பட்டு வளர்ச்சி கண்டது எனக் கூறுவதில் தப்பில்லை. ஈழத்துச் சிவாலயங்களாகிய திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம் ஆகிய திருத்தலங்கள் திருஞானசம்பந்தர், சுந்தரர் ஆகியோரால் பாடப்பட்டமையும், திருமூலருடைய திருமந்திரத்தில் ஈழம் 'சிவபூமி' என அழைக்கப்பட்டதும் அக்காலத்தில் நிலவிய நெருங்கிய கலாசாரப் பரிவர்த்தனைக்குச் சான்றாகின்றன.

அத்துடன் கி.பி.11 ஆம் நூற்றாண்டு தொடக்கம் 13 ஆம் நூற்றாண்டு வரை ஈழத்தின் தலைநகராக விளங்கிய பொலநறுவையில் தமிழக கலாசாரப் படர்ச்சி மேலோங்கி நின்றது. இதற்குச் சான்றாக அங்கு கிடைக்கின்ற வெண்கலத்தாலான இந்துக் கடவுளர்களது விக்கிரகங்கள் மட்டுமன்றி, அங்குள்ள பொற்கல் விகாரையில் சித்த வைத்தியத்தை உமாதேவியாரிடமிருந்து பெற்றுப் பரப்பியவராகக் குறிப்பிடப்படும் அகத்தியரது சிலை காணப்படுவதும் கலாசாரப் பரிவர்த்தனையை மேலும் உறுதி செய்கின்றன.

எனினும், நல்லூரைத் தலைநகராகக் கொண்டு விடைக் கொடியும், நாணயத்தில் விடைச் சின்னமும் பதித்து வடபகுதியின் வலிமை மிக்க தமிழரசாக கி.பி. 13 தொடக்கம் கி.பி.16 வரை செங்கோலோச்சிய ஆரியச் சக்கரவர்த்திகள் எனப்படும் தமிழரசர் காலத்தில் தமிழ்க் கலாசாரம் உச்சநிலையடைந்தது. சங்கம் அமைத்து தமிழ் வளர்த்ததோடு தமிழகத்தில் இருந்து வந்தோரை அரவணைத்து இக் கலாசாரத்தைச் செழுமைப்படுத்திய இவர்களது காலத்தில் சித்தவைத்திய நூல்களான செகராசசேகரம், பரராசசேகரம், இலங்கைச் சிங்கை மன்னன் நயனவிதி முதலான நூல்கள் தோற்றம் பெற்றுள்ளன.

இவற்றிலே கூறப்பட்டுள்ள மருந்து வகைகள் தற்போது ஈழத்திலும் தமிழ் நாட்டிலும் வழக்கத்தில் உள்ளன என்பது நினைவு கூரப்பாலது. 17, 18 ஆம் நூற்றாண்டுகளில் அமுதாகரம் (வரதபண்டிதர்), இரு பாலைச் செட்டியார் வைத்திய விளக்கம், பாதார்த்த சூடாமணி, சொக்கதாதர் தன்வந்திரியம் போன்ற நூல்கள் தோற்றம் பெற்றுள்ளன. இவற்றை விட 'அங்காதிபா தம், ஏட்டு வைத்தியம், சித்த ஔடத சங்கிரகம், சித்த வைத்திய சிகிச்சைக் கிரமம், சுதேச வைத்திய ஔடதத்திரட்டு, சுதேச வைத்திய மருத் துவ மூலிகைக் கையகராதி, வைத்திய சிந்தாமணி, வைத்திய பூரணம் முதலிய நூல்களும் வெளிவந்தன. ஏட்டுச் சுவடிகளாக இருந்த இவற்றுள் பலவற்றை அச்சு வாகனம் ஏற்றிய பெருமை ஏழாலையைச் சேர்ந்த சுதேச வைத்தியர் ஐ. பொன்னையா பிள்ளை என்பவரையே சாரும்.

இச் சந்தர்ப்பத்தில் 17 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் கிறிஸ்தவ மதப்பிரசாரத்திற்காக ஈழம் வந்த போல்டேயஸ் பாதிரியார் தமது காலத்தில் வழக்கில் இருந்த வைத்திய முறை பற்றிப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளமை கவனிக்கத்தக்கது.

"இக் காலத்தில் நாட்டு வைத்தியம் சிறப்புப் பெற்றிருந்தது. நாட்டு வைத்தியர்களின் எண்ணிக்கைக்கும் குறைவில்லை. இவர்களுக்குச் சத்திரசிகிச்சை செய்வதில் பயிற்சியில்லை. நோய்கள் பற்றித் தாம் பெற்றுள்ள அனுப்வம், பயிற்சி என்பவற்றைக் கொண்டே இவர்கள் நோய்களை மாற்றுவர். இவ் வைத்தியம் சம்பந்தமாக அவர்கள் அனுபவங்களையும் ஆராய்ச்சிகளையும் பொறித்த ஏட்டுப் பிரதிகள் உண்டு. இவ்வைத்தியர்கள் நோய்களுக்கான சிகிச்சைகளாக குளிசைகளையும் திரவங்களையும் அளிப்பது வழக்கம். இத்தகைய மருந்துகளை இவர்கள் பல்வேறு மூலிகைகளிலிருந்து தயாரிப்பர். காய்ச்சல்,அதிக வயிற்றோட்டம் ஏற்படும் போது சிறிதளவு மிளகை அரைத்துத் தண்ணீர் சேர்த்து பொக்குள் அடியில் பூசும்படி பணிப்பர்."

அத்துடன் நில்லாது தாமும் இவ்வாறு குணமடைந்தவர்களுள் ஒருவர் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்ப் பகுதிகளில் நிலவிய வைத்திய முறை தென்னிலங்கையில் காணப்பட்ட வைத்திய முறையில் தாக்கத்தை ஏற்படுத்தவும் தயங்கவில்லை. சிங்கள பாரம்பரிய வைத்தியத்தில் தமிழ் வைத்திய ஏட்டுப் பிரதிகளும் இடம் பெற்றதாகவும் தகவல்கள் உள. யாழ்ப்பாண மன்னன் பரராசசேகரனின் சகோதரனான பரநிருபசிங்கன் கண்டி அரசியின் வயிற்று வலியை அன்று சென்று நீக்கியதாகவும் குறிப்புகள் காணப்படுகின்றன. சிங்கள மொழியில் ஆக்கப்பட்டுள்ள "வைத்திய சிந்தாமணி பைசாஜ் சங்கிரகம்" (Vaidyacindamani bhaisadya) என்னும் நூல் "வைத்திய சிந்தாமணி" எனும் தமிழ் மருத்துவ நூலைத் தழுவி எழுதப்பட்ட நூலாகும் என்ற கருத்தும் உள்ளது.

இந்தியாவிலும் சித்த வைத்தியம் பற்றிய ஏட்டுச் சுவடிகள் பல சமஸ்கிருதத்தில் மொழிபெயர்க்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. பின்னர் இவை சமஸ்கிருத மொழியிலிருந்து திபெத்திய மொழி, மங்கோலியமொழி, ரஷ்ய மொழி போன்றவற்றுக்கும் மொழிமாற்றம் பெற்றன. அத்துடன் தமிழ் ஏடுகள் அக்காலத்தில் வட இந்தியாவில் பிரபல்யம் பெற்ற நாலந்தாப் பல்கலைக்கழகத்தையும் பிரபல ஆயுள்வேதக் கல்லூரிகளையும் சென்றடைந்ததாகக் கூறப்படுகின்றது.

எவ்வாறாயினும் மிக நீண்ட பாரம்பரிய மருத்துவமாக விளங்கிய சித்த வைத்தியம் பற்றிய 'சித்த ஔடத சங்கிரகம்' என்னும் தொகுப்பு நூல் ஆயுள் வேத வைத்தியத் திணைக்களத்தினால் 1980 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளதும் இத்துறையானது பெற்ற முன்னேற்றத்தினை எடுத்தியம்புகின்றது.

### மகாநாட்டின் பலாபலன் எதுவாக இருக்க வேண்டும்

மகாநாட்டின் முடிவு ஏதோ கூடினோம், கலைந்தோம் என்றிராது ஆக்கபூர்வமான நடவடிக்கையாக அமைதல் வேண்டும்.




❖ ஈழத்துச் சித்த வைததிய நூல்களைப் பல்கலைக் கழகப் பாடத்திட்டத்தில் இணைத்து மாணவர் மத்தியில் பிரபல்யமடையச் செய்ய வேண்டும். கடினத் தமிழில் இருக்கும் நூல்களை இலகு தமிழில் விளக்கவுரையுடன் பதிப்பித்தல் வேண்டும்.

❖ தமிழகத்திலும் ஈழத்திலும் உள்ள நூல்களை ஒப்புநோக்கி வைத்தியக் குறிப்புக்களை தொகுத்தும் திரட்டியும் வெளியிட வேண்டும்.

❖ ஈழத்திலுள்ள சித்த வைத்திய நூல்களை இனங்கண்டு தொகுத்துப் பட்டியலிட வேண்டும்.

❖ வெளிநாடுகளைச் சென்றடைந்துள்ள சித்த வைத்திய ஏடுகளைப் படியெடுக்க வேண்டும்.

பரம்பரை மருத்துவர்களிடமுள்ள எழுத்து வடிவம் பெறாத மருத்துவக் குறிப்புகளைக் கேட்டறிந்து திரட்டுதல் வேண்டும்.

❖ சித்த வைத்தியத்தின் பயன்பாடு, மவுசு என்பன பற்றி மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தி சித்த வைத்தியர்களைச் சமூகத்தில் முக்கியத்துவம் பெற்றவர்களாக, ஆளுமைமிக்கவர்களாக மதிக்க வழிசமைக்க வேண்டும்.

❖ சூழல் பற்றி மக்களுக்கு விளக்கம் கொடுப்பதோடு ஆரோக்கியமான வாழ்வின் முக்கியத்துவம் பற்றியும் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

❖ அரச உதவியுடன் இலவசமாக இயங்கும் அரச வைத்தியசாலைகளின் பின்புலத்தில் சித்த வைத்தியர்கள் இவற்றோடு போட்டிபோடும் அளவிற்கு இத்துறையில் ஆளுமை மிக்கவர்களாக வளர்வதற்கு ஆவன செய்யப்பட வேண்டும்.

❖ தமிழகத்திலுள்ள சித்த வைத்தியத்துறை சார்ந்த நிறுவனங்களோடு நெருங்கிய தொடர்பும் கருத்துப் பரிமாற்றமும் ஏற்படுத்த வேண்டும்.

❖ இவ்வாறே தென்னிலங்கையிலுள்ள சுதேச வைத்திய நிறுவனங்களோடு நெருங்கிய தொடர்பும் கருத்துப் பரிமாற்றமும் அவசியம் பேணப்படல் வேண்டும்.

❖ எத்தகைய தொடர்பிருந்தாலும் இத்தகைய தொடர்புகள் மூலம் சித்த வைத்தியத்தின் தனித்துவத்தை இழக்காது ஆவன செய்தல் வேண்டும்.

ஒட்டுமொத்தமாக நோக்கும் போது, சித்த வைத்தியம் நமது பாரம்பரிய வைத்தியம், நமது பெருமையைப் பறைசாற்றும் வைத்தியம் என்று பெருமைப்படுவதற்கான வழிவகைகளை ஏற்படுத்துவதோடு சித்த வைத்தியம் மேற்கத்தைய வைத்திய முறைக்கு எந்த விதத்திலும் சளைத்தது அல்ல என்பதை தமது ஆய்வுகள் மூலமும் வெளியீடுகள் மூலமும் வெளிப்படுத்தும் பாரிய பொறுப்பும் கடமையும் பல்கலைக்கழகச் சித்த வைத்தியத் துறைக்குண்டு. அதற்கேற்ற வகையில் இத்துறை சார்ந்த கல்விமான்கள் ஆளுமையும் திறனும், தேடலும், ஊக்கமும், விடாமுயற்சியும் கொண்டவர்களாக இயங்குதல் வேணடும். மக்கள் மத்தியில் சித்த வைத்தியத்தில் நம்பிக்கையும் அதன் செயற்பாட்டில் தெளிவையும் ஏற்படுத்தி சித்த வைத்தியத்தைத் தன்னிகரற்ற நிறுவகமாக மாற்றியமைக்கின்ற பாரிய பொறுப்பு இவர்களது கைகளிலேயே உண்டு.

இஃதே இத் துறையை நிறுவியவர்களது கனவை நனவாக்க வழி செய்யும். மேலும் மக்களுக்கும் நாட்டுக்கும் பெருமை சேர்க்கும் வழியுமாகும்.

(முற்றும்)

# அம்பாறை மாவட்டத்தை மொழி அடிப்படையில் இரு நிர்வாக மாவட்டங்களாக பிரிக்க வேண்டுமென்ற கோரிக்கை. ஒரு பார்வை



பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்
முன்னாள் துணைவேந்தர்

அட்டவணை IV இல் அம்பாறை மாவட்டத்தில் சிங்கள மொழி பேசும் வலயத்தின் நிலப்பரப்பு, குடிசனத் தொகை, இனவிகிதாசாரம் பின்வருமாறு,

அட்டவணை IV

| நிர்வாகப் பிரிவு | பரப்பு (ச.கி.மீ) | குடித்தொகை | சிங்களவர்(%) | தமிழர்(%) | முஸ்லிம்(%) | ஏனையோர்(%) |
|---|---|---|---|---|---|---|
| அம்பாறை | 174 | 43829 | 98.74 | 0.43 | 0.31 | 0.52 |
| உகனை | 485 | 58325 | 99.93 | 0.06 | 0.01 | -- |
| தமணை | 542 | 38692 | 99.50 | 0.11 | 0.35 | 0.5 |
| படியத்தளாவ | 379 | 18290 | 99.33 | 0.19 | 0.45 | 0.03 |
| மகாஓயா | 667 | 20828 | 99.68 | 0.10 | 0.19 | 0.03 |
| தெஹியத்திக்கண்டிய | 394 | 60178 | 98.43 | 0.12 | 0.66 | 0.79 |
| லகுகல | 815 | 8914 | 93.48 | 6.48 | 0.02 | 0.01 |
| | 3456 | 249056 | 99.06 | 0.39 | 0.21 | 0.33 |

அம்பாறை மாவட்டத்தின் மொத்த குடிசனத் தொகையில் 249056 பேர் சிங்கள மொழி பேசும் வலயத்தில் வாழ்ந்தனர். இவ்வலயத்தின் மொத்த குடிசனத் தொகையில் 99.06% சிங்களவராகும். லகுகல பிரதேச செயலகம் தவிர ஏனைய ஆறு பிரதேச பிரிவுகளில் சிங்கள மக்கள் 98 விகிதத்திற்கு மேல் உள்ளனர்.

லகுகலையில் மாத்திரம் சிறியளவு தமிழ் மக்கள் வாழ்கின்றனர். இவ்வலயம் மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பில் 78.26 வீதத்தைக் கொண்டுள்ளது. சராசரி குடிசன வடர்த்தி சதுர கிலோ மீற்றருக்கு 2012 இல் 72 பேராக இருந்தது. 2012 இல் இவ் வலயத்திற்குள் 967 தமிழரும், 515 முஸ்லிம்களும், 841 ஏனையோரும் வாழ்ந்தனர். தமிழர்கள் கூடுதலாகப் பாணமை கிராமத்தில் வாழ்கின்றனர். இவ்கள்பூர்வீகக் குடிகள். மேலும் உகந்தை முருகன் கோயில் சூழலில் கூடுதலாக தமிழர் இருக்கின்றனர். லகுகல, மகாஓயா, படியத்தளாவப் பகுதிகளில் பழைய புராதன சிங்களக் கிராமங்கள் காணப்படுகின்றன. அம்பாறை, தமன, உகன பகுதிகள் கல்லோயா திட்டத்தின் மூலம் அபி விருத்தி செய்யப்பட்டன. இங்கு வாழ்வோரின் மிகப் பெரும்பான்மையானோர் 1950, 1960 களில் குறிப்பாக கேகாலை, கம்பஹா மாவட்டங்களில் இருந்து கொண்டு வரப்பட்ட சிங்கள விவசாயக் குடும்பங்களாகும். இதேபோல் தெஹியத்தக் கண்டியில் 1980/ 1990 களில் மகாவலி C திட்டம் மூலம் பெருமளவு சிங்கள விவசாயக் குடும்பங்கள் குடியேற்றப்பட்டன. தொகுத்து நோக்குகையில் இவ் வலயம் முழுமையான ஒரு சிங்கள மொழியும் பௌத்த கலாசாரமும் மாத்திரம் காணப்படும் ஒரு பிரதேசமாகும்.

அம்பாறை மாவட்டத்தை மொழி வழியாக பிரிக்க வேண்டும் என்ற கோரிக்கை குறித்து முஸ்லிம் , தமிழர், சிங்களவர் ஆகியோரது நிலைப்பாடு பற்றி நோக்குகையில் மூவரிடத்து வெவ்வேறான நிலைப்பாடுகள் காணப்படுவதைக் காணலாம். இப்பகுதி முஸ்லிம் மக்களும் முஸ்லிம் தலைவர்களும் கரையோர தமிழ் பேசும் மாவட்டம் உருவாக்கப்பட வேண்டும் என்று குரல் எழுப்புவதுடன் அதற்காக பேரம்பேசும் முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றனர்.

2015 ஜனாதிபதித் தேர்தலில் கரையோர மாவட்டக் கோரிக்கைக்கு உடன்படுபவர்களுக்கு தமது ஆதரவை நல்க முஸ்லிம் காங்கிரஸ் தயாராக இருந்தது. இதற்கு உடன்படா நிலையில் தான் முஸ்லிம் காங்கிரஸ் பொது வேட்பாளரான மைத்திரிபால சிறிசேனவுக்கு தங்கள் ஆதரவை நல்கினர். இன்று இக்கட்சி கரையோர மாவட்ட கோரிக்கையை வலியுறுத்தி வருகின்றது. கரையோர மாவட்டம் கிடைக்கப்பெற்றால் இலங்கையில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் மாவட்டம் என்ற அந்தஸ்தை பெறும். இதன் மூலம் பொருளாதார அபிவிருத்தி மற்றும் இஸ்லாமிய பண்பாடுகளை முன்னெடுக்க வசதியாக அமையும் என்பதே இவர்களது நிலைப்பாடாகும்.

இலங்கையில் பேருவளை, காலிநகர், கொழும்பு நகர், புத்தளம், கண்டி அக்குரண, மூதூர்-கிண்ணியா போன்ற இடங்களில் முஸ்லிம் கள் செறிவாக வாழ்ந்தாலும் பிரதேச செயலக பிரிவிற்கு மேல் செல்ல முடியாது. கல்முனை கரையோர மாவட்டத்திலேயே தென் கிழக்கு பல் கலைக்கழகம், சம்மாந்துறை தொழில் நுட்பக் கல்லூரி மற்றும் இஸ்லாம் மதச் சார்பான கல்வி நிலையங்கள் பல அமைந்துள்ளன.

ஒலுவில் துறைமுகமும் இங்குள்ளது. மேலும் மாநகரசபை அந்தஸ்துள்ள கல்முனை, அக்கரைப்பற்று நகர்கள் இங்கு காணப்படுகின்றன. முஸ்லிம்களின் கல்வி, கலாசாரம் மற்றும் விவசாயம், வர்த்தகம், மீன்பிடி ஆகிய துறைகளில் இப்பகுதி முக்கியத்துவம் பெற்று இருப்பதால் கரையோரப் பகுதியை தனி மாவட்டமாக ஆக்கினால் தங்களது அபிலாஷைக்கு ஏற்ப சகல துறைகளில் மேம்படுத்தி தங்கள் இருப்புக்கு ஏற்ப இதனை விருத்தி செய்ய முடியும் என கருதுகின்றார்கள்.

முஸ்லிம்கள் கரையோர மாவட்டம் உருவாக வேண்டும் என மிகவும் கடுமையாக போராடுகின்றார்கள்.

அம்பாறை மாவட்டத்திலிருந்து கரையோரத் தமிழ் பேசும் மாவட்டம் உருவாவதை தமிழ் மக்கள் விரும்பினாலும் பொறுத்திருந்து பார்ப்போம் என்ற நிலையில் இருக்கின்றனர். கரையோரத் தமிழ் பேசும் மாவட்டம் உருவாக்கப்படின் இம்மாவட்ட மக்கள் தொகையில் தமிழர்களின் விகிதம் 28 வீதத்திற்கு மேல் இருக்கும். தற்பொழுது அம்பாறை மாவட்ட மக்கள் தொகையில் 17.4 வீதமாக இருப்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் புதிய மாவட்டம் உருவாக்கப்படின் இம்மாவட்டத்தில் தமிழர்களின் நிலை உயருமா என்பதும் கேள்விக்குறியாகும். நிர்வாகத்தில் தமிழ் மொழிப் பாவனை சிறப்பிடம் பெறும், அதில் ஐயமில்லை. எனினும் மற்றும் விடயங்களில் முஸ்லிம் சகோதரர்களின் நிலைப்பாடுகளிலேயே தங்கியிருக்கும்.

மட்டக்களப்பு மாவட்ட மக்கள் தொகையில் 25 வீதம் சற்றுக் கூடுதலாக இருக்கும். முஸ்லிம் மக்கள், அந்த மாவட்டத்தின் அரசியலில், நிர்வாகத்தில், பொருளாதாரத்தில், வர்த்தகத்தில் சிறப்பிடம் பெற்றுள்ளனர். இதேபோல் பிரேரிக்கப்படும் கரையோர மாவட்டத்தில் தமிழ் நிலை மேம்பட வாய்ப்பு இருக்காதா? என்ற கேள்வி எழுகின்றது. ஆனால் கரையோர மாவட்ட தமிழ் மக்கள் 30 வருட யுத்தத்தாலும் புறக்கணிப்புக்களால் பெரிதும் பாதிக்கப்பட்டு வறியவர்களாகவும் மற்றும் கல்வி சமூக அந்தஸ்தில் குறைந்தவர்களாக காணப்படுகின்றனர். இதனால் கரையோரத் தமிழ்மக்கள் அரசியலிலும் பொருளாதாரம் மற்றும் பல துறைகளில் நல்ல நிலையிலுள்ள முஸ்லிம் சகோதரர்களுடன் சமநிலையில் விளையாடக்கூடிய நிலையில் இல்லை.

மேலும் இலங்கைத் தமிழ்த் தலைமைகள், வடக்கிலும் மட்டக்களப்பிலும் மையம்கொண்டுஇருப்பதால்இவர்களது உதவி கிட்டுவதும் குறைவு. இத்தகைய பலவீனமான நிலையில் முஸ்லிம் சகோதரர்களின் ஆளுகைக்குட்பட்டால் மேலும் பின்னடைவைச் சந்திக்கலாம் என பயப்படுகின்றனர். முஸ்லிம் மக்கள் பொருளாதார நிலையில் உயர்வாக இருப்பதால் தமிழர்களது காணிகளை வாங்கி விடுவார்கள் என்றும் பல்வேறு முறைகளில் தாங்கள் மேல் வருவதைத் தடுத்துவிடுவார்கள் என்ற பயம் தமிழர்கள் மத்தியில் காணப்படுகிறது.

கல்முனை மாநகர சபை நிர்வாகத்திலும் கல்முனை தமிழ்ப் பிரதேச செயலக தரமுயர்த்தல் கோரிக்கையிலும் தொடர்பற்ற தமிழ்க் கல்வி வலயம் அமைக்கும் கோரிக்கையிலும் அம்பாறை மாவட்ட தமிழர்களுக்கு கசப்பான அனுபவங்களைக் கொண்டுள்ளனர். பல நூற்றா ண்டு காலமாக அயலவர்களாக வாழ்ந்தும் தங்களின் உரிமைகளைப் பெற முஸ்லிம் சகோதரர்கள் உதவியாக இருக்கவில்லை என்றும் முட்டுக்கட்டைகள் போடுகிறார்கள் என்றும் குறிப்பாக கல்முனை தமிழர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் எல்லா முஸ்லிம் பாடசாலைகளை இணைத்து மட்டக்களப்பு மத்திய கல்வி வலயம் உருவாக்கப்பட்டு அது சிறப்பாக இயங்குகின்றது. இதைப் போல அம்பாறை மாவட்டத்திலுள்ள தமிழ்ப் பாடசாலைகள் யாவையும் ஒரே கல்வி வலயத்திற்குள் கொண்டு வர வேண்டும் என தமிழர் முயற்சித்தும் இன்றுவரை கைகூடவில்லை. மட்டக்களப்பில் ஒரு நிலைப்பாடு, அம்பாறை இன்னொரு நிலைப்பாடா? மேலும் கல்முனைக்குடி, சாய்ந்தமருது, சம்மாந்துறை கிராமங்களில் வரலாற்று ரீதியாக தமிழர்கள் வாழ்ந்திருந்த பொழுதும் இன்று தமிழர்கள் இல்லாது போய் விட்டார்கள். மேலும் திராய்க்கேணி, அட்டப்பள்ளம் மற்றும் நிந்தவூர், அட்டாளைச் சேனைப் பிரிவுகளில் காணப்படும் தமிழ்க் கிராமங்களின் இருப்பு கேள்விக்குறியாகவுள்ளது.

தமிழ்பேசும் கரையோரப் பகுதிகளில் தமிழர்கள் மூன்றில் ஒரு பிரிவினராக 1950களில் இருந்த பொழுதும் கூட கல்முனை, பொத்துவில், நிந்தவூர் என மூன்று தொகுதிகளை உருவாக்கி மூன்று தொகுதியிலும் தமிழர்களை சிறுபான்மையினராக்கி ஒரு தொகுதியும் தமிழர் பாராளுமன்றம் செல்ல முடியாத நிலை 1959 தொடக்கம் 1977 வரை காணப்பட்டதும் தங்கள் நிலையில் இருப்பதாகக் குறிப்பிடுகின்றனர்.

கல்முனை மாநகர சபைக்குள் இருக்கும் சாய்ந்தமருதுக்கு தனியான நகரசபை கோரிக்கைக்கு உடன்படும் முஸ்லிம் தலைவர்கள் கல்முனை தமிழ்ப் பிரதேச செயலகத்தை தரமுயர்த்த ஏன் எதிர்க்க வேண்டுமென்று பல கேள்விகளைத் தொடுக்கின்றனர். கல்முனை தமிழ்ப் பிரதேச செயலகத்தை தரமுயர்த்த எவ்வளவோ போராட்டம் நடத்தியும் இன்னும் ஒரு முடிவைக் காணவில்லை. இப்படிப் இப்பிரதேசத்தில் தாங்கள் எதிர்நோக்கும் பல பிரச்சினைகளுக்கு இப்பகுதி முஸ்லிம் தலைவர்கள் நல்ல தீர்ப்பை தருவார்களானால் புதிய கரையோர மாவட்டத்தை வரவேற்போம். பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் இல்லாவிட்டால் இருக்கிற மாதிரி இருந்திட்டுப் போவோம். மாவட்ட சிங்களவரும் முஸ்லிம்களும் தங்கள் தங்கள் பிரச்சினைகளை பேசித் தீர்க்கட்டும் என்ற நிலைப்பாடு தமிழ் மக்களிடம் காணப்படுகிறது.

கரையோரத் தமிழ் மக்கள் தமிழ்த் தேசிய முன்னணியிலும் சந்தேகம் கொண்டுள்ளனர். வடக்கு கிழக்கு இணைப்பு என்ற நிலையில் முஸ்லிம் மக்களுடன் நெருக்கமான உறவை தமிழ்த் தலைமைகள் முன்னெடுக்கின்றார்கள். இந்த முன்னெடுப்பில் கரையோர தமிழ் மக்களின் உரிமைகள், அபிலாசைகள் கவனத்திற்கு எடுக்கப்படாது போகலாம் என்ற பயமும் கரையோரத் தமிழ் மக்களிடம் காணப்படுகின்றது. தங்களுக்கு உதவி செய்ய யாருமில்லை என்றும் காலம்தான் பதில் சொல்லும் என்ற நிலையில் இருக்கின்றார்கள்.

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த சிங்கள மக்கள் இம்மாவட்டத்தை மொழி ரீதியாக பிரிப்பதை எதிர்க்கின்றார்கள். இவர்கள் தற்போதைய கட்டமைப்பில் மாற்றம் கொண்டு வருவதை விரும்பவில்லை. மேலும் தாங்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதியில் தங்களது நிலையை பலப்படுத்திக் கொண்டு தமிழ் மொழி பேசும் பிரதேசத்தில் தங்களது செல்வாக்கை முன்னெடுக்க முனைகின்றனர். இவர்கள் தற்பொழுது தங்களது செயற்பாடுகளை பொத்துவில், இறக்காமம், திருக்கோவில் ஆகிய பிரிவுகளில் முன்னெடுக்க முனைகின்றார்கள். இப்பகுதிகளில் விகாரை அமைத்தல், விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் குடி யேறுதல் போன்றன சிறிது சிறிதாக இடம் பெறுகின்றன. அட்டாளைச் சேனைப் பிரிவில் தீகவாவி விகாரைப் பகுதியில் சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின் றனர். பொத்துவில் பிரதேச பிரிவில் வெட்டவெளி பொத்துவில் நகரம், உல்லைக் கிராமத்தில் சிங்கள மக்கள் குடியேறியுள்ளனர். உல்லைக் கிராமம் மீன்பிடியில் முக்கியத்துவம் பெற்றது. பொதுவில் அம்பாறை மாவட்டத்தில் சிங்கள மக்கள் உட்பகுதியில் இருந்து கிழக்கு நோக்கிய நகர்வு சிறிதாக ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றதுடன் கிழ க்கு கரையோரத்தில் குறிப்பாக பொத்துவில் பகுதியில் மீன்பிடியில் ஈடுபடும் போக்கு அதிகரித்து வருகின்றது.

அம்பாறை மாவட்டத்தை மொழி வழியாக இரு மாவட்டங்களாக பிரிப்பதற்கு பிரதான அரசியல் கட்சிகள் சாதகமாக இருப்பதாகத் தெரியவில்லை. வடக்கு– கிழக்கு மாகாண தமிழ்பேசும் மக்களின் அரசியல் தீர்வு என்ற நிலையில் சில ஆண்டுகளுக்கு முன்னர் அம் பாறை மாவட்ட சிங்களப் பகுதிகளை ஊவா மாகாணத்துடன் இணைக்கலாம் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. தற்பொழுது இக்கருத்துக் குறி த்து யாரும் முன்னெடுப்பதில்லை. இதேபோல் இணைந்த வடகிழக்கிற்குள் தென்கிழக்கு அலகு அமைப்பு என்ற கருத்தோட்டமும் தற்பொழுது நலிவு பெற்றுவிட்டது.

தற்பொழுதும் தமிழர் தரப்பால் வடக்கு– கிழக்கு இணைப்பு மீளவும் மீளவும் வலியுறுத்தப்படுகின்றது. மேலும் இவர்களால் சமஷ்டி அரசியலமைப்பும் வேண்டுமென்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. முஸ்லிம் தலைவர்கள் பொதுவாக வடக்கு– கிழக்கு மாகாணங்கள் இப் பொழுது இருக்கும் நிலையிலே தொடர்ந்து இருக்கவேண்டுமென்ற நிலைப்பாட்டிலிருக்கின்றனர். எனினும் வடக்கு– கிழக்கு மாகாணங்களுக்கிடையே பொருளாதாரம், மொழி, கலாசாரத்துறைகளில் உறவை வளர்த்துக் கொள்ளலாம் என்ற கருத்தைக் கொண்டுள்ளனர். சிங்களத் தலைவர்கள் ஒற்றை யாட்சியை இறுக்கமாக வலியுறுத் துவதுடன்வடக்கு–கிழக்கு மாகாண இணைப்புக்கு முழு எதிராக இருக்கின்றார்கள்.

இன்றைய தேசிய அரசியல் சூழ்நிலை புதிய கரையோர மாவட்டத்தை ஏற்படுத்தக்கூடிய நிலைமைகள் காணப்படவில்லை. புதிய மாவட்டம் ஒன்று உருவாக்க வேண்டுமென்றால் அரசியல் யாப்பில் திருத்தம் கொண்டு வரவேண்டும். இதற்குப் பாராளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை அங்கத்தவர்களின் ஆதரவு தேவை. புதிய அரசியல் யாப்பு செயற்பாட்டுடன் குழம்பிப் போயிருக்கும் அரசியல் சூழ்நிலையில் அம்பாறை மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கும் கோரிக்கை முக்கியம் பெற வாய்ப்பு தற்பொழுது குறைவாகவே இருக்கின்றபொழுதும் தொடர்ந்து இக்கோரிக்கையை முஸ்லிம் மக்களும் தமிழ் மக்களும் இணைந்து முன்னெடுத்தால் காலம்தாழ்த்தியாவது நல்லமுடிவு கிட்டும்.

(முற்றும்)



# சிறுவர் அரங்கம்

## யானைக்கு வந்த திருமண ஆசை

மன்னரின் யானையொன்று அண்டை அயல் நகரங்களுக்குச் சென்று பயிர்களை அழித்தும், மக்களில் பலரை நசுக்கிப் படுகாயப்படுத்தியும் அடிக்கடி பெருந் தொந்தரவு கொடுத்துக் கொண்டிருந்தது.


இதுபற்றி பாதிக்கப்பட்ட சிலர் மன்னரிடம் முறையிட்ட போது மன்னர் அதனைப் பெரிய விடயமாகக் கருதவில்லை.

தன்னுடைய யானை மீது வீண் புகார்கள் கூறுவதாகச் சிலரைக் கடிந்தும் கொண்டார். அதனால் யானையின் அட்டகாசம் பற்றி மேற்கொண்டு முறையிட யாருக்கும் துணிச்சல் வரவில்லை.

அவர்கள் முல்லாவைச் சந்திந்து மன்னரின் யானையால் தங்களுக்கு ஏற்படும் தொல்லைகளைப் பற்றி எடுத்துக்கூறி மன்னரிடம் சொல்லி ஏதாவது செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். முல்லா தம்மிடம் வந்தவர்களை நோக்கி " நீங்க எல்லாம் ஒன்று திரண்டு அந்த யானையைப் பிடித்து ஒரு மரத்தில் கட்டிப் போட்டு விடுங்கள்" என்றார்.

ஐய்யய்யோ மன்னரின் யானையைக் கட்டிப் போட்டு மீள முடியுமா? மன்னர் கடுமையான தண்டனை விதிப்பார்" என்று அச்சத்துடன் கூறினர் ஊர் மக்கள்.

நீங்கள் நான் சொன்னவாறு செய்யுங்கள். மன்னரிடமிருந்து யாராவது அங்கு வந்து கேட்டால்



முல்லாதான் யானையைக் கட்டிப் போடச் சொன்னதாகக் கூறி விடுங்கள் என்று முல்லா கூறினார்.

பாதிக்கப்பட்ட மக்கள் அனைவரும் ஒன்று கூடி மிகவும் சிரமப்பட்டு யானையைப் பிடித்து ஒரு பெரிய மரத்தில் கட்டிப் போட்டு விட்டனர்.

செய்தி அறிந்த மன்னர் முல்லாவுக்கு ஆள் அனுப்பி தம்மை வந்து சந்திக்குமாறு உத்திரவு பிறப்பித்தார்.

முல்லா அரண்மனை சென்று மன்னரை வணங்கினார்.

"என்ன முல்லா என்னுடைய யானையைக் கட்டிப் போட்டீராமே? உமக்கு அவ்வளவு துணிச்சல் எங்கிருந்து வந்தது?" என்று கோபத்துடன் கேட்டார். முல்லா பணிவுடன் மன்னரை நோக்கி " மன்னர் பெருமானே தங்களது யானை எங்கள் ஊர்ப்பக்கம் வந்து தனக்கு ஒரு பெண்ணைப் பார்த்துத் திருமணம் செய்ய வேண்டும் என்று கேட்டு அட்டகாசம் செய்ய ஆரம்பித்து விட்டது.

மன்னருடைய யானையின் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டியது குடிமக்களாகிய எங்கள் கடமையல்லவா! அதனால் தங்கள் யானைக்காக ஒரு பெண் யானையைத் தேடிக் கொண்டிருக்கிறோம். பெண் யானை கிடைப்பதற்குள் யானை கோபித்துக் கொண்டு ஏதாவது தாறுமாறான நடவடிக்கையில் ஈடுபட்டு விடக் கூடாதே என்பதற்காகத்தான் அதைக் கட்டி வைத்திருக்கிறோம் " என்றார்.

என்ன? யானையாவது தனக்குத் திருமணம் செய்ய வேண்டும் என்று கேட்பதாவது! யாரிடம் விளையாடுகிறாய்?" என்று மன்னர் கோபத்துடன் கேட்டார்.

மன்னர் பெருமான் அவர்களே தயவு செய்து சிரமம் கருதாது ஒரு தடவை எங்கள் ஊருக்கு வந்து தங்கள் யானையையே விசாரித்துப் பாருங்கள். நான் ஏதாவது பொய் சொல்லியிருந்தால் எனக்கு என்ன தண்டனை கொடுத்தாலும் ஏற்றுக் கொள்கிறேன் என்று முல்லா கூறினார்.

மன்னர் தமது பரிவாரங்களுடன் முல்லாவை அழைத்துக் கொண்டு முல்லா சொன்ன பகுதிக்குச் சென்றார்.

வழி நெடுக்கிலும் விளை நிலங்களுக்கும் பழ மரங்களுக்கும் ஏற்பட்டிருந்த கடுமையான சேதத்தை அழிவைக் கண்டு அதிர்ச்சியுற்றார். அந்தப் பேரழிவுக்கு தனது யானைதான் காரணம் என்பதையும் உணர்ந்தார். தன்னை அந்தப் பகுதிகளுக்கு வரச் செய்வதற்காக முல்லா கையாண்ட தந்திரத்தையும் புரிந்து கொண்டார்.

மன்னர் உடனே தனது அதிகாரிகளை அழைத்து "யானையினால் யார் யார் அதிகமான சேதத்துக்கு உள்ளாகியிருக்கிறார்களோ அவர்களுக்குத் தாராளமான நஷ்ட ஈடு வழங்க உத்திரவிட்டார் பிறகு யானையைக் கொண்டு சென்று அரண்மனையில் கட்டிப் போடுமாறும் உத்திரவிட்டார்.

முல்லாவுக்கு ஊர் மக்கள் நன்றி சொல்லி அவரை வாழ்தினார்கள்.




## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1606 - இங்கிலாந்து மன்னன் முதலாம் ஜேம்சிற்கு எதிராகவும் நாடாளுமன்றத்திற்கெதிராகவும் சதி முயற்சியில் இறங்கியமைக்காக காய் ஃபோக்ஸ் என்பவன் தூக்கிலிடப்பட்டான்.
- 1747 - பால்வினை நோய்களுக்கான முதலாவது மருத்துவ நிலையம் லண்டனில் லொக் மருத்துவமனையில் நிறுவப்பட்டது.
- 1876 - அனைத்து இந்தியப் பழங்குடிகளும் அவர்களுக்கென அமைக்கப்பட்ட சிறப்பு இடங்களுக்கு செல்லுமாறு ஐக்கிய அமெரிக்க அரசு உத்தரவிட்டது.
- 1915 - முதலாம் உலகப் போர் ஜெர்மனி ரஷ்யாவுக்கெதிராக நச்சு வாயுவைப் பயன்படுத்தியது.
- 1928 - லியோன் ட்ரொட்ஸ்கி கசக்ஸ்தானுக்கு நாடுகடத்தப்பட்டார்.
- 1937 - சோவியத் ஒன்றியத்தில் 31 த்ரொட்ஸ்கி ஆதரவளர்கள் தூக்கிலிடப்பட்டனர்.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: அமெரிக்கப் படைகள் ஜப்பான் வசமிருந்த மார்ஷல் தீவுகளில் தரையிறங்கினார்கள்.
- 1946 - யூகொஸ்லாவியாவில் சோவியத் முறையிலான அரசியலமைப்பு கொண்டுவரப்பட்டு நாடு பொசுனியா எர்செகோவினா, குரொவேஷியா, மக்கெடோனியா, மொண்டெனே குரோ, சேர்பியா மற்றும் சிலவேனியா என ஆறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது.
- 1953 - வட கடல் பெருக்கெடுத்தன் விளைவாக நெதர்லாந்தில் 1,800 பேர் கொல்லப்பட்டனர்.
- 1958 - ஐக்கிய அமெரிக்காவின் வெற்றிகரமான முதலாவது செய்மதி எக்ஸ்புளோரர் 1 விண்ணுக்கு ஏவப்பட்டது.
- 1961 - நாசாவின் மேர்க்குரி-ரெட்ஸ்டோன் 2 விண்கலம் ஹாம் என்ற சிம்பன்சி ஒன்றை விண்ணுக்குக் கொண்டு சென்றது.
- 1968 - வியட்நாம் போர்: வியட் கொங் படைகள் சாய்கொன் நகரில் அமெரிக்க தூதராலயத்தைத் தாக்கினர்.
- 1980 - குவாத்தமாலாவில் ஸ்பெயின் தூதராலய முற்றுகையில் 39 பேர் உயிருடன் தீயிட்டுக் கொல்லப்பட்டனர்.
- 1990 - சோவியத் ஒன்றியத்தில் முதலாவது மாக்டொனால்ட் உணவகம் மாஸ்கோவில் திறக்கப்பட்டது.
- 1996 - கொழும்பு மத்திய வங்கியின் மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் 86 பேர் கொல்லபட்டு 1,400 பேர் வரை படுகாயமடைந்தனர்.
- 2003 - ஆஸ்திரேலியா, நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் வோட்டர்ஃபோல் என்ற இடத்தில் தொடருந்து ஒன்று தடம்புரண்டதில் சாரதி உட்பட 7 பேர் கொல்லப்பட்டனர்.

### பிறப்புகள்

- 1762 - லக்லான் மக்குவாரி, காலனித்துவ நிர்வாகி. (இ. 1824)
- 1797 - பிராண்ஸ் சூபேர்ட், ஆஸ்திரிய இசையமைப்பாளர் . (இ. 1828)
- 1881 - ஏர்விங் லாங்முயர், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் . (இ. 1957)
- 1902 - ஆல்வா மீர்டல், நோபல் பரிசு பெற்றவர். (இ. 1986)
- 1929 - ருடொல்ஃப் மொஸ்பாவர், நோபல் பரிசு பெற்ற ஜெர்மனியர்.
- 1935 - கென்சாபுரோ ஓயீ, நோபல் பரிசு பெற்ற ஜப்பானிய எழுத்தாளர்.

### இறப்புகள்

- 1580 - கர்தினால் ஹென்றி, போர்த்துக்கல், இலங்கை மன்னன். (பி. 1512)
- 1933 - ஜோன் கல்ஸ்வோதி, நோபல் பரிசு பெற்ற ஆங்கில எழுத்தாளர் . (பி. 1867)
- 1950 - டைகர் வரதாச்சாரியார், கருநாடக இசைக் கலைஞர் . (பி. 1976)
- 1955 - ஜோன் மொட், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் . (பி. 1865)
- 1973 - ராக்னர் ஆண்டன் ஃபிரீஷ், நோபல் பரிசு பெற்றவர் . (பி. 1895)
- 1987 - எம். பக்தவத்சலம், தமிழ் நாட்டின் முன்னாள் முதலமைச்சர் . (பி. 1897)
- 2009 -நாகேஷ், நகைச்சுவை நடிகர் .(பி. 1933)

### சிறப்பு நாள்

- நவூறு - விடுதலை நாள் . (1968)



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 100 | 70 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 95 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 200 | 200 | 200 |
| தக்காளி | 100 | 100 | 120 | 80 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 100 | 60 | 80 | 60 |
| கோவா | 40 | 100 | 20 | 30 | 40 |
| கரட் | 100 | 100 | 60 | 60 | 120 |
| பூசணி | 60 | 50 | 35 | 40 | 60 |
| புடோல் | 60 | 80 | 50 | 60 | 80 |
| வாழைக்காய் | 50 | 80 | 40 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 80 | 150 | 80 | 120 | 120 |
| பெரிய வெங்காயம் | 80 | 120 | 80 | 90 | 100 |
| பாகற்காய் | 100 | 200 | 100 | 120 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 70 | 100 | 120 |
| கருணைக் கிழங்கு | 60 | 100 | 50 | 100 | 80 |
| பயற்றங்காய் | 80 | 200 | 150 | 160 | 120 |
| லீக்ஸ் | 60 | 100 | 60 | 80 | 120 |
| பீற்றூட் | 60 | 100 | 170 | 60 | 80 |
| கறிமிளகாய் | 150 | 200 | 170 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 600 | 800 | 500 | 600 | 800 |
| போஞ்சி | 80 | 60 | 70 | 60 | 100 |
| கத்தரிதம்புள்ள | 120 | 100 | 40 | — | 100 |
| கீரை-1பிடி | 30 | 20 | 20 | 30 | 30 |
| தேசிக்காய் | 200 | 150 | 150 | 150 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 50 | 65 | 50-60 |
| இராசவள்ளி | 200 | 100 | .200 | 160 | 140 |
| வெங்காயப்பூ | 80 | 50 | 60 | 80 | 80 |
| முள்ளங்கி | 60 | 100 | 60 | 50 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 30 | 40 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 20- | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | 50 | 60 | 50 | 80 |

தந்திரமும் ஏமாற்றமும் அறநெறி நிற்கப் போதுமான அறிவில்லாத மூடர் செயலாகும்.

~ ஃப்ராங்லின்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## கிடைக்க இருந்த உரிமையை தாரைவார்த்துக் கொடுத்த தலைமை

தாரைவார்த்தல் என்றொரு சொல் நம் தமிழ் மொழியில் உண்டு. இச்சொல்லை அவ்வளவு நல்ல சொல்லாக யாரும் கருதுவதில்லை. அதற்குக் காரணமும் உண்டு.

தாரைவார்த்தல் என்பது தனக்குத் தேவையாக இருப்பதை மற்றொருவருக்குக் கொடுத்து தன்னையும் தன்னோடு சார்ந்தவரையும் ஏது மற்றவராக்குவது என்பது ஒரு பொருள் இதற்கு இன்னுமொரு பொருளும் உண்டு.

அதாவது எமக்கு இருக்கின்ற உரிமையை மற்றவருக்குக் கொடுத்து தன்னையும் தன் சார்ந்தவர்களையும் கந்தறுக்கச் செய்வது.

இத்தகையை பொருளைக் கொண்டதுதான் தாரைவார்த்தல் என்ற சொற்பதமாகும். தாரைவார்த்தல் என்பதை தானம் செய்வதாக, ஈகை செய்வதாக யாரும் பொருள்படுத்தி விடாதீர்கள். அவ்வாறான பொருள்படுத்தல் மிகப்பெரும் தவறு. தானம், என்பது வேறு தாரைவார்த்தல் என்பது வேறு.

தாரைவார்த்தல் என்ற சொற்பதத்தின் பொருளை செயல்வழி உதாரணத்தினூடாக விளக்குவதாக இருந்தால், அதற்கு எங்கள் தமிழ் அரசியல் தலைமையாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செய்ததைக் கூறுவதே பொருத்துடையதாக இருக்கும்.

போருக்குப் பின்பு சர்வதேச நாடுகள் தமிழினத்துக்காக குரல் கொடுத்தன. ஐ.நா மனித உரிமைகள் ஆணையத்தில் இலங்கைக்கு எதிராகத் தீர்மானமும் கொண்டு வரப்பட்டது. கூடவே ஈழத் தமிழர் வரலாற்றில் என்றுமில்லாத அளவில் இலங்கைத் தமிழினம் தொடர்பில் உலக நாடுகளும் ஐ.நா அமைப்பும் கவனம் செலுத்தின.

இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு கண்டே ஆகவேண்டும் என்று விடாப்பிடியாக நின்றன. இதில் அமெரிக்காவின் நிலைப்பாடு எமக்கு மிகுந்த சாதகமாக இருந்தது.

எனினும் எங்கள் தமிழ் அரசியல் தலைமையை இலங்கை ஆட்சியாளர்கள் சிக்கனப் பிடித்துக் கொண்டனர். பதவிகளை வழங்கினர். இதன் காரணமாக எங்கள் அரசியல் தலைமை, போருக்குப் பின்பு ஈழத் தமிழர்களுக்குக் கிடைக்கப் பெற்ற மிகப்பலத்த சர்வதேச ஆதரவை அப்படியே தாரைவார்த்து தண்ணீரில் விட்டனர்.

இலங்கையில் இருக்கக்கூடியது நல்லாட்சி என்றும் அவர்கள் எங்கள் பிரச்சினையைத் தீர்த்து வைப்பர் என்பது போலவும் சர்வதேசத்தின் மத்தியில் காட்டிக் கொண்டனர்.

இதற்கு வலுச்சேர்க்கும் வகையில் விடுதலைப் புலிகளும் குற்றம் செய்துள்ளனர் என்றும் முஸ்லிம் மக்களை வடக்கில் இருந்து புலிகள் வெளியேற்றியது தவறு என்பது போலவும் உலக நாடுகள் மத்தியில் கூறிக்கொண்டனர்.

வன்னிப் பெருநிலப்பரப்பில் தமிழின அழிப்பு நடந்ததாலேயே சர்வதேச நாடுகள் எங்கள் விடயத்தில் அதீத கவனம் செலுத்தினவாயினும் சம்பந்தம் இல்லாமல் இதற்குள் முஸ்லிம் மக்களின் இடப்பெயர்வுகளையும் விடுதலைப் புலிகளின் முன்னைய தாக்குதல் சம்பவங்களையும் புகுத்தி இலங்கைக்கு எதிரான சர்வதேசத்தின் அழுத்தத்தை வலுக்குறைப்புச் செய்தனர். இதன் விளைவு இன்று தமிழர்களுக்கு எதுவுமில்லை என்றாகிவிட்டது.

ஆம், எமக்காகக் குரல் கொடுத்த அமெரிக்காவின் ஆட்சித் தலைமையில் இப்போது மாற்றம். ட்ரம்ப் ஜனாதிபதியாகியுள்ளார். அவர் இலங்கை அரசுக்கு உதவத் தயாராகிவிட்டார்.

என்ன செய்வது எங்களுக்குக் கிடைத்த வாய்ப்பை தாரைவார்த்துவிட்ட எங்கள் அரசியல் தலைமை இனி என்னதான் செய்யப் போகிறதோ யார் அறிவார்.

## பல்கலை. அனுமதிக்கான விண்ணப்பம்; வழிகாட்டல் கருத்தரங்கு வடமராட்சியில்

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக அனுமதிக்கான இணைய வழி விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கான வழிகாட்டல் கருத்தரங்கு வடமராட்சி வலயத்துக்குட் பட்ட பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்காக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இக்கருத்தரங்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் பயிற்சிபெற்றவளவாளர்களால் நடத்தப்படவுள்ளது. அனைத்து மாணவர்களும் 02.02.2017 வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வடமராட்சி வலய கல்வி அலுவலக மாநாட்டு மண்டபத்திற்கு வருகை தந்து பயனடையுமாறு கேட்டுக் கொள்கின்றேன் என வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ

## பெற்றோர்களுக்கான விழிப்புணர்வுக்கூட்டம்

வலிகாமம் கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவால் நடத்தப்படும் பெற்றோர்களுக்கான கட்டாயக் கல்வி விழிப்புணர்வுக் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு யா/ ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயத்தில் அதிபர் வே.சிவசக்திவேல் தலைமையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ந.காணடீபன், உதவிக் கல்விப் பணிப்பாளர் ச.கனகேஸ்வரன், முறைசாராக் கல்வி செயற்றிட்ட அலுவலர் ந.சண்முகராஜா, சிறுவர் உரிமை மேம்பாட்டு அலுவலகர் எஸ்.பத்மராஜா ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரை வழங்கவுள்ளனர். (இ-3)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று செவ்வாய்க் கிழமைகாலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை **கிளிநொச்சி பிரதேசத்தில்** நாச்சிக்குடா, நாகபடுவான், முழங்காவில், குமுழமுனை. பல்லவராயன் கட்டு, வெள்ளாங்குளம், SLLI கணேஷபுரம், வெள் ளாங் குளம், 651 ஆவது படைப்பிரிவு, 652 ஆவது படைப்பிரிவு முகாம், 2 ஆவது அதிரடிப்படை முகாம, நாச்சிக்குடா கடற்படை முகாம, இயாஸ் ஐஸ் தொழிற்சாலை ஆகிய இடங்களிலும் வவுனியா **பிரதேசத்தில** வெளிக்குளத்திலிருந்து குடாகச்சக் கொடிய வரை, கோவில் குளத்திலிருந்து சிதமபரபுரம் வரை. TMM கல்லுடைக்கும் ஆலை ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசததில முருங்கனிலிருந்து தலைமனனார் வரை. வங்காலை கடற்படை முகாம, வங்காலை நீர்ப்பாசனத் திணைக்களம், கமலாம்பிகை அரிசி ஆலை, மாந்தை உப்பு உற்பத்தி நிலையம், கீரி ஐஸ் தொழிற்சாலை, மனனார் நீர்ப்பாசனத் திணைக்களம், மன்னார் தொலைத் தொடர்பு நிலையம், ஆவேமரியா ஐஸ் தொழிற்சாலை, மன்னார் வைத்தியசாலை, விசேட அதிரடிப்படை முகாம், வங்காலைப்பாடு ஐஸ்தொழிற் சாலை, விசேட அதிரடிப் படை முகாம். வங்காலைப்பாடு ஐஸ் தொழிற்சாலை, எருக்குப்பிட்டி பாம் ஹவுஸ், மீன்பிடி சமாசம், அந்தோனிப் பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, கூல்மென் ஐஸ் தொழிற் சாலை, தலைமன்னார் கடற் படை முகாம், சீனத்துறை முகம் பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்

**தூய்மை என்றால் என்ன?**




சுத்திகரிப்பு நடவடிக்கைகளைத்தான் தூய்மை எனறு கூறுகிறோம். தூய்மை இரண்டு வகைப்படும். ஒனறு புறத்தூய்மை, மற்றொன்று அகத்தூய்மை.

இயற்கை உபாதைகளை வெளியேற்றுதல், பல் துலக்குதல், குளித்தல் ஆகியவை புறத் தூய்மையாகும். அகத்தூயமை என்பது மனதைத் தூய்மையாக வைத்துக் கொள்வதாகும். (தொடரும்)

## மெய்வல்லுநர் போட்டி

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு கலாசாலை மைதானத்தில் அதிபர் வீ. கருணலிங்கம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், சிறப்பு விருந்தினராக இலங்கை தமிழாசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் சரா. புவனேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

## மேன்பவர் ஊழியர் சங்கத்தின் உபதலைவரைக் காணவில்லை

(கொழும்பு)

இலங்கை டெலிகொம் மேன்பவர் ஊழியர் சங்கத்தின் உப தலைவர் காணாமற் போயுள்ளதாக அவரது மனைவி பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

ஊழியர் சங்கத்தின் உப தலைவரான எஸ். மங்கள காணாமற்போயுள்ளதாக அவரது மனைவி பிலியந்தலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

கொழும்பு கோட்டையில் உள்ள டெலிகொம் நிறுவனத்திற்கு அருகில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி வந்த மங்கள, கடந்த சனிக்கிழமை நள்ளிரவு வீட்டுக்கு வருவதாக கூறி, உண்ணவிரதப் போராட்டம் நடக்கும் இடத்திற்கு சென்றுள்ளார்.

எனினும் அன்றைய தினத்தில் இருந்து அவரை பற்றி எந்ததகவலும் கிடைக்க வில்லை என மனைவி மேற்கொண்டுள்ள முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## தேசோதய கிளைகள் திறப்பு

(யாழ்ப்பாணம்)

சர்வோதய நிறுவனத்தின் தேசோதய அமைப்பின் கோப்பாய், தெல்லிப்பழை கிளைகள் இன்று செவ்வாய்க்கிழமை சர்வோதய நிறுவனத் தலைவர் டாக்டர் வி. ஆரியரட்ணவால் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்படும். இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட சர்வோதய அமைப்பின் இணைப்பாளர் எஸ்.யுகேந்திரா, யாழ். மாவட்ட தேசோதய தலைவர் கலாநிதி நா.தனேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்க வுள்ளனர். கோப்பாய், தெல்லிப்பழை பிரிவுகளைச் சேர்ந்த தேசோதய அங்கத்தவர்களுக்கு அங்கத்தவர் அடையாள அட்டைகளும் வழங்கப்படவுள்ளன. (இ-3-134)

## சாஸ்திரங்கள்

✦ திருதியை திதியில் மனைகோல உகந்த திதியாகும். இந்தத் திதியில் வீடு கட்ட ஆரம்பிப்பது உத்தமமாகும். இதுவும் வளர்பிறை திருதியையாக இருப்பின் மிகவும் உத்தமமாகும்.

-பிரம்ம ரகசியம்

✦ தசமி, பௌர்ணமி ஆகிய திதிகள் கிரகப் பிரவேசத்திற்கு மிகவும் உத்தமமானதாகும். மேற்சொன்ன இம்மூன்று திதிகளுக்கும் நட்சத்திர தோஷம், கிரகதோஷம் எதுவும் கிடையாது.

-பிரம்ம ரகசியம்

✦ மலையின் உச்சி, நதிக்கரை, புண்ணியபூமி, சமுத்திரக் கரை, புற்றுகள், துளசிகளின் அடிகளில் உள்ள மண்களை எடுத்துப் பயன்படுத்துவதே திருமண் ஆகும்.

-திருமண் சிறப்பு

✦ நம் வீட்டுக்குப் பின்புறத்தில் அதிக எண்ணிக்கையில் மரங்கள் வளர்க்கலாம். வீட்டின் பின்புறம் உள்ள மரங்கள் உங்களைப் பாதுகாக்கும் கேடயங்களாக விளங்கும்.

-வாஸ்து சாஸ்திரம்

✦ வீட்டின் முன்புறத்தில் மரங்கள் வளர்த்தல் கூடாது. ஒரு சில மரங்கள் மட்டுமே முன்புறம் வளர்த்தல் வேண்டும். முன்புறம் உள்ள மரங்களால் எவ்வித நன்மையும் இல்லை. பிரதான வாசலுக்கு நேர் எதிரே மரம் இருத்தல் கூடாது.

-வாஸ்து சாஸ்திரம்

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



❖ பலமின்மையே துயரத்திற்கு ஒரே காரணம்.நாம் பலவீனர்களாக இருப்பதால் நாம் கெட்டவர்களாகிறோம். நம்மிடம் பொய்யும் திருட்டும் கொலையும் வேறு பாவச் செயல்களும் இருப்பதற்குக் காரணம் நமது பலவீனமே.

❖ நாம் துன்பமடைவது நமது பலவீனத்தாலேயே. நாம் இறப்பதும் நமது பலவீனத்தால்தான். நம்மைப் பலவீனர்களாக்க ஒன்றும் இல்லாத போது மரணமும் இல்லை, துயரமும் இல்லை.

❖ நமக்கு வேண்டிய ஒரே பொருள் பலமே. உலகத்தின் நோய்க்கு மருந்தும் பலமே.

❖ பணக்காரர்களின் கொடுமைக்கு உட்படும்போது ஏழைகளுக்கு கட்டாயம் வேண்டிய மருந்தும் பலமே.

❖ படித்தவர்களின் கொடுமைக்குட்படும் போது படிக்காதவர்களுக்கு வேண்டிய மருந்தும் பலமே. பாவிகளின் கொடுமைக்கு உட்படும் போது பிற பாவிகளுக்கு வேண்டிய மருந்தும் பலமே.

# சைனிங்ஸ் வி.கழகம் நடத்தும் மென்பந்து சுற்றுத் தொடர்

## றெயின்போ சம்பியன்



சைனிங்ஸ் விளையா ட்டுக் கழகம் நடத்தும் அணி

க்கு 7 நபர்கள் 8 பந்துப் பரிமாற்றங்களை கொண்ட மென்பந்தாட்ட தொடரின் இறுதியாட்டத்தில் சைனிங்ஸ் அணி, றெயின்போ அணிகள் மோதின.

முதலில்ஆடிய றெயின்போ அணி 65 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

வெற்றி இலக்கை நோக்கி ஆடிய சைனிங்ஸ் அணி 19 ஓட்டங்களை மட்டுமே பெற றெயின்போ அணி இலகுவாக வெற்றியை பெற்று சம்பியனானது. (க)

# கோப்பாய் பிரதேச செயலக கழகங்களுக்கிடையிலான வி.போட்டி



கோப்பாய் பிரதேச செயலர் பிரிவின் பதிவு செய்யப்பட்ட விளையாட்டு கழகங்களுக்கிடையேயான கயிறு இழுவை போட்டியில் ஆண்களிற்கான இறுதி போட்டியில் கோப்பாய் ஐக்கியமும் நீர்வேலிஐக்கிய விளையாட்டு கழகமும் இறுதி போட்டிக்கு தகுதி பெற்றது.(க)

# நாவலடி உதயசூரியனை வீழ்த்தி சம்பியனாகியது அரியாலை ஐக்கியம்





நல்லூர் பிரதேச செயலகத் தல் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடை யிலான வருடாந்த விளையாட்டு விழாவின் ஒரு அங்கமான பெண்களுக்கான வலைப்பந்தாட்ட போட்டி யானது (29.01.2017) அரி யாலை சரஸ்வதி சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெற்றது.

இவ் இறுதிப் போட்டியில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நாவலடி உதயசூரியன் விளையாட்டு கழகம் மோதியது.

இதில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் 14 : 08 என்ற ரீதியில் வெற்றி பெற்று 2017 ஆம்ஆண்டுக்கான பெண களுக்கான வலைப்பந்தாட்ட வெற்றிக் கேடயத்தை தமதாக்கிக் கொண்டனர். (க)





31 ஆவது ரூபவாகினி கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் ஆண்கள் பிரிவில் சம்பியனான ஆவரங்கால் மேற்கு இளைஞர் கழகத்தையும் இரண்டாம் இடத்தைப் பெற்ற இளவாலை மத்தி இளைஞர் கழகத்தையும் படத்தில் காணலாம்.

# 2017 வன்னிச்சமர் உதைபந்தாட்டம் மருதநகர் உதயதாரகை சம்பியன்



சுவிஸ் நாட்டின் தாயகவி ருட்சம் அறக்கட்டளையின் அனுசரணையில் புதுக்குடியிருப்பு விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகம் நடத் திய வன்னிச்சமர் 2017 மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுத்தொடரில் கிளிநொ ச்சி, முல்லைத்தீவு, வவுனியா,மன்னார் ஆகிய மாவட்டங்களில் இரு ந்து 24 அணிகள் பங்குபற் றிய இந்த போட்டித் தொடரில் கிளிநொ ச்சி மருதநகர் உதய தாரகை அணி கிண்ணத்தை சுவீகரித்து சம்பியனாகியது. (க-310)

# கரவெட்டி பிரதேச செயலக கிரிக்கெட் சம்பியனாக முடிசூடியது ஞானம்ஸ்



2017 ஆம் ஆண்டுக்குரியகரவெட்டி பிரதேச செயலக விளையாட்டுப் போட்டியின் ஒரு அங்கமான கிரிக்கெட் போட்டிகள் கடந்த சனி, ஞாயிறு தினங்களில் நடத்தப்பட்டன.

அணிக்கு 11 பேர் 10 ஓவர்கள் கிரிக்கெட் கொண்ட சுற்றுப்போட்டியானது விலகல் அடிப்படையில் நடைபெற்றது. 32 பதிவு செய்யப்பட்ட கழகங்கள் பங்குபற்றிய இத் தொடரில் முதலாவது போட்டியில் உடுப்பிட்டி நவஜவன்ஸ் அணியையும் இரண்டாவது சுற்றில் நவிண்டில் கலைமதி அணியையும் காலிறுதியில் கரவெட்டி ஸ்பேர்ஸ் அணியையும் அரையிறுதியில் கரணவாய் கொலின்ஸ் அணியையும் 15 ஓவர்கள் கொண்டதாக நடத்தப்பட்ட இறுதிப்போட்டியில் கரவெட்டி மகேசன் அணியையும் வெற்றி கொண்டு சம்பியன் ஆனது கரவெட்டி ஞானம்ஸ். (க)

## பெற்றோல் குண்டு...





நடவடிக்கைகளும் இடம்பெற்றிருந்தன. மேற்படி தாக்குதல் சம்பவத்தில் குறித்த கடையில் பணியாற்றிய நல்லூர் அரசடி 5ஆம் ஒழுங்கையை சேர்ந்த கஜலக்சன் (வயது 26) மற்றும் அரசடி 3ஆம் ஒழுங்கையை சேர்ந்த பவிதன் (வயது 21) ஆகியோரே வாள்வெட்டுக்கு உள்ளான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, கந்தர்மடம் அரசடி வீதியில் உள்ள கடை ஒன்றினுள் இருவர் வேலை செய்து கொண்டிருந்துள்ளனர். இதன்போது மாலை 7.15 மணியளவில் 5 மோட்டார் சைக்கிள்களில் வந்த 10 பேர் திடீரென குறித்த கடை முனனால் மோட்டார் சைக்கிளை நிறுத்தி நோட்டமிட்டுள்ளனர்.

பின்னர் கடைக்கு முன்பாக அங்குமிங்கும் மோட்டார் சைக்கிள்களை செலுத்தியதுடன் திடீரென தாம் கொண்டுவந்த பெற்றோல் குண்டு ஒன்றை கடைக்குள் எறிந்துள்ளார் கள். இதனால் கடைக்குள் இருந்தவர்கள் அலறி கொண்டு வெளியே ஓடிவர வாசலில் நின்ற குறித்த சமூகவிரோத கும்பல் மேற்படி இருவர் மீதும் வாள்வெட்டு தாக்குதலை நடத்தியுள்ளது.

இவ்வாறு வாள்வெட்டு தாக்குதலை மேற்கொண்ட குழுவினர் பின்னர் அங்கிருந்து மின்னல் வேகத்தில் தப்பிச் சென்றுள்ளனர். இந்த தாக்குதல் நடைபெறும் போது நால்வர் கடையின் இரு பக்கங்களிலும் நின்றுள்ளனர். இவர்கள் கடைக்குள் யாரும் உட்செல்லாதவாறு பார்த்துக்கொண்டிருக்க ஏனையவர்கள கடை மீது பெற்றோல் குண்டினை வீசிவிட்டு கடைக்குள் இருந்தவர்கள் வெளியேற அவர்கள் மீதும் வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

சினிமா பாணியில் நடைபெற்ற இந்த சம்பவத்தினால் நேற்று இரவு முழுவதும் சம்பவம் நடைபெற்ற பகுதியில் பெரும் பதற்றம் காணப்பட்டது. பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து நிலைமைகளை கட்டுக்குள் கொண்டு வந்தனர். தாக்குதல் மேற்கொண்டவர்களின் மோட்டார் சைக்கிள்களின் இலக்க தகடுகள் மறைக்கப்பட்டு இருந்ததாகவும் முகங்கள் கறுப்பு துணிகளால் கட்டப்பட்டு இருந்ததாகவும் சம்பவ இடத்தில் நின்றவர்கள் வலம்புரியிடம் தெரிவித்தனர்.

குறித்த சம்பவத்தால் கடையில் இருந்த பொருட்களும் பல எரிந்து நாசமாகியுள்ளன. கடையில் தீ மேலும் பரவியதை அடுத்து யாழ்.மாநகர சபையின் தீயணைப்பு படைப்பிரிவிற்கு அறிவித்ததனை தொடந்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த தீயணைப்பு படைப்பிரிவினர் தீயை கட்டுக்குள் கொண்டுவந்தனர். காயமடைந்த இருவரும் அங்கு நின்றவர்களின் உதவியுடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

மேற்படி சம்பவம் தொடர்பில் நேற்று இரவு வரை யாரும் கைது செய்யப்படவில்லை என தெரிவித்துள்ள யாழ்.பொலிஸார், பெற்றோல் குண்டு வீசியமை, வாள்வெட்டுத் தாக்குதல் மேற்கொண்டமை தொடர்பிலான விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (செ-4,9,30)

## பாரிய இளைஞர்...

மல் ஆக்கப்பட்ட உறவுகளை மீட்டெடுக்கும் போராட்டத்தில் சாகும் வரையான உண்ணாவிரதம் இருந்து வந்த உறவினர்களுக்கு ஆதரவாக வடகிழக்கு எங்கும் பாரிய போராட்டங்களுக்கு இளைஞர்கள் தயாராகிக் கொண்டிருந்த வேளையில் அரசாங்கம் நன்கு திட்டமிட்டு எம்மவர்கள் சிலரின் ஆசீர்வாதத்துடன் போராட்டம் தடுக்கப்பட்டது ஒரு நாடகமே.

தமிழ்நாட்டில் ஜல்லிக்கட்டு தடையை நீக்கக்கோரி உலகெங்கும் எம் உறவுகளால், குறிப்பாக இளைஞர்களால் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்துக்கு ஈடு கொடுக்க முடியாமல் திணறிப்போய்,

இந்திய அரசு அடிபணிந்து தடையை நீக்கியது போல் வடக்கு கிழக்கு மாவட்டங்களில் போராட்டம் வீரியம் பெற்று இளைஞர் புரட்சிக்கு முகம் கொடுக்க நேர்ந்தால், உண்ணாவிரதிகள் மரணிக்க நேர்ந்தால் சர்வதேசத்துக்கு முன்னால் தலை குனிந்து நின்று பொறுப்புக் கூற வேண்டிய நிலை ஏற்படும் என அஞ்சியே அரசாங்கம் இந்த நாடகத்தை அரங்கேற்றியிருக்கின்றது.

மகனோடு தான் வருவோம் இல்லையேல பிணமாகத்தான் வருவோம் என உறுதியாகவும், தம்மை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லக்கூடாது என வைராக்கியத்தோடும் இப்போராட்டத்தில் ஈடுபட்ட பெற்றோர் இறுதியில் உறுதியற்றுப் போக எம்மவர்கள் சிலர் தமது அரசியல் வித்துவத்தைக் காட்டிதாம் வெற்றி பெற்றதாக எண்ணினால் அது துரோகத்தனமானது மட்டுமல்ல அரசியல் அறிவிலித்தனமுமாகும்.

எதுவானாலும் எமது உறவுகளின் பெற்றோரின் உயிர்கள் காப்பாற்றப்பட்டிருப்பது மகிழ்ச்சியானாலும் அவர்கள் நித்தமும் செத்துக் கொண்டிருக்கும் நிலைமைக்கு அரசாங்கம் உறுதியளித்ததன் பிரகாரம் எதிர்வரும் 9-ம் திகதி உரிய பதில்களை வழங்க வேண்டும்.

காணாமல் போனவர்கள் குறித்து பிரதம மந்திரி பாராளுமன்றத்தில் கூறியதையே அலரிமாளிகையிலும் கூறப்படும் என்றால் சந்திப்பொன்றுக்கான தேவை அவசியமாக இருக்காது,பொறுப்பான பதிலை நல்லாட்சியின் தலைவர்கள் வழங்க வேண்டும்.

மீண்டும் காலம் தாழ்த்துவதையோ, தட்டிக்கழிப்பதையோ, ஏமாற்று நாடகத்தை மீண்டும் அரங்கேற்ற முயற்சிப்பதையோ ஒரு போதும் ஏற்றுக்கொள்ளமுடியாது.

உரிய பதிலை அரசாங்கத்திடமிருந்து எதிர் பார்த்து நிற்கும் காணாமல்போனோரின் உற வுகளுக்கு ஆதரவாகவும், பக்க பலமாகவும் செயற்பட்டு தீர்வினைப் பெற்றுத்தர தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைமை அர்த்தமுள்ள, அவசர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதே சகலரினதும் எதிர்பார்ப்பாகும்.

நீதி கோரி நியாயம் தேடி வரும் உறவுகளின் உணர்வோடு தேசிய நல்லிணக்க அரசு விளையாட முனையக்கூடாது என குறித்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.(செ 4)

## நாட்டை பிரிக்க...

சுட்டிக்காட்டியுள்ளார்.

அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தொடர்ந்து கருத்து வெளியிடுகையில், புதிய யாப்பின் ஒரு சரத்தேனும் எழுதப்படவில்லை, எனினும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாட்டை பிரிக்கப்போவதாக கூறுகின்றார். இனவாதத்தை தூண்டிவிடுவதற்கே இவ்வாறான கருத்துக்களை வெளியிடுகின்றார். இரண்டு தேர்தல்களில் தோல்வியடைந்த ஒருவர் கொஞ்சம் அமைதியாக இருப்பதைவிடுத்து தேவையற்ற நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றார்.

13ஆவது திருத்தத்திற்கு அப்பால் சென்று தீர்வினை வழங்க வேண்டுமென அவரே முதலில் கூறினார். மகிந்த ராஜபக்ஷவின் பிரஜாவுரிமையை மக்கள் இரண்டு தேர்தல்களிலும் இல்லாமல் செய்துள்ளார்கள். அதனை விடவும் செய்வதற்கு ஒன்றுமில்லை. ஐக்கிய தேசியக் கட்சி அதிகாரத்தில் இருப்பதை அவர்களால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை.

கடந்த காலங்களில் மனித உரிமைகள் பேரவையில் முழு நாளும் பேசுவார்கள். குற்றச் செயல்கள், படுகொலைகள், மனித உரிமை மீறல்கள் தொடர்பில் கலந்துரையாடுவார்கள் எனினும் தற்போது 15 நிமிடங்களே ஒதுக்குகிறார்கள். இதற்கு காரணம் நல்லாட்சி அரசின் பெறுதியான நடவடிக்கையே என அமைச்சர் கிரியெல்ல தெரிவித்தார். (செ-11)

## கொலை அச்சுறுத்தல்...

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஒன்றிணைந்த எதிர்க் கட்சி தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு நிகழ்ச்சி நிரலை தயாரித்துவரும் மேற்குலகிலுள்ள தமிழ் பிரிவினைவாதிகளே நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுக்கும் வித்தியாசமான கதாபாத்திரத்தை வழங்கியிருப்பதாகவும் அந்தக் கட்சி குறிப்பிட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான விமல் வீரசன்சவின் கட்சியான தேசிய சுதந்திர முன்னணி கொழும்பில் நேற்றைய தினம் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை ஏற்பாடு செய்திருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரனைக் கொலை செய்ய சதித் திட்டம் தீட்டப்பட்டுள்ளதாக இந்தியாவிலிருந்து வெளிவரும் த ஹிந்து ஊடகம் புலனாய்வுப் பிரிவினரை மேற்கோள்காட்டி செய்தி வெளியிட்டிருந்தது.

இதனையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனின் பாதுகாப்பை அதிகரிப்பதற்கு பாதுகாப்பு பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது.

அத்துடன் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனுக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்க முயற்சித்த குற்றச்சாட்டின்பேரில் கிளிநொச்சி, மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த முன்னாள் போராளிகள் ஐவர் அண்மையில் பாதுகாப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் கூறப்பட்டது.

இந்த நிலையில் நேற்றைய தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட தேசிய சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீரவிடம் இதுதொடர்பாக ஊடகவியலாளர்கள் வினவினர்.

இதன்போது கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர, புதிய அரசியலமைப்பைக் கொண்டுவந்து நாட்டை பிளவுபடுத்த முனைவதாக ரணில் முயற்சிக்கின்றார் என்றும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அந்த முயற்சியை தடுத்தார் என்று ஒரு நாடகத்தை அரங்கேற்றுகின்றனர். கொண்டுவரவுள்ள 20ஆவது அரசியலமைப்பில் பௌத்த மதத்திற்கான இடம் ஐக்கிய இலங்கை போன்ற பேச்சுக்களுக்கு இடமில்லை. இந்த நிலையில் சிங்கள பௌத்த வாதிகள் என்ற போர்வையில் செயற்படும் சம்பிக்க ரணவக்க போன்றவர்கள் இதனை சந்தர்ப்பமாக பயன்படுத்த முடியும், இந்த நாடகத்திற்கு ஏற்ற வகையில் சம்பிக்க ஓர் ஆடையையும், ரணில் இன்னுமோர் ஆடையையும், மைத்திரி மற்றொரு ஆடையையும், 13 ஆவது திருத்தத்தை பலப்படுத்துவோம் எனத் தெரிவிக்கும் நிமல் சிறிபால டி சில்வா வித்தியாசமான ஆடையையும், தமிழ் இனவாதிகள் மற்றும் முன்னாள் போராளிகளிடம் இருந்து அச்சுறுத்தல் எனக் கூறி சுமந்திரன் புதிய ஆடை ஒன்றையும் இந்த நாடகத்திற்கு ஏற்றாற்போல அணிந்துகொள்கின்றனர். ஆனால் நாடகத்திற்கான நிகழ்ச்சி நிரல்கள் யாவும் மேல்குலகில் உள்ள தமிழ் பிரிவினை வாதிகளினால் தயாரிக்கப்பட்டதாகும். இந்த நிகழ்ச்சி நிரலைத் தயாரிப்போர் ஆர்.சம்பந்தன், விக்னேஸ்வரன், ரணில் விக்கிரமசிங்க, மைத்திரிபால சிறிசேன, எம்.ஏ.சுமந்திரன், சம்பிக்க ரணவக்க உள்ளிட்டோருக்கு வித்தியாசமான கதாபாத்திரங்களை தயாரித்து வழங்குகின்றனர். அதற்கமையவே நாடக மேடைக்கு ஏறி மக்களை ஏமாற்றுவதற்கு தனது திறமைகளை வெளிப்படுத்துகின்றனர். எனினும் நாங்கள் விழிப்பாக இருக்கின்றோம். அதனால் சுமந்திரன் தனது நாடகத்தை சரிவர அரங்கேற்ற தவறிவிட்டார். நாட்டு பற்றுடையோரின் உயிர்மூச்சு உள்ளவரை அவர்களது நாடகம் வெற்றியளிக்காது என ஜயந்தசமரவீர தெரிவித்தார். (செ-11)

## ட்ரம்பின் நடவடிக்கை...

என முன்னாள் இராஜதந்திரியும் அரசியல் விமர்சகருமான கலாநிதி தயான் ஜய திலக்க தெரிவித்துள்ளார்.

தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்க உதவி இராஜாங்க செயலாளர் நிஷா பிஷ்வால் மற்றும் ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கான அமெரிக்காவின் தூதுவர் பதவியிலிருந்து சமந்தாபவர் ஆகியோர் நீக்கப்பட்டமை குறித்து கருத்து வெளியிடுகையில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இலங்கையின் மனித உரிமைகள் மீறல்கள் குறித்து கருத்து வெளியிட்ட அவர் இந்த அதிகாரிகளின் பதவி நீக்கப்பட்டமை இலங்கைக்கு கிடைத்த சிறந்த வாய்ப்பாகும். டிரம்ப் இலங்கை தொடர்பில் தெளிவான ஒரு கருத்தை வெளியிடவில்லையாயினும், அவருடன் அரசாங்கம் சிறந்த முறையில் நல்லுறவு பாராட்ட வேண்டும் எனவும் தயான் ஜய திலக்க மேலும் கூறியுள்ளார். (செ-11)

## அரசாங்கம்...

மன்னார் வட்டக்கண்டல் கிராமத்தில் இடம்பெற்ற படுகொலையினை நினைவு கூறும் வகையில் 32ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று திங்கட்கிழமை காலை மன்னார் வட்டக்கண்டல் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் அனுஷ்டிக்கப்பட்டது: இதன் போது விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் அவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

கடந்தகாலங்களைவிட இன்றுஒருநிலைமை இருக்கின்றது. இன்று இருக்கின்ற இந்த சுதந்திரம், இன்று நாங்கள் ஏதோ விடுதலை அடைந்து விட்டோம் என்ற ஒரு நிலைப்பாட்டிலே சிலர் இன்றைய நிகழ்வில் கருத்துக்களை வெளியிட்டுள்ளமையினை நான் கேட்கக்கூடியதாக இருந்தது. ஆனால்உண்மை அது அல்ல.அது ஒரு மாயை. மாவீரர் துயிலும் இல்லங்களில் இம்முறை மாவீரர்களை நினைவு கூர்வதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கி விட்டது.

ஆகவே நாங்கள் சுதந்திரமாக மாவீரர் துயிலும் இல்லங்களிலே சென்று எமது கவலைகளை கொட்டித்தீர்க்கலாம் என்று நாங்கள் நினைக்கின்றோம். உண்மை அதுவல்ல.

அரசாங்கம் திட்டமிடுகின்றது. அரசாங்கம திட்டமிட்டு எங்களுக்குள்ளேயே பிழவுகளை அல்லது இப்படியான ஒரு போலியான சுதந்திரத்தை அல்லது அமைதியான ஒரு நிலைமையை எங்களுக்குள் கொண்டு வந்து எமது சமூகத்தினுள் அல்லது வட கிழக்கு தாயக பிரதேசத்தினுள் கொண்டு வந்து அந்த மாயைக்குள் எங்கள் மக்களை தள்ளிவிட்டு அதனூடாக எங்களுடைய நிரந்தரமான எமது பிரச்சினைக்கு தீர்வு காண்பதிலே ஒரு இழுத்தடிப்பு அல்லது இல்லாமல் செய்ய வேண்டும் என்ற ஒரு நோக்கம் அங்கே மறைந்திருக்கின்றது. இதுதான் உண்மை ஆனால் பலருக்கு தெரிவதில்லை.

உங்களுக்குத் தெரியும் நீங்கள் அறிந்திருப்பீர்கள் அல்லது சமூக வலைத்தளங்க ளில் பார்த்திருப்பீர்கள் கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர் தின நாற்களுக்குப்பிற்பாடு இடம் பெற்ற சம்பங்கள் உங்களுக்கு தெரியும்.

எங்கள் சமூகத்திலேயே மாவீரர்களின் குடும்ப உறவுகளையே பிரித்தாண்டு அங்கு ஒரு சாரர் மாவீரர்களுக்கு நினைவுக்கட்டிடம் அல்லது தூபிகள் கட்ட வேண்டும் என்கின்ற போது இன்னோர் சாரர் அதனை தடுக்கின்றனர். அதிலே இரண்டு சாராருக்கும் ஆதரவாகவும், எதிராகவும் அதிகாரிகள் செயற்படுகின்றனர். இந்த பிளவுதான் அரசாங்கத்திற்கு தற்போதைக்கு தேவை.

அதே போன்று தான் அண்மையில் முல்லைத்தீவிலே சிலை ஒன்று வைப்பதில் பிரச்சினை. அதனை உடைத்ததிலும் ஒரு பிரச்சினை. இதனை யார் செய்கின்றார்கள் சொலவதற்கு வெட்கமாக இருக்கின்றது என அவர் தனது சபையில் குறிப்பிட்டுள்ளார். (செ-4)


## பதவி வெற்றிடம்

- செய்தியாளர்கள் (இருபாலாரும்)
- கணனி தமிழ் ரைப்பிங் மற்றும் பக்க வடிவமைப்பு (இருபாலாரும்)
- விளம்பர வடிவமைப்பு (இருபாலாரும்)

தகைமையும் தொடர் சேவையும் பத்திரிகைத்துறை விருப்பமும் கொண்டவர்கள் தமது சுயவிபரம் அடங்கிய விண்ணப்பத்துடன் 01.02.2017 புதன் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு வலம்புரி அலுவலகத்துக்கு நேரில் வரவும்.

இல.3, 2-ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே : 021 567 1532

பொது முகாமையாளர்,
வலம்புரி

கனடாவில் படிக்க, உழைக்க, நிரந்தரமாக குடியேற

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தக கண்காட்சி

காட்சி அறை இலக்கம் - 185

நேரடியாக எம்மை சந்தியுங்கள்
(27,28,29)-01-2017

V4 EDUCATIONAL CONSULTANCY

0768226236 /0768226240



விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு

UK-550*/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS

V2 TRAVELS-0768226240

- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை


## கோர விபத்தில்...

கிடைப்பட்டவர்கள் என்று உறவினர்கள் தெரிவித்தனர். காயமடைந்தவர்கள் கல்முனை அஷ்ரப் ஆதார வைத்தியசாலையில் அனும திக்கப்பட்டுள்ளனர். அதில் ஒருவரின் கை துண்டாடப்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து ஒலுவில் பாலமுனை நோக்கிச் சென்ற வான் இலங்கை போக் குவரத்து சபைக்கு சொந்தமான கல்முனை சாலை பேருந்துடன் மோதியதனாலேயே இவ் விபத்து நிகழ்ந்துள்ளது.

படுகாயமடைந்தோருக்கு மேலதிக சிகிச்சை கள் வழங்கப்படுவ தாக வைத்தியசாலையில் தெரிவிக்கப்பட்டது. இச்சம்பவம் குறித்து கல் முனை பொலிஸார் தீவிர விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். (இ-5)


Visa தேவை

இத்தாலி Work Permit Visa அல்லது Visit வீசா வைத்திருப்பவர்கள் தொடர்புகொள்ளவும்.

077 697 4852



# பதினைந்தாம் ஆண்டு நினைவலைகள்

## மண்கும்பானின் மைந்தன்

## அமரர் ஐயம்பிள்ளை நடராசா

(உரிமையாளர் - நியூ மைதிலி ஜுவலர்ஸ்)





மலர்வு 14.04.1947 உதிர்வு 17.01.2002

திதி: தைமாத வளர்பிறை சதுர்த்தி (31.01.2017)

எம் நினைவோடு நினைவாகி
கனவோடு கனவாகி
உணர்வோடு உணர்வாகி
உயிரோடு உயிராக கலந்த
எம் தெய்வமே! அப்பாவே!
எமக்குத் துணையாய் ஆதரவாய்
சிறந்த வழிகாட்டியாய்
என்றும் எம்முடன் வாழும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்...!

அன்னாரின் நினைவையொட்டி இன்று (31.01.2017) செவ்வாய்க்கிழமை சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகத்திலுள்ள வாழ்வகத்தில் இடம்பெறும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- குடும்பத்தினர் : மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.



நியூ மைதிலி ஜுவலர்ஸ் (ந.கஜந்தன்)
38, 40, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 7878, 021 221 7877

(சி-7414)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.01.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.